
கல்கி
KALKI 13.11.94 ரூ. 3.00
போட்டோவில் சிரிப்பு;
மேடையிலே போட்டி?

ஸ்ரீ கந்தசுவாமி பர்மனெனட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990

பதிவு அலுவலகம் : 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

கிளை அலுவலகம் : 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. போன் : 459569



கந்தகோட்டம்
ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி

பிக்சட் டிபாசிட்

46 நாள்	3 மாதம்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு ★
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ. 50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ. 25,000	60 மாதம்	ரூ. 70,000

குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை வைப்புத் தொகை ரூ. **5,100/-** 3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ. **500/-** பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ. **1,000/-** வீதமும், 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ. **75,000/-**ம் வழங்கப்படும். நலத்திட்டத்தின் **5%** மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ. **25,000/-** பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்

கனகதாரா டிபாசிட்

ரூ. **50,000/-** முதலீடு செய்வீர்
10 ஆம் ஆண்டு முடிவில் ரூ. **50,000/-** பெறுவீர்
அடுத்த 20 ஆம் ஆண்டு முடிவில்
ரூ. **1 கோடி** பெறுவீர்

காமதேனு மாபெறும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும்தொகை	10-ம் ஆண்டு நீங்கள் பெறும்தொகை	15-ம் ஆண்டு பெறும்தொகை
Rs. 6,320	Rs. 6,000	Rs. 6,000	Rs. 56,320

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ. **3,450/-** செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில்
ரூ. **2** லட்சம் பெறுவீர்.

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs. 7,500	15 Yrs.	Rs. 1,25,000
Rs. 9,000		Rs. 1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ. 100/-	25 Yrs.	Rs. 3,00,000

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்.

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs. 1,000	Rs. 1,184	Rs. 1,430	Rs. 2,000	Rs. 2,535

பென்ஷனர் நலத்திட்டம் **20% P.a.** ★
ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

சேமிப்பு திட்டம் 10% P.a.
H.O. Friday Holiday
B.O. : Tuesday Holiday
பங்குதாரர்களுக்கு மட்டும்

தங்க நகை கடன்
Rs. 3,000 PER 10 GRAM
வீதேனின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)



சேர்மன் :
P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
ஸ்ரீ கந்தகோட்டம்,
சென்னை - 600 003.

இயக்குநர்கள் குழு


R. விவேகானந்தன் B.Com.,
V. சண்முகவடிவு B.A.,
A. சுப்பிரமணியன்
V. விஜயகோபால் B.Com., D.C.P.
M. ராஜேந்திரன்
P. ஏகாம்பரம்

பாதுகாப்பு பெட்டகம் குறைந்த வாடகைக்கு கிடைக்கும்.






வெங்காயம் விலை ஏறினாலும் ஏறிச்சு மசால் வடைல டேஸ்டே இல்ல...



"சாதா இட்லியா? ஸ்பெஷல் இட்லியா சார்?"

"அது என்னப்பா ஸ்பெஷல் இட்லி?"

"அதுக்கு மட்டும் தொட்டுக்க வெங்காய சட்னி உண்டு...."



காய்ச்சலோடு ஒரு கின்னஸ் சாதனை!

சாதனை :

1182 செங்கற்களை எட்டே நிமிடத்தில் உடைத்தது!

லயோலா கல்லூரியின் பெர்ட்ராம் ஹாலில், சமூகவியல் மாணவர் பிரசாந்த் கிருபா, அக்டோபர் 26 ஆம் தேதி நிகழ்த்திய சாதனை, கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறப் போகிறது.

இதற்கு முன் 1011 செங்கற்களை, ஹூசேனி என்பவர் உடைத்திருக்கிறார். சென்னையில்தான். ஆனால் 14 நிமிடங்கள் எடுத்துக் கொண்டார் ஹூசேனி.

பிரசாந்த், கராத்தே மணியிடம் ஒன்றரை வருடங்கள் பயிற்சி பெற்றவர். 'கொடுடோ' என்னும் டிஃபென்ஸ் முறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். "என்னுடையது ஷிடோபேடோ ஸ்டைல். மொத்தம் உள்ள நாலு வகைகளில் இது ஒன்று. இதிலிருந்து பிரிந்தவைதான் மற்றவை!" என்கிறார்.

பிரசாந்த் ஹை ஜம்பிலும், 1500 மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும் மாவட்ட அளவில் பங்கு பெற்ற சாம்பியன்.

சாதனை நிகழ்த்திய அன்றே, மேடையில், பிரசாந்துக்கு பிளாக் பெல்ட் கொடுத்தார் அவரது கிராண்ட் மாஸ்டர் மோசஸ் திலக். 'டய் சென்காய்' தகுதி பெற்றவராம் மோஸஸ் திலக். "இது இந்தியாவிலேயே அதிகபட்ச டிகிரி. செவன்த் டிகிரி என்பார்கள்!"

24 ஆம் தேதியும், 25 ஆம் தேதியும் பிரசாந்துக்கு எக்கச்சக்கக் காய்ச்சல்.

26 ஆம் தேதி நிகழ்ச்சியை நடத்த முடியுமா என்று சந்தேகமாகக் கூட இருந்தாராம்.

26 ஆம் தேதி 1182 செங்கல்லையும் உடைக்கும்போது பிரசாந்துக்கு 104 டிகிரி காய்ச்சல்!

"அடுத்த ஒலிம்பிக்குக்குள் உன்னை இன்னும் நன்றாக டிரெயின் பண்ணி அனுப்புகிறேன்!" என்று சொல்லியிருக்கிறாராம் கிராண்ட் மாஸ்டர் டய் சென்காய் மோசஸ் திலக்.

பிரசாந்துக்கு எக்கச்சக்க காய்ச்சல். நிகழ்ச்சி நடக்குமா?

மாணவர்களின் சாதனைகள், வேதனைகள், சோதனைகள், கற்பனைகள் இப்பகுதிக்கு வரவேற்கப்படுகின்றன...

— சித்தார்த்

புகைப்படம் : பாலாஜி

"என் புருஷன் அரவிந்த் சுவாமி மாதிரி அழகா இருப்பான்..."

"ஆமா, நீ பெரிய மிஸ் யூனிவர்ஸ்னு நினைப்பா! உன் மூஞ்சிக்கு ஏதாவது ஆதிவாசி குடியிருப்புலதான் ஆள் தேடணும்..."

"என் மூஞ்சி நல்லாத்தான் இருக்கு. உன் மூஞ்சிதான்..."

"எப்பவாச்சும் கண்ணாடில உன் முகத்தைப் பார்த்திருக்கியா? பார்த்திருந்தா இப்படிப் பேச மாட்டே!"

"நீதான் அசிங்கம்; உன் ட்ரெஸ் அசிங்கம்! உன் மேக்-அப் அசிங்கம்! உன் எலிவால் தலைமுடி அதைவிட அசிங்கம்!"

- இரண்டு சகோதரிகளுக்கு இடையே நடந்த உரையாடல்தான் இது.

"இன்னிக்கு அஞ்சுவோட ரிசப்ஷனுக்குப் போகணுமில்ல? என்ன உடுத்திக்கப் போறே?"

"தெரில... பச்சை சல்வார் போட்டுக்கலாம்னு பாக்கறேன்..."

"ஐயோ! வேண்டாண்டி! அது பழைய லுக் அடிக்குது. என் பிங்க் பட்டு தரேன். அதைக் கட்டிக்கிட்டுப் போ... கிராண்டா இருக்கும். உனக்குதான் என்னை விட பிங்க் அதிகமா 'சூட்' ஆகுது..."

"நீ அதைத்தானே நாளைக்கு 'காலேஜ் டே'க்குக் கட்டிக்க வைச்சிருந்தே..."

"பரவால்லைடீ! நீயே கட்டிக்கோ நாளைக்கு நான் வேற ஏதாவது பார்த்துக்கறேன்."



சகோதரிச் சுவை!

அவர்களுடைய 'நல்லுறவு' தொடரட்டும் என்கிற நல்ல எண்ணத்தினால் அவர்கள் பெயர்களைச் சொல்லப் போவதில்லை!

சற்று யோசித்துப் பாருங்கள். சொந்த அக்கா - தங்கை தவிர வேறு யாராவது இந்த மாதிரி பேசிக் கொள்ள முடியுமா? ஃப்ரெண்ட்ஸ்...? எவ்வளவுதான் நெருங்கின தோழிகளாக இருந்தாலும் இவ்வளவு அந்நியோன்னியமாக ஒருவரை ஒருவர் கரித்துக் கொட்ட முடியாது. அதே தீவிரத்தோடு ஒருவரை ஒருவர் நேசித்து விட்டுக் கொடுக்கவும் முடியாது :

- இந்த உரையாடலும் முன் சொன்ன அதே சகோதரிகளுக்கு இடையேதான் நடந்தது என்றால் நம்புவீர்களா...?

இதுதான் 'சகோதரிச் சுவை' - விவரிக்க முடியாத அன்பு + பாசம் + பெருமை x போட்டி + கேலி + பொறாமை.

சின்ன வயதில் நெகடிவ் உணர்வு தூக்கலாக இருக்கிறது. போகப் போக பாஸிடிவ் உணர்வு மேலெழுந்து மற்றவை அடங்கிப் போகிறது.

இந்தச் சகோதரிச் சுவையைப் பற்றி சில சகோதரிகள் என்ன சொல்கிறார்கள்?

மேடையில் கர்நாடக இசைக் கச்சேரிகள் செய்யும் ஷண்முகப்ரியா - ஹரிப்ரியா சகோதரிகளில் (அட்டைப் படம்) இளையவரான ஹரிப்ரியா சொல்கிறார் :

"எங்கிட்டே இருக்கற பிளஸ், மைனஸ் பாயின்டுகள் என்னன்னு தெரியறது போல புஜி (ஷண்முகப்ரியா) கிட்டே இருக்கற பிளஸ் மைனஸ்ஸும் எனக்கு நல்லாவே தெரியும். அதுனால அவளை யாராவது தனியா பாராட்டினாலும் அதுல எனக்குச் சந்தோஷம் தான். ஆனா அப்படி தனியா பாராட்டற சந்தர்ப்பங்களே ரொம்பக் குறைவு..."

இவருக்கு ஒரு மனக்குறையும் இருக்கிறது. "குடும்ப விஷயங்களைப் பற்றிப் பேசும் போது அப்பா, மூத்தவங்கற முறையில், அவளிடம்தான் ஆலோசனை கேக்கறார். நான் எத்தனை நாளைக்குச் சின்னப் பொண்ணாவே இருக்கறது...?" என்கிறார்.

"சின்னிக்கு நான்தான் ட்ரெஸ், நகை எல்லாமே செலக்ட் பண்ணுவேன். என் செலக்ஷனை ஒருபோதும் 'பிடிக்கலை'ன்னு அவ சொன்னதே கிடையாது" என்கிறார் ஷண்முகப்ரியா.

"அதெல்லாம் இருக்கட்டும், மேடையில் பாடற போது ஒருத்தரை ஒருத்தர் மிஞ்சிடணும்னு தோணாதா...?" என்று கேட்டால் இந்தச் சகோதரிகள் ஆச்சரியப் பார்வை பார்க்கிறார்கள்.

"ஒருத்தர் பாடறதுலேருந்து இன்னொருத்தருக்கு வேகம், கற்பனை பிறக்கும். அது ரொம்ப இயல்பு. ஆனா அது மேடையோட சரி" என்கிறார்கள்.

மாடலிங் சகோதரிகளான வர்ஷா-சுனிதாவும் "நோ பிராப்ளம்ஸ்" என்றுதான் சொல்கிறார்கள்.

"நான் குறைச்சலா சம்பாதிச்சா என்ன...?-பணம் வேணும்னா அவகிட்டே கேட்டு வாங்கிக்குவேன்" என்கிறார் வர்ஷா.

சரி, அக்கா ஓர் அளவுக்குப் பிரபலமாகி விட்ட பாடகி, தங்கை சராசரி. இந்த காம்பினேஷனில் உள்ள சங்கீதா சௌம்யா சகோதரிகள் உறவு எப்படி?

"நிறைய சண்டை போடுவோம். ஆனா, எல்லாமே அச்சுபிச்சு சண்டை தான். மற்றபடி நாங்க ரொம்ப நெருக்கம். சங்கீதா கல்யாணமாகிப் போயிட்டா அந்தத் தனிமையை எப்படித் தாங்குவேன்னு தெரியலை" என்கிறார் சௌம்யா.

"தீபாவுக்கு கல்யாணமாயிட்டா நான் தினமும் அவ வீட்டுக்குப் போவேன். அவளைப் பார்க்காம எப்படி இருக்கறது?" - இது தங்கை சித்ரா.

"கல்யாணத்தினால் பிரிவு ஒரு பக்கம் இருக்க, பொறாமையும் இருக்கிறது. என் அக்கா அர்ச்சனாவுக்குக் கல்யாணம் ஆனப்போ எனக்கு ரொம்ப பொறாமையா இருந்தது" என்கிறார் மீரா. "ஆமாம்! என்னை அப்பா - அம்மா ஓரங்கட்டி வைச்சுட்ட மாதிரி உணர்வு ஏற்பட்டுது" என்கிறார் அர்ச்சனாவின் இன்னொரு தங்கை மீனா. ஆனால் அர்ச்சனாவின் கல்யாணத்துக்குப் பிறகு மீராவும் மீனாவும் முன்னை விட நெருங்கி வந்து விட்டதாகவும் சொல்கிறார்கள்.

"அக்காவுக்குக் கல்யாணத்துக்கு என்னெல்லாம் செஞ்சியோ அதெல்லாம் ஒண்ணு விடாம எனக்கும் செய்யணும்"னு சம்பந்தி போல 'கண்டிஷன்' போடும் தங்கைகளும் உண்டு.

அப்பா, அம்மா கஷ்டத்தைப் புரிஞ்சுக்காம இப்படியும் பெண்கள் இருப்பார்களா என்று ஆச்சரியப்பட்டு மனோதத்துவ டாக்டர் பத்மாவதியிடம் கேட்டோம்.

"Sibling rivalryன்னு ஆங்கிலத்துல



• ருக்கு, சியாமளா, கமலா

சொல்வோம். இது உடன் பிறந்த குழந்தைங்களிடையே சின்ன வயசுல இருக்கிற பொறாமை. பொம்மைக்காகச் சண்டை போடறது; அடிச்சுக்கறது; தங்கை பாப்பா பிறந்ததும் அம்மாவையே புறக்கணிக்கறது - இதெல்லாம் அந்தப் பருவத்துல எதிர்பார்க்கக்கூடிய 'நார்மல்' விஷயங்கள். பொறாமைங்கறது ரொம்ப அடிப்படையான மனித உணர்வு. நல்ல சிந்தனை, பரந்த மனசுன்னு வளர்த்துக்கிட்டு அதை நாம பின்னுக்குத் தள்றோம். அப்படி தள்ளித் தவறிடறவங்களும் இருக்காங்க. அப்படிப்பட்டவங்கதான் சொந்த அக்கா - தங்கையைப் பார்த்தே கூட பொறாமைப்படுவாங்க" என்றார் டாக்டர் பத்மாவதி.

"ஒரே தொழிலில் (புடைவை டிசைன் செய்து விற்பது) ஈடுபட்டிருந்தாலும் எங்களுக்குள் சண்டை வரதில்லை" என்கிறார்கள் ருக்கு, கமலா, ஷ்யாமளா சகோதரிகள். "எல்லா அக்கா - தங்கைகள் மாதிரிதான் நாங்களும். நிறைய வாக்குவாதம் செய்வோம்; ஆனா சண்டை கிடையாது."

"எங்களுக்குச் சண்டை வரதே டிரெஸ்களைப் பங்குபோட்டுக்கறதாலதான். என் தங்கை மீரா என் துணிகளை உடுத்திட்டுப் போயிட்டு அழுக்கு பண்ணிடுவா, இல்லை கிழிச்சிடுவா!" என்கிறார் மீனா.

மீராவோ, "அவளை மாதிரி எப்பவும் பொம்மையாட்டமா உட்கார்ந்திருக்க என்னால முடியாது. காலேஜுக்குப் போனா ஜாலியா இருப்பேன்; அங்க இங்க உட்காருவேன். அழுக்கு படத்தான் செய்யும்; அவ அப்படித்தான் அனாவசியமா சலிச்சுப்பா" என்று அக்காவைச் சாடுகிறார்.

அப்படியானால் ஏன் டிரெஸ்களைப் பகிர்ந்துக்கணும்?

"ஆளுக்குப் பத்து டிரெஸ்னு வைச்சுக்குங்க. அதையே பகிர்ந்துகிட்டா இருபது கிடைக்குதில்ல... 'வெரைட்டி'க்காகத்தான்!" என்கிறார்கள் சகோதரிகள்.

வழக்கமாக அக்கா - தங்கைக் கிடையே பிரச்னை வருவது பெற்றோர்கள் அவர்களை ஒப்புநோக்கி கமெண்ட் அடிப்பதால்தான். சகோதரிகள் ஒரே ஸ்கூல்/காலேஜில் படித்தால் அதையே ஆசிரியர்கள் செய்து



> **அடுத்த இதழில்...**
>
> ●● **'ஸ்டில்' எடுக்கச் சொல்லித் தருகிறார் ஸ்ரீராம்!**
>
> ●● **எம். டி.வி.யில் வராத மேற்கத்திய இசை!**

'புண்ணியம்' கட்டிக் கொள்வதுண்டு. நேஷனல் ஆங்கிலப் பள்ளி ஆசிரியை லக்ஷ்மி, இப்படி ஒப்புநோக்கியதால் ஒரு பெண் நன்றாகப் படித்து முன்னுக்கு வந்ததாகச் சொல்கிறார். ஆனால் வேறொரு சந்தர்ப்பத்தில் ஒரு பெண், "நான் என் அக்கா ஆக முடியாது; நான் நானாகத்தான் இருப்பேன்" என்று பதில் சொல்லித் திணறடித்து விட்டாளாம்.

எல்லாவற்றையும் விட ஜோரானது கீதா, சூர்யா, மஞ்சுளா சகோதரிகளின் எதிர்காலக் கனவுதான். எழுத்தாளர், டாக்டர், கார்டூனிஸ்ட் என்று தத்தமது வேலைகளில் மூவரும் படு சீரியஸாக இப்போது ஈடுபட்டிருக்கிறார்கள்.

"நாங்க ரிடயரானதும் திரும்பவும் ஒண்ணா வாழப் போறோம். யாருமே நெருங்க முடியாத ஒரு அழகான தீவுல எங்களுக்குப் பிடிச்ச நாய், பூனை, புத்தகங்கள், பாட்டு... எல்லாம் சூழ... நாங்க மட்டும் எங்க ராஜ்ஜியத்துல..." - இப்படி ஒற்றுமையா இன்பக் கனவு காணும் சகோதரிகள் இப்போதைக்கு ஞாயிறுதோறும் சந்தித்துக் கொள்கிறார்கள். "இந்த சந்திப்புகள்ல விவாதங்கள் தாராளமா நடக்கும்; காரணம் நாங்களும் சராசரி சகோதரிகள்தானே!"

பேட்டிகள் : **சந்தியா ஸ்ரீதர், நிர்மலா சக்ரவர்த்தி**

அட்டை வண்ணப்படம், படம் : **யோகா**

எம்.ஜி.ஆர். உயில்:

கனவு நனவானது!



அந்த இரண்டு வயதுக் குழந்தையைப் பரிசோதித்த ஜி.ஹெச்.சின் காது, மூக்கு, தொண்டை மருத்துவர், "இதோ பாரும்மா! இந்தக் குழந்தைக்குக் காது கேட்கிற சக்தி ரொம்ப குறைச்சலா இருக்கு!" என்ற போது தனக்கு என்ன குறை என்றே தெரியாத அந்தக் குழந்தை அப்பாவியாய் பார்த்துக் கொண்டிருக்க, தாய்க்கு ஷாக்.

டாக்டர் தொடர்ந்தார் : "நல்ல காலம்! இப்பவே இந்தக் குழந்தையை எங்ககிட்டே கொண்டு வந்திங்க! முறையான பயிற்சி கொடுத்தா, நல்ல முன்னேற்றம் இருக்கும்."

அந்த டாக்டர் அத்துடன் நிற்காமல், உடனடியாய் எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்டத்தில் நடத்தப்படும் "டாக்டர் எம்.ஜி.ஆர். செவித்திறன் குறையுடையோர், பேச இயலாதோர் பள்ளி"யில் சேர்க்கும்படியும் அறிவுரை கூறினார்.

அந்தக் குழந்தை உடனடியாய் எம்.ஜி.ஆர். பள்ளியில் சேர்க்கப்பட்டது. இரண்டு வார கால தீவிர பயிற்சிக்குப் பின் முதன் முதலாய் கஷ்டப்பட்டு, 'அம்மா' என்று அரை குறையாய்க் கூறிய போது, அதன் தாய் மகிழ்ச்சி தாளாமல், ஆனந்தக் கண்ணீர் வடித்து, குழந்தையை வாரி அணைத்துக் கொண்டாள்.

இந்தக் குழந்தையைப் போல நூற்று இருபது குழந்தைகள். அனைவரும் செவித்திறனிலும், பேசுதலிலும் குறையுடையவர்கள். எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்டப் பள்ளிக் கூடத்தில் பயில்கிறார்கள்.

ஒரு ஃபிளாஷ் பாக் :

மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். 87 ஜனவரியில், ஒருநாள் சென்னை நகரத்தின் முன்னணி வக்கீலும், தனக்கு மிகவும் நெருங்கியவருமான என். சி. ராகவாச்சாரியை தம் ராமாவரம் தோட்டத்துக்கு வரவழைத்தார். தம் உயிலைத் தயாரிக்கும் பணியை அவரிடம் ஒப்படைத்தார். உயில் தயாரானதும், சட்டப்படி அது பதிவு செய்யப்பட்டது.



• காது கேளாத, பேச இயலாக் குழந்தைகளுக்கு...



• என். சி. ராகவாச்சாரி



• லதா ராஜேந்திரன்

எம்.ஜி.ஆர். மறைந்த பின், சில மாதங்கள் கழிந்து, என்.சி. ராகவாச்சாரி உயிலில் இடம் பெற்றுள்ள விவரங்களை வெளியிட்டார்.

எம்.ஜி.ஆர். தம் உயிலில் இரண்டு முக்கியமான விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார். ஒன்று, தன்னுடைய ராமாவரம் தோட்டத்தினுள் (பரப்பளவு ஏழு ஏக்கர்) காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோருக்கான பள்ளி ஒன்று துவங்க வேண்டும் என்பது. அத்தகைய குழந்தைகளுக்கு வெறும் பாடம் மட்டும் போதிக்காமல், முறையான பேச்சுப் பயிற்சி அளிக்கவும், ஹியரிங் எய்ட் போன்ற கருவிகளை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர் விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர். உயிலில் குறிப்பிட்டிருக்கும் இரண்டாவது முக்கிய விஷயம், சென்னை தி.நகர் ஆற்காடு

ரோடில் இருக்கும் எம்.ஜி.ஆரின் இல்லத்தை 'நினைவகமாக' மாற்றியமைப்பது.

"அண்ணா, காமராஜர் நினைவில்லங்கள் அமைக்க அரசாங்கம் பணம் செலவழித்தது போல, தம்முடைய நினைவில்லத்துக்கு அரசாங்கம் பணம் செலவழிக்கக் கூடாது" என்று எம்.ஜி.ஆர். தம் உயிலில் குறிப்பிட்டிருக்கிறார்.

பள்ளிக்கூடம், நினைவு இல்லம் இவைகளின் பராமரிப்புக்குத் தேவையான பணத்துக்கும், எம். ஜி. ஆர். வழி செய்திருக்கிறார். கே. கே. நகரில் இருக்கும் எம்.ஜி. ஆருக்குச் சொந்தமான ஆறு ஏக்கர் விவசாய நிலத்திலிருந்து வரும் வருவாயும், எம்.ஜி. ஆரின் சத்தியா ஸ்டூடியோவி



• ....வகுப்பு நடக்கிறது

லிருந்து கிடைக்கும் வருவாயும் கொண்டு, பள்ளிக் கூடத்தைப் பராமரிக்க வேண்டும் என்றும், ஆலந்தூரில் உள்ள சுமார் 3500 சதுர அடி பரப்புள்ள எம். ஜி. ஆருக்குச் சொந்தமான மார்க்கெட்டிலிருந்து கிடைக்கும் வாடகைப் பணம், எம்.ஜி.ஆரின் நினைவு இல்லத்தைப் பராமரிக்கப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் எம்.ஜி.ஆர். தமது உயிலில் எழுதி வைத்திருக்கிறார்.

எம்.ஜி.ஆர். பள்ளிக்கூடத்தின் முதல்வராய்ப் பொறுப்பேற்று, நடத்தி வருகிறார் திருமதி. லதா ராஜேந்திரன். (வி. என். ஜானகியின் சகோதரர் மகள்.)

"போக்குவரத்து மற்றும் ஜன சந்தடியிலிருந்து தள்ளி ராமாவரம் தோட்டத்திற்குள் அமைந்துள்ள அமைதியான சூழ்நிலை இப்பள்ளிக்கு பெரிய பிளஸ் பாயிண்ட்" என்கிறார் லதா.

"எம்.ஜி.ஆர். திரைப்பட நடிகராக, அரசியல் கட்சிக்காரராக, முதலமைச்சராக இருந்த போது, அவர் பயன்படுத்திய பொருட்கள், அவருக்கு பரிசாய்த் தரப்பட்ட பலவிதமான பொருட்கள், அவர் எழுதிய, அவருக்கு எழுதப்பட்ட கடிதங்களின் பிரதிகள் என்று ஏகப்பட்ட பொருட்கள் அவரது தோட்டத்தில் இருந்தன. அவர் மறைவுக்குப் பின், அவற்றையெல்லாம், அங்கேயே ஒரு தனி யறையில் போட்டு, பூட்டி வைத்து விட்டோம். ஆற்காடு ரோடு இல்லத்தில் அத்தனையையும் வைக்கப் போதிய இட வசதி இல்லை. எனவே, கூடுதலாய் இரண்டு ஹால்கள் கட்டி, அதன்பின், அத்தனை பொருட்களையும் முறைப்படி பார்வைக்கு வைத்தோம்" என்கிறார் என். சி. ராகவாச்சாரி. நினைவில்லம் ரெடியானதும், திருமதி வி. என். ஜானகி அதைத் திறந்து வைத்தார்.

எம்.ஜி.ஆர். தன் உயிலில் குறிப்பிட்டுள்ள பள்ளி, நினைவில்லம் ஆகிய இரண்டு விஷயங்களும் முழுமையாய் செயல் வடிவம் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. இதற்குக் [illegible] இல்லாமை



• எம்.ஜி.ஆர். நினைவு இல்லம்

தான்' என்றால் பலருக்கு வியப்பாக இருக்கலாம். "எம்.ஜி.ஆர். பள்ளி, நினைவு இல்லம் இரண்டினுடைய பராமரிப்புக்காக நிரந்தரமான நிதி வசதிக்கு உயிலிலேயே வழி செய்திருந்தாலும், பள்ளிக்கூடக் கட்டடங்கள், நினைவாலயத்தில் அவசியமான கூடுதல் கட்டட வேலைகள் இவற்றுக்குப் பல லட்சம் ரூபாய் தேவையாய் இருந்தது. அவ்வளவு பணம் இல்லாததால், பணி தாமதமாயிற்று. ராமசாமி உடையார் அவற்றைத் தாமாக முன்வந்து கட்டித் தந்து, எம்.ஜி. ஆரின் கனவு, நனவாகிட உதவி புரிந்தார்" என்கிறார் ராஜேந்திரன்.

— எஸ். சந்திரமௌலி

படங்கள் : யோகா

உதவி

கணேஷ். அந்தப் பெரிய சாலையைக் கடக்க முற்பட்டபோதுதான் அந்த விபத்து நேர்ந்தது. அவனுக்குக் கொஞ்சம் தள்ளி, ஒரு மூதாட்டி ரோட்டை கடக்க முற்பட்ட போது, வேகமாக வந்த ஒரு ஆட்டோ மூதாட்டி மீது மோதித் தள்ளிவிட்டு விட்டு, நிற்காமல் கூடச் சென்று விட்டது. மூதாட்டி ரோட்டில் சாய்ந்தாள். கையில் வைத்திருந்த பையில் இருந்து, கோதுமை சிதறி விழுந்தது.

கையில் பெரிதாய்ச் சிராய்ப்பு- ஆட்டோ மோதியதில்-ஏற்பட்டு இருந்தது. கீழே விழுந்ததில் முழங்காலில் அடி... கணேசன் மூதாட்டியின் பக்கம் வந்தான். அதற்குள் கூட்டம் கூடிவிட்டது. "நாசமாப் போறவன்... மெதுவாப் போகக் கூடாதா?" என்று யாரோ ஒருவன் கத்தினான்.

"எல்லோரும் கண்ணை மூடிட்டுத்தான் வண்டி ஓட்டுறானுங்க" என்று ஒருவன் கூறினான்.

"வர வர ரோட்ல நடந்து போகவே பயமா இருக்குங்க" என்றான் இன்னொருவன்.

ஆளுக்கொன்று பேசினர். ஆனால் யாரும் மூதாட்டியைத் தூக்கி உட்கார வைத்து உதவி ஏதும் செய்ய முனையவில்லை. கணேசனுக்கு அந்த மூதாட்டியைப் பார்க்க பாவமாய் இருந்தது. அடிப்பட்டு விழுந்ததில் மயங்கி இருந்தாள். கணேசன் வேகமாய் ஓடிப்போய் - பக்கத்தில் இருந்த பெட்டிக் கடையில் - ஒரு சோடா வாங்கி வந்து - லேசாய் சோடாவை முகத்தில் தெளித்து - மூதாட்டிக்கும் குடிக்கக் கொடுத்தான்.

இவன் அருகே சென்றதும்தான் சிலருக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமே பிறந்தது. "கிழவி பாட்டுக்கு செத்துக் கித்துப் போச்சுன்னா நம்மை இழுத்துட்டுப் போயிருமே போலீசு..." என்றான் ஒருவன்.

நல்லவேளை.மூதாட்டி பிளாட்பார்மை ஒட்டித்தான் விழுந்திருந்தாள். நடுரோட்டில் விபத்து நடந்து இருந்தால், வாகனங்கள் போகும் அவசரத்தில் மூதாட்டி மீது வேறு வாகனம் மோதி இருந்தாலும் மோதி இருக்கும்.

"பாட்டி, மெல்ல எழுந்து உட்காருங்க... பக்கத்தில் ஆஸ்பத்திரி ஏதும் இருக்காங்க?" கணேசன் பக்கத்தில் நின்ற ஒருவரைப் பார்த்துக் கேட்டான்.

"அடுத்த சந்துல ஒரு டாக்டர் இருக்காருங்க."

"நமக்கெதுக்கு சார் வம்பு... பேசாமல் போயிடுங்க" என்று கணேசனுக்கு ஒருத்தர் யோசனை சொன்னார். கணேசனுக்கு இப்போது பெரிசாய் வேலை ஒன்றும் இல்லை. இன்று கம்பெனிக்கு லீவ் போட்டாயிற்று. கவிதா கொடுத்த மருந்துச் சீட்டுக்கு மருந்து வாங்க வேண்டும். மருந்து வாங்க வந்த போதுதான் இந்த அசம்பாவிதம்.

அனேகமாய் மூதாட்டியின் வீடு பக்கத்தில்தான் இருக்க வேண்டும். விட்டு விட்டு வந்து விடலாம். இல்லையேல் மனத்தில் நிம்மதி இராது...

கணேசனின் மனசு அப்படி! யாருக்காவது ஒரு கஷ்டமெனில் உதவ வேண்டும் என்று நினைப்பான். மூதாட்டியை வீட்டில் விட்டு விட்டே போய் விடுவோம். பத்து நிமிஷம் ஆகுமா... ஆஸ்பத்திரியில் காட்டி விட்டு வீட்டில் விட...


மூதாட்டியை மெதுவாய் பிளாட்பார திண்ணையில் உட்கார வைத்தான். இரண்டு பேர் உதவி செய்தனர். மூதாட்டி திடீர் என்று- "ரேஷன் கார்டு, ரேஷன் கார்டு..." என்று முணுமுணுத்தாள். ரேஷன் கடைக்கு கோதுமை வாங்க வந்து இருக்கிறாள். வாங்கி விட்டு போகும் போது விபத்து.

பையில் பார்த்தாள். ரேஷன் கார்டு இல்லை. எவனும் அடித்துக் கொண்டு போய் விட்டானோ என்று திரும்பிப் பார்த்த போது, குப்பைத் தொட்டியை ஒட்டி கார்டு விழுந்து கிடந்தது. ரேஷன் கார்டை எடுத்துச் தூசி தட்டிவிட்டு, அந்த மூதாட்டியின் கையில் கொடுத்தான்.

"பாட்டி மெல்ல நடக்க முடியுமா... ஆஸ்பத்திரி வரைக்கும்..."

"முடியலப்பா... காலு வலி உயிர் போகுது..." என்றாள் மூதாட்டி. அவள் கண்ணில் சட்டென்று அழுகை. கண்களைத் துடைத்துக் கொண்டாள். 'ஒரு ரிக்ஷாவில் வைச்சு கூட்டிட்டுப் போயிடலாமா' என்று கணேசன் எண்ணினான்.

ரிக்ஷாவை அழைத்தான். பக்கத்தில் இருந்த ஒ... வர் "உனக்கெதுக்குப்பா இந்த வேண்டாத வேலை..." என்பது போல் பார்த்தனர்.



ரிக்ஷா வந்தது. மூதாட்டியை மெ... உட்கார வைத்தான். "அடுத்த சந்துல உள்ள ஆஸ்பத்திரிக்கு

போப்பா.

கணேசனும் வண்டியில் ஏறிக் கொண்டான்.

ஆஸ்பத்திரி வந்தது. "எவ்வளவுப்பா."

"கொடுக்கிறதைக் கொடு... இல்ல விடுப்பா... ஏதோ கீழ விழுந்த கிழவிக்கு நீ இத்தனை ஹெல்ப் பண்ணுறப்ப நா ஓசியா கொஞ்ச தூரம் ஓட்டக் கூடாதா?" என்றான் ரிக்ஷாக்காரன். கணேசன் பைக்குள் கையை விட்டான். ஐம்பது ரூபாய்தான் இருந்தது. கவிதா மருந்து வாங்கக் கொடுத்து.

"நீ ரெண்டு ரூபா எடுத்துக்க... ஐம்பது ரூபாய்க்குச் சில்லரை இருக்கா?"

"இந்தா சாரு-காசெல்லாம் வேணாம்... கிழவிய முதல்ல உள்ள கூட்டிப்போ.." என்று ரிக்ஷாக்காரன் கிளம்பி விட்டான்.

மூதாட்டியை மெல்ல ஆஸ்பத்திரிக்குள் அழைத்துப் போனான். ஆஸ்பத்திரியில் கூட்டம் இல்லை. பெண் ஒருத்தி பெஞ்சில் உட்கார்ந்து பேப்பர் பார்த்துக் கொண்டு இருந்தாள். இவர்களைப் பார்த்ததும், "என்ன சார்?" என்று கேட்டாள்.

கணேசன் அடிபட்டதைச் சொன்னான்... "டாக்டரைப் பார்க்கணும்னா - கன்சல்டிங் பீஸ் இருபது ரூபாய் கொடுத்துடணும்."

"இதுக்கு எதுக்குங்க கன்சல்டிங் பீஸ்? இது சின்ன அடிதானே?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. கன்சல்டிங் பீஸ் இருபது ரூபாய் கொடுத்தாத்தான் டாக்டரைப் பார்க்க முடியும்."

கணேசன் இருபது ரூபாய் கொடுத்தான்.... பிறகு அந்தப் பெண்

யோகி

திரையை விலக்கி-"ஒரு பேஷண்ட்... அனுப்பவா?" என்று கேட்டுவிட்டு - இவர்கள் பக்கம் திரும்பி - "உள்ளே போங்க" என்றான்.

கணேசன் உள்ளே போனான். டாக்டர் பெரிய வழுக்கைத் தலையுடன் காட்சியளித்தார். "என்ன சார்?"

கணேசன் அடிபட்டதைச் சொன்னான். நர்ஸை அழைத்தார். வெளியில் இருந்த பெண்தான் நர்ஸ் போலும். வந்தாள். கையில் இருந்த சிராய்ப்பைத் துடைத்து கழுவச் சொன்னார். பிறகு மஞ்சளாய் ஒரு மருந்தைத் தடவச் சொன்னார். பிறகு மூதாட்டி- "முழங்கால் வலிக்கிறது" என்றாள். டாக்டர் முழங்காலை அழுத்திப் பார்த்தார். டாக்டர், "கல் குத்தி இருக்கு.. உள்காயம்.. அதான் ரத்தம் வரல.. ஊசி ஒண்ணு போட்டுடுவோம்!"என்று என்னவோ ஒரு மருந்து பேரைச் சொல்லி - நர்ஸிடம் கொண்டு வரச் சொன்னார். நர்ஸ் சிரிஞ்சில் மருந்து ஏற்றி கொண்டு வந்தாள். டாக்டர் ஊசி போட்டு விட்டு மூன்று மாத்திரைகள் கொடுத்து - மூணு வேளை சாப்பிடுங்க என்று கூறிவிட்டு, "இருபது ரூபாய் கொடுங்க" என்றார்.

நர்ஸ் வேறு இருபது ரூபாய்



விளம்பரத்திற்காக பெரிய நிறுவனங்கள் ஒரு ஆண்டிற்கு எவ்வளவு செலவு செய்கின்றன என்று இங்கே ஒரு புள்ளி விவரம்.

இந்துஸ்தான் லீவர் – 67 கோடி; ஐ.டி.சி – 35 கோடி; நெஸ்லே – 26 கோடி; கோத்ரேஜ் சோப்புகள் – 24 கோடி; ப்ரூக் பாண்டு – 24 கோடி; பிலிப்ஸ் – 21 கோடி; கோல்கேட் பாமாலிவ் – 21 கோடி; ப்ராக்டர் அண்டு காம்பிள் – 20 கோடி; எம்.ஆர். எஃப் – 18 கோடி; டாடா டீ – 16 கோடி; .

நன்றி - ADVERTISING & MARKETING.

தகவல் : கலாமூர்த்தி

வாங்கிக் கொண்டான். கணேசனுக்கு பகீர் என்றது. கொண்டு வந்த ஐம்பதில் நாற்பது போய்விட்டது. "சார்...பேஷண்டுக்கு மாத்திரை வேறு கொடுத்து இருக்கேன்... ஞாபகம் இல்லாம இருபதுன்னு சொல்லிட்டேன். இருபத்தி ஐஞ்சு ரூபா... இன்னும் அஞ்சு ரூபா கொடுங்க" என்றார் டாக்டர் திரும்ப...

அஞ்சு ரூபாயை நர்ஸிடம் கொடுத்தான்.

அவனுக்குப் பயமாய் இருந்தது. கவிதா திட்டப் போகிறாள். சரி சரி, இந்த மூதாட்டியின் வீட்டில் விபத்தைச் சொல்லிப் பணம் பெற்றுக் கொள்ளலாம்.

"பாட்டி வீட்டுக்கு நடந்துடலாமா..."

"முடியலப்பா... காலு ரொம்ப வலிக்குது..."

அந்த ரிக்ஷாக்காரனையே இருக்கச் சொல்லி இருக்கலாம் என்று தோன்றியது.

"வீடு எங்க பாட்டி?"

தெருப் பெயரைச் சொன்னாள். நாலு தெரு தள்ளி இருந்தது. அவ்வளவு தூரம் நடந்து செல்ல முடியாது, மூதாட்டியால்.

ஒரு ரிக்ஷாவை அழைத்தான்... மூதாட்டியை மெல்ல உட்காரச் சொன்னான். ரிக்ஷா கிளம்பியது... மூதாட்டி சொன்ன சந்து மிகச் சிறியது. அந்த சந்துக்குள் ஒரு ரிக்ஷா போகக்கூட இடைஞ்சலாய் இருக்கும் அளவு – சைக்கிள்கள், டிரை சைக்கிள்கள் இருந்தன. "சார் வண்டிய உள்ள கொண்டு போனா திருப்பறது கஷ்டம்... நீங்க இறங்கி நடந்து போங்க" என்றான் ரிக்ஷாக்காரன்.

இறங்கினர்..."எவ்வளவுப்பா.?"

"மூணு ரூபா கொடு..."

கொடுத்தான்.

மூதாட்டி நடக்க முடியாமல் நடந்தாள். இந்த வீடுதான் என்று ஒரு வீட்டு வாசலைக் காட்டினாள். அங்கே ஒரு பெண் நின்றிருந்தாள். "ஏய் கிழவி, ரேஷன் கடைக்குப் போய்ட்டு வர இம்புட்டு நேரமா?" கணேசன் அருகில் இருப்பதை அந்தப் பெண் கவனிக்கவில்லை.

சத்தம் கேட்டு ஒருவன் வெளியே வந்தான். "பாருங்க உங்க அம்மாவை. ரேஷன் கடைக்கு அனுப்புனா... எங்கேயோ மோதி உடம்பைப் புண்ணாக்கிக்கிட்டு வர்றாங்க..."

மூதாட்டி இப்போது உள்ளே சென்று விட்டாள்.

ஓ... இந்த மூதாட்டி – இப்பெண்ணுக்கு மாமியாரா.. அந்த மூதாட்டியின் மகன்தான் கணேசனைப் பார்த்து- "என்ன சார்?" என்று கேட்டான்.

"கிழவி... ரோட்டுல பார்த்துப் போகக் கூடாதா..." என்றாள் அந்தப் பெண். "இதுக்கு வைத்தியம் பார்த்தே காசு போகுது!"

கணேசனுக்குப் பகீர் என்றது. இப்படிப் பேசுபவர்களிடம் அவன் செலவு பண்ணின பணத்தைத் திரும்ப வாங்க முடியுமா?

"உன்னை யாருப்பா செலவு பண்ணச் சொன்னது?"" என்று கேட்டாலும் கேட்பார்கள். பயமாய்ப் போனது. கவிதாவிடம் சொன்னால் குதிப்பாள், 'உங்கள யாரு சமூக சேவை எல்லாம் செய்யச் சொன்னது?' என்று.

இவர்கள் ஒரு 'தாங்க்ஸ் ஸார்' கூட சொல்லவில்லை. என்ன செய்வது. பணம் கேட்கக் கூச்சமாய் இருந்தது. பையில் இரண்டு ரூபாய்தான் மீதம் இருந்தது.

அவர்கள் உள்ளே சென்றனர். கணேசனிடம் ஒன்றும் சொல்லவில்லை. உள்ளே போய் பணம் கேட்கலாமா... பணம் ஒன்றும் பெரிசு இல்லை. ஆனால் இப்போது குடும்பம் உள்ள நிலையில் ஐம்பது ரூபாய் பெரிய தொகை. அவர்கள் வராந்தாவில் நின்று குசுகுசுவென்று என்னவோ பேசிக் கொண்டனர். ரூபாய்தான் கொடுக்கப் போகிறார்களோ. கையில் ரூபாய்த்தான் இருந்தது.

அந்த பெண் வந்தாள்... "சார். அத்தை கிட்ட ஐம்பது ரூபா கொடுத்து கோதுமை வாங்க அனுப்பினோம். கோதுமை ஒன்பது ரூபாய்.. மீதம் நாற்பத்தி ஒரு ரூபாயைக் காணோம்.. நீங்க பார்த்தீங்களா?"

Kalki Shopping Page



எம்.ஜி.ஆரைப் பார் எழுதியதற்கு எதிர்ப்பு
அண்ணாவைப் பார் எழுதியதற்கு எதிர்ப்பு
இந்தா இதையும் வாங்கிக்க
ஏங்கையே செம அடி வாங்கியாச்சு இது வேறயா..?
கண்டவனெல்லாம் விமானத்தில் ஏத்திக்க முடியாது...!
மத்திய அமைச்சர் அருணா -சலம்



கல்கி



1994
நவம்பர் 13
பவ
ஐப்பசி 27
மலர் : 53
இதழ் : 15

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

லஞ்ச உற்பத்தி வாரியங்கள்!

இவ்வாண்டு தீபாவளியன்று வெடித்த பட்டாசுகள், பூச்சொரிந்த வாணங்கள் ஆகியவற்றுக்கிடையிலும் ஒரு சோகமே நெஞ்சைக் கனக்கச் செய்தது. அது சென்னையைத் தாக்கிய புயல் விளைவித்த சேதத்தால் உருவான சோகம். இயற்கையின் சோதனைகளால் தீமைகளும் இருக்கும்; நன்மைகளும் விளையும். ஒரு கப்பலே நங்கூரத்தைப் பெயர்த்துக் கொண்டு தரைதட்டிப் போகும் அளவிலும் ஏழை பாழைகள் கூரையிழந்து தவிக்கும் விதத்திலும் வீசிய புயல், நகருக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகள் நிறையவும் தெற்கே வாடிய பயிர்களுக்கு அமுதமாகவும் விளங்கியிருக்கிறது. மரங்கள் சாய்ந்தன, விளம்பரப் பலகைகள் விழுந்தன, மின்சாரமின்றி சென்னையை இருள் கவ்வியது, தொலைபேசிகள் செயலற்றுப் போயின. இதையெல்லாம் சகித்துக் கொள்ளலாம். ஆனால், அரசு அமைத்துத் தந்த குடிசை மாற்று வாரியக் கட்டடம் தகர்ந்ததில் ஒரு குடும்பமே பலியானது, எளிதில் ஜீரணிக்க முடியாத சோகம் என்பதுடன், மன்னிக்கவே முடியாத குற்றமும் கூட. அந்தக் கட்டடம் குடியிருக்க லாயக்கற்றது என்று அறிவிக்கப்பட்டதாகவும், எல்லோரும் வெளியேற, இந்தக் குடும்பம் மட்டும் பின்தங்கியிருந்ததாகவும் அவர்கள் மீதே குற்றம் சுமத்துவதுபோல் ஒரு விளக்கம் தரப்பட்டுள்ளது. இது, பிரச்னையைத் திசை திருப்பும் முயற்சியே. இத்தகைய படுமோசமான கட்டடங்கள் எழக் காரணம், காண்ட்ராக்டர்களின் பேராசையும் அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகளிடையே நிலவும் லஞ்ச லாவண்யமும்தான். இல்லாவிடில் மேற்கூரை இடிந்து விழ, அந்தப் பளுவால் மேலும் இரு கூரைகளும் இடிந்து, அதன்கீழே படுத்திருந்த குடும்பத்தைக் கூண்டோடு கைலாசத்துக்கு அனுப்பியிராது.

வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் போன்ற பல வாரியங்களும் லஞ்ச ஊழல் உற்பத்தி வாரியங்களாகிவிட்டன.

சுதேசமித்திரன் மறுமலர்ச்சி

சுதேசமித்திரன் மறுமலர்ச்சி பெறுகிறது என்பது அதன் பாரம்பரியச் சிறப்பு அறிந்தவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி. நாடு விடுதலை பெற முடியும் என்று யாரும் கனவுகூடக் காண முடியாத நாளிலேயே ஜி. சுப்பிரமணிய அய்யர் முதலில் ஹிந்து நாளிதழையும் பிறகு தமிழில் சுதேசமித்திரன் என்ற பொருத்தமான பெயருடன் ஒரு தினசரியையும் தொடங்கினார். ஒரு கிராமத்தில் சுதேசமித்திரன் இருக்கிறது என்றால் அங்கே தேசிய உணர்வும் நாட்டுப்பற்றும் மலர்ந்து வளருகிறது என்ற நிலை உருவானது.

செய்திகளைக் கொடுப்பது தவிர, கலை - இலக்கிய விமர்சனங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் சுதேசமித்திரன் விசால மேடை அமைத்துத் தந்தது. பிரசித்தி பெற்ற மகாகவி - தேசிய கவி சர்ச்சையையும் (வ.ரா. 'கல்கி') தியாகபூமி திரைப்பட சர்ச்சையையும் (மித்திரன் - விகடன்) இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம். ஆயினும் சர்ச்சைகளுக்கு இடமளித்தவர்கள் என்றும் நண்பர்களாகவே விளங்கினர்.

இலங்கையிலே "கல்கி" முக்கியப் பொறுப்பேற்று தமிழ் விழா நடத்திய போது சுதேசமித்திரன் ஆசிரியர் சி. ஆர். சீனிவாசனைத்தான் தலைமை தாங்க வற்புறுத்தி அழைத்துப் போனார். "கல்கி" அமரரானதும் சி. ஆர். சீனிவாசன்தான் கல்கி நினைவு நிதி திரட்டி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வுச் சொற்பொழிவுகள் நடக்க ஓர் அறக்கட்டளை ஏற்படுத்தினார். இத்தகைய பண்பாடு இன்று காண்பது அரிதாகிவிட்டது.

சுதேசமித்திரன் மறுமலர்ச்சி விழாவிலே குன்றக்குடி அடிகளார் குறிப்பிட்டதுபோல, பத்திரிகைச் சுதந்திரத்தைக் காப்பதே குறிக்கோள் எனக் கொண்டால், அதுவே பல சமயங்களில் சுயநலமாகி, தகாத அளவுக்குப் போய், தரக்குறைவில் முடிகிறது. எனவே, சுதேசமித்திரன் மக்கள் சுதந்திரத்தையும் அவர்கள் நலனையும் காக்கும் பொறுப்புள்ள பத்திரிகையாக விளங்க வேண்டும் என்ற அடிகளாரின் கருத்தை ஆமோதித்து, புதிய சுதேசமித்திரனை வாழ்த்தி வரவேற்கிறோம்.

குளிர்காலம்

நினைத்தாலே நடுக்கம்!

'ஏன் தான் குளிர் காலம் வருதோ'ன்னு குளிரை விட பயத்தில் நடுங்கறவங்க பல பேர் இருக்காங்க. பயம் - குளிர் காலம் வந்தால் கூடவே வரும் ஆஸ்துமாவை நினைச்சுத்தான்!

இந்த அவஸ்தையால பாதிக்கப்பட்டவங்க மூச்சு விட முடியாம திணறுவதையும், கஷ்டப்பட்டு மூச்சு விடுகையில் 'கர்புர்'னு விசிலடிக்கிற மாதிரி சப்தம் வர்றதையும் கேட்க முடியும். பேஷன்டைப் பார்க்கவே ரொம்பப் பரிதாபமாகவும் பயமாகவும் கூட இருக்கும்.


ஆஸ்துமா நோயாளிக்குள்ளே என்ன நடக்குது.....? அதைத் தெரிஞ்சுக்கணும்னா நம்ம நுரையீரலுடைய அமைப்பு பத்தியும் கொஞ்சம் தெரியணும். ஸ்கூல்ல படிச்சதைக் கொஞ்சம் ஞாபகப்படுத்திப்போமா?

மூக்கு வழியாக நாம உள்ளிழுக்கிற காத்து, தொண்டைப் பகுதியில் இருக்கிற மூச்சுக் குழாய் வழியாப் போகுது. மூச்சுக் குழாய் இரண்டா விரிஞ்சு, அந்த இரண்டு பிரிவுகளிலேருந்தும் சின்னச் சின்ன மயிரிழைக் குழாய்கள் கிளை கிளையா இரண்டு நுரையீரல்களிலும் பரவுது. இந்த ஆயிரக் கணக்கான கிளைகள் (bronchioles) தான் காற்றை நுரையீரலுக்குள் செலுத்துகின்றன. இந்தக் குழாய்களின் உள்பகுதியில் இயற்கையிலேயே சளி சுரக்குது. சளின்னதும் அருவருப்பு அடையாதீங்க - இது இலேசான பிசுபிசுப்போட இருக்கிற சுத்தமான சளி; மூச்சுப் பாதைக்கு அவசியமான சளி இது.

இந்த அவசிய சமாசாரமே அவஸ்தை சமாசாரமாக மாறிடறபோது ஏற்படற நிலைதான் ஆஸ்துமா. தூசி, தும்பு, சில வகையான உணவுகள், ரசாயனப் பொருட்கள், நெடிகள் - இது மாதிரியான பொருள்கள் சில பேருக்கு ஒத்துக்கறதில்லை. அலர்ஜி ஏற்படுத்துது. அலர்ஜியின் ஒரு விளைவு : மூச்சுப் பாதையில இருக்கிற சளி கெட்டிப்பட, பாதையின் அகலம் குறைந்து போகுது; உள்ளே போய் வெளியே வர்ற காற்றின் அளவு குறைஞ்சு போகுது. உடம்புக்குத் தேவையான ஆக்ஸிஜனுக்கு தட்டுப்பாடு உண்டாக, வேக வேகமா மூச்சு இழுத்து வெளிவிட முயற்சி செய்ய வேண்டியிருக்கு; அதனாலதான் ஆஸ்துமா வந்தவங்களுக்கு மூச்சிரைக்குது! விசில் மாதிரி சப்தமும் கரபுர கேட்கிறதும் மூச்சுப் பாதையில் தடங்கல் இருக்கறதாலதான்!

ஆஸ்துமா, பரம்பரையா வரக்கூடிய நோய் என்கிறது நிரூபணமாயிருக்கு. சீதோஷ்ண நிலையின் மாற்றங்களும் ஆஸ்துமாவைத் தூண்டும். ஹார்மோன் தொந்தரவுகளாலயும் ஆஸ்துமா வரலாம். மாதவிடாய் காலத்துல சில பெண்களைப் படுத்தும். சில பெண்களுக்கு இருக்கிற ஆஸ்துமா அவங்க கர்ப்பமாகிறபோது தற்காலிகமா லீவுல போயிடுது! குழந்தை பிறந்த பிறகு திரும்பவும் வருது! சில பேருக்கு சில வகை மருந்துகளால கூட ஆஸ்துமா வருது!

ஆஸ்துமா நோயாளிகளுக்கு broncho dilators என்ற வகை மருந்துகளை எழுதிக் கொடுக்கிறோம். இவை மூச்சுப் பாதையைக் கொஞ்சம் அகலப்படுத்த உதவும்.



நாசர்-ராதிகாவின் நடிப்பனுபவங்கள் இந்தப் படத்தில் 'பளிச்'. ராதிகா நர்ஸ். குழந்தைப் பேறு இல்லாதவள். ஆஸ்பத்திரியில் அடிபட்டு வரும் ஒரு பையனை தம் மகனாகக் கருதி, அன்பைப் பொழிகிறார். நடுவில் குழப்பங்கள். வில்லன்.

இறுதியில் பவித்ரா, பவித்ரமான கோயில் விளக்கால் சண்டாளன் வில்லனை சம்ஹாரம் பண்ணிவிட்டு, தாய்ப் பாச ஜோதியில் கலக்கிறார்.

சிரிக்கும் படியிருப்பது கோவை சரளாவின் பேச்சுதான். எஸ்.எஸ். சந்திரன், ஜூனியர் பாலையா,

டாக்டர் பேசுகிறார் :


தொடர்ந்து தொந்தரவு நீடிச்ச பேஷன்ட் ரொம்ப களைச்சுப் போயிட்டா, மருந்து கலந்த நீரை ரத்த நாளம் வழியா உள்ளே செலுத்தணும். ஆக்ஸிஜன் கொடுக்கணும். கார்டிஸான் மற்றும் ஸ்டீராய்ட் வகை மருந்துகளையும் ஆஸ்துமா சிகிச்சைக்கு உபயோகிக்கிறது உண்டு. எனினும் இதை எமர்ஜன்ஸி சமயத்துக்குத்தான் பயன்படுத்துவோம்.

என்ன ட்ரீட்மென்ட் கொடுத்தாலும், ஆஸ்துமா இனி வராதுன்னு உத்தரவாதம் தர முடியாது. ஆனால் ஒவ்வொரு நோயாளியும் தனக்கு வரும் ஆஸ்துமாவின் ஆரம்ப அறிகுறிகளைக் கவனிச்சு தெரிஞ்சு வச்சுக்கிட்டா, அதைத் தீவிரமா வளர விடாம கட்டுப்படுத்திடலாம். மருந்து, மாத்திரை அல்லது மூச்சுப் பாதைக்கான ஸ்ப்ரே உபயோகிக்கலாம். ஓய்வு எடுத்துக்கிட்டு இழுப்பு அதிகமாகாமப் பார்த்துக்கலாம்.

வாழ்க்கை முறைல சில மாற்றங்கள் செஞ்சுக்கறதால ஆஸ்துமாவைக் கட்டுக்குள்ள வைச்சுக்க முடியும். அலர்ஜி உண்டாக்குற சாதனங்களை ஒதுக்கிடலாம். டென்ஷன்னால ஆஸ்துமா வராவிட்டாலும் வேற காரணத்தால வர ஆஸ்துமா, டென்ஷன்னால அதிகமாகும். அதனால டென்ஷனைக் குறைக்கலாம்.

பீக் ஃப்ளோ மீட்டர் (peak flow meter) என்கிற கருவி இருக்கு. இதுக்குள்ளே மூச்சை வெளிப்படுத்தினால், வெளிவர காற்றின் அளவு, வேகத்தைக் கணக்கிட்டு ஆஸ்துமா எத்தனை தூரத்தில் இருக்குன்னு காண்பிச்சுக் குடுத்திடும். உடனே உஷார் ஆயிடலாம்.

சுற்றுப்புறத்தை தூசி இல்லாம சுத்தமா வைச்சுக்கறதாலயும் யோகாசனம், பிராணாயாமம் செய்யறதாலயும் ஆஸ்துமா அடங்கும்.



கனமான துணிகளாலான சோபா, மெத்தை விரிப்புகள்ல அதிகமா தூசி படியும். செயற்கை இழைத் துணிகளை உபயோகிச்சா அவ்வளவு தூசி சேராது, துவைக்கறதும் சுலபம்.

அலர்ஜியை உண்டாக்குகிற பொருள் எதுன்னு தெரியறது முக்கியம். ஒரு சிலருக்கு இறால், மீன் வகைகளைச் சாப்பிட்டால் ஒத்துக் கொள்ளாது. கரப்பான் பூச்சிகளும், வீட்டு மாடங்களில் கூடு கட்டும் புறாக்களும் கூட ஆஸ்துமா உண்டாக்குகின்றன என்று உறுதியாத் தெரியுது. வேற சிலருக்கு நாய், பூனை போன்ற செல்ல பிராணிகள் கூட அலர்ஜி. இப்படியே போனால் புருஷன்/பெண்டாட்டி கூட அலர்ஜின்ற நிலைமை வந்துடும் போலிருக்கு!

எப்படியோ, ஆஸ்துமா நோயாளிகள் டாக்டரை அலர்ஜியா நினைக்காம அப்பப்போ கலந்து ஆலோசிச்சு சிகிச்சை எடுத்துக்கறது நல்லது. ஆஸ்துமா வராமலும் முத்திப் போகாமலும் வாழ்க்கை முறையை மாத்தி அமைச்சுக்கிறது இன்னும் நல்லது.

- டாக்டர் சந்திரசேகர் சாண்டில்யா

வடிவேலு எல்லோரும் திரை பூஜ்ஜியம்.

ரஹ்மான் இசை போலவே தரமான கேமிரா. ஆனால் டான்ஸில் அநியாய சோடை.

புதுசாய் ஒரு கவிஞர். பழநி பாரதி. தேறிவிடுவார் கவனம்

பவித்ரா

பெறுபவர்கள் : பையனாய் நடிப்பவர் மற்றும் கலை இயக்குநர். இருவரும் அழுத்தமாய், நிலைமை உணர்ந்து பணியாற்றியிருக்கிறார்கள்.

லெட்டரை அப்படியே நம்புவது, தாய் சென்டிமெண்ட், "அம்மா, அம்மா" கதறல் போன்ற தமிழ் சினிமாத்தனங்கள் விலக்கலாகப் பார்த்தால், மிகத் தரமான படங்களின் ரேஞ்சுக்குப் போயிருக்கும். ஆனால் தமிழ் நெஞ்சங்களைப் பிழியப் பிழிய கசக்கவில்லை என்றால் அது தமிழ் சினிமாவே இல்லையே!

- துளசி

எதிர்கால எடை

♦ சேஷன் ஏதோ எழுதி விட்டதால் அண்ணாதுரையின் புகழ் குறைந்து போகுமா என்று நீங்கள் கேட்டுள்ள கேள்வி சரியென்று தோன்றவில்லை. ஒருவேளை இன்றுள்ள மக்களின் மதிப்பில் அவர் தாழ்ந்து போய் விடாதிருக்கலாம். ஆனால், எழுத்தில் வடித்திருப்பதால் அண்ணாவைப் பற்றித் தீர அறியாத எதிர்கால மக்கள் அவரைத் தவறாக எடை போட்டு விடக் கூடுமல்லவா?

சென்னை - 14, பொ. வஜ்ரவேலு.

கட்டெறும்பின் வர்ணனை

♦ அட்டை முதலே, இடம்பெற்ற கட்டெறும்பின் குறுக்கு வர்ணனைகள், புதுவித புத்துணர்வு தந்தது.

மதுரை - 16, எல். எம். அபிதாட்சயா.

பன்னிரண்டு

♦ ஒன்று, இரண்டு, மூன்று... என்று எண்களின் அடிப்படையில் வித்தியாசமான சிறுகதைகளைத் தந்து எங்களை மகிழ்வித்தமைக்கு நன்றி!

சிதம்பரம் - 1, ஒள்ளியன்.

அதிர்ஷ்டசாலிகள்

♦ அமரர் கல்கி எழுதிய 'பார்த்திபன் கனவு' ஆரம்பமே அடுத்த வாரம் எப்போது வரும் என்ற ஆவலைத் தூண்டுகிறது!

திருச்சி - 20, எஸ். சரவணன்.

♦ காலத்தால், அழிக்க முடியாத, மறக்க முடியாத, அமரர் கல்கியின் பார்த்திபன் கனவை, அவர் காலத்தில் படிக்க முடியவில்லை எனினும், அந்த அரிய சந்தர்ப்பம் இன்று எங்களைத் தேடி வந்திருப்பது மிகுந்த சந்தோஷம் தருகிறது. நாங்கள் மிக அதிருஷ்டசாலிகள்!

கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

♦ ஆரவாரத்துடன் அமரர் கல்கியின் "பார்த்திபன் கனவு" தொடர்

♦ 'ஜில்லு-ஜானு எங்கே சார்? கட்டெறும்பு கடிக்கு(!)ப் பயந்து 'ஜில்லுவும் ஜானுவும்' ஒளிந்து கொண்டார்களா?



"நன்றி கெட்ட ஜென்மங்கள்... இவ்வளவு பெரிய உருவம் இருப்பது கண்ணுக்குத் தெரியலை? ஹூம்! 'ஜில்லு-ஜானு' வேணுமாம்!"

கே. கே. நகர், பூங்கோதை.

இவ்விதழில் ஆரம்பமாகியிருப்பது மிகச் சந்தோஷமாயிருக்கிறது.

மதுரை - 10, பி. ராஜா.

தூள்!

♦ கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பது போல கே. பி. அலுவலகக் கிளாப் கட்டையைக் கூட கதை சொல்ல வைத்து விட்டாரே இயக்குனர் திலகம்! தூள்!

சென்னை - 20, அவைநாயகன்.

இன்னும் என்ன எழுத?

♦ 'கமென்ட்'களைத்தான் பக்கத்திற்குப் பக்கம் அந்த எறும்பே சொல்லி விட்டதே! இன்னும் என்ன எழுத இருக்கு, வட்டமேஜையில்?

சிறுமுகை, ஜி. கதிரேசன்.

லேட்!

♦ தீபாவளி ரிலீஸ் படங்கள் பற்றிய முன்னோட்டம் சூப்பர்! காதலன் விமர்சனம் மிக லேட்!

திருக்கொண்டீஸ்வரம், அ. குமார்.

மிகமென்மை

♦ கேட்கப்பட்ட அனைத்து கேள்விகளுக்கும் நடிகர் அரவிந்தசாமி அவர்கள் அளித்த பதில்கள் அவரைப் போலவே மென்மையாய் இருந்தன.

இலால்குடி, ஆங்கரை பைரவி.

கே.டீ.ஷீ.ரு 'கிளாஸ்' கட்டையும்...

26

"அண்ணே, சமாசாரம் தெரியுமா?" என்றவாறு காப்பியுடன் சிவப்பிரகாசத்துக்கு எதிரே வந்து உட்கார்ந்துகொண்ட ஞானப்பிரகாசம், அதை ஆற்றத்தொடங்கினான்.

ஏற்கெனவே தனது காப்பியைக் குடித்து முடித்திருந்த சிவப்பிரகாசம், "என்ன, ஞானம்? எதைப் பத்தின சமாசாரம்?" என்றான்.

"போலீஸ் டிபார்ட்மெண்ட்ல இருந்துக்கிட்டே, காங்கிரஸ்காரங்க கட்சியிலயும் ரகசியமா சேர்ந்துக்கிட்டு சில போலீஸ் ஆளுங்க தேசத் துரோக நடவடிக்கைகள்ள ஈடுபட்டுட்டிருக்காங்களாம். அது மாதிரி பண்றதா தெரியவர்றவங்க மேல ரொம்பக் கடுமையான நடவடிக்கை எடுப்பாங்களாம். இன்னிக்கு ஒரு ரகசிய சர்க்குலர் வந்திச்சு. "அந்த ராஜாராம் அய்யருக்கு இனிமேற்பட்டு நீ எந்த உதவியும் செய்யாம இருக்கிறது நல்லதுண்ணே. ஒரு தரம் வீட்டைச் சோதனை போட்டதாப் பேர் பண்ணி உதவி பண்ணினோம். அவருக்கு லண்டன்லேருந்து வர்ற லெட்டர்கள் அந்த செபாஸ்டியன் மூலமா அவர் கையைப் போய்ச் சேர்றதுக்கும் உதவி பண்றதா இருக்கே. என்னைப் பொறுத்த வரையில உன்னைக் காட்டிக் கொடுக்கமாட்டேன்னு சத்தியம் பண்ணி இருக்கேன். ஆனா, உன்னைப் பத்தித் தெரிய வந்தா, மத்தவங்க காட்டிக்குடுக்காம இருப்பாங்கன்னு நம்ப முடியாது. அவனவன் ப்ரொமோஷனுக்கு ஆலாப் பறந்திட்டிருக்கான். அதனால நீ கொஞ்சங் கொஞ்சமா இதுலேருந்து விலகிக்கிறது நல்லது."

சிவப்பிரகாசம் பட்டுக்கொள்ளாமல், "பார்க்கலாண்டா" என்றான். ஞானப் பிரகாசம் புதிதாய்த் தோன்றிய கவலையுடன் அண்ணனை ஏறிட்டான்...

விசாலம் உள்ளே வேலையாக இருந்த நேரத்தில் தபால் வந்தது. குஞ்சம்மாதான் எழுந்துபோய் வாங்கினாள். உறைமீது அவளது பெயர் இருந்தது. தனக்கு எழுதுகிறவர் யாருமில்லை என்ற நிலையில் வியப்புடன் அதை உடைத்துக் கடிதத்தை வெளியே எடுத்தாள்.

'உன் கணவன் அந்த அஞ்சனாதேவியுடன் கொட்டம் அடிப்பது தெரியாமல் வீட்டில் நிம்மதியாக உட்கார்ந்துகொண்டிருக்கிறாய். நீ ஓர் அப்பாவிதான். அஞ்சனா தேவி உன் கணவனைப் பார்க்கிற விதமே சரி இல்லை. அவர்கள் இருவரையும் பழக விடாதிருப்பது உனக்கு நல்லது' என்றெழுதி அதன்கீழே 'உண்மை விளம்பி' என்று எழுதப்பட்டிருந்தது.

படபடக்கும் நெஞ்சுடன் அதைப் படித்து முடித்த குஞ்சம்மா கடிதத்தை அவசரமாய்த் தன் புடைவைப் பெட்டியினுள் வைத்து விட்டு உறையைக் கிழித்து வெளியே அதன் துணுக்குளை வீசினாள்.

'நெருப்பு இல்லாம புகையுமா? ஏதாவது விஷயம் இருந்தே ஆகணும். இல்லாம சும்மாவானும் யாராவது வேலை மெனக்கெட்டு லெட்டர் எழுதுவானா? ஒரு வேளை அந்தப் பொண்ணுக்கு இவர் மேல ஒரு இதுவோ? இல்லேன்னா, அன்னிக்கு அந்த ஸ்கூல்ல ஒரு ரூமுக்குள்ள ரெண்டு பேரும் கொஞ்ச நேரம் இருக்கும்படி ஆனதை வெச்சுப் போதுபோகாதவா கதை கட்றானோ? எப்படி ஆனா என்ன? இந்தப் பொண்ணு அவரோட பழகறது நல்லதுக்கே இல்லே'.

ஜோதிர்லதா கிரிஜா

கண்கலங்கிப் போய்க் குஞ்சம்மா ஊஞ்சலில் படுத்துக் கொண்டே சற்று நேரம் யோசித்தாள்.

'அவளையே சந்திச்சுப் பேசிடலாமா – 'இத பாருடியம்மா, மகராஜி. எங்க ஆத்துக்காரரை என்னை விட்டுப் பிரிச்சுடாதே' அப்படின்னே சொல்லிடலாமா?'

'உங்க ஆத்துக்காரரை நீ அடக்கி வைடி'ன்னு பதில் சொல்லிட்டாள்னா...? அசிங்கந்தான். இவர்கிட்ட மறுபடியும் பேசினா என்ன? மனசு கஷ்டப்பட்டுப் பாரே?...' – கொஞ்ச நேரம் யோசித்த பிறகு ஒரு யோசனை தோன்ற, 'அப்படித்தான் செய்யணும்' என்று தனக்குள் முணகலாய்ச் சொல்லிக் கொண்டாள் குஞ்சம்மா...

மொட்டைமாடியில் உட்கார்ந்து தமிழ் எழுதிப் பழகிக்கொண்டிருந்த நரேந்திரநாத் பானர்ஜியின் முகத்துக்கு அதன் இயல்பான களை பெருமளவுக்குத் திரும்பி வந்திருந்தது. வந்த புதிதில் அண்ணனை எண்ணித் தினமும் அழுதது நின்று போயிருந்தது.

"என்ன, ரொம்ப மும்முரமாய் எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே?" என்று கேட்டவாறு அமராவதி அவனுக்கு முன்னால் வந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்தாள். அவன் எழுதுவதை நோட்டம் விட்டு விட்டு, "உங்கள் கையெழுத்து நன்றாக இருக்கிறது" என்றாள்.

"தலை எழுத்துத்தான் நன்றாக இல்லை."

"உங்கள் தலை எழுத்துக்கு என்ன, நரேந்திரநாத்? மிகவும் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டிய தலை எழுத்தாக்கும் உங்களுடையது! உங்களைப் பார்த்தால் எனக்கு எவ்வளவு பொறாமையாக இருக்கிறது தெரியுமா? ஓர் ஆணாகப் பிறக்கவில்லையே என்ற ஏக்கம் உங்களைப் பார்க்கும்தோறும் எனக்கு ஏற்படுகிறது, நரேன்! எங்கு வேண்டுமானாலும் சென்று எங்கு வேண்டுமானாலும் படுத்து வாழலாமல்லவா?"

"ஒரு விதத்தில் உண்மை தான்."

சற்று நேரம் போல் இருவரும் மவுனமாகத் தத்தம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்கள். அதன் பிறகு, "அதென்ன கையில் டயரியா? டயரி எழுதுகிற பழக்கம் உண்டா?" என்று நரேந்திரநாத் பானர்ஜி அவள் கையில் இருந்த நாட் குறிப்பேட்டைப் பார்த்தபடி வினவினான்.

"டயரியெல்லாம் எதுவுமில்லை, நரேன். பிறர் அறியாது ஒளித்துக் கொண்டாக வேண்டிய எண்ணங்கள் எத்தனையோ மனத்தில் அவ்வப்போது எழுகின்றன. அதிலும் கொஞ்ச நாட்களாக யாருடனும் பகிர்ந்து கொள்ள முடியாத எண்ணங்களாக அவை இருக்கின்றன."

இவ்வாறு ஆழமாக அவனைப் பார்த்தபடி கூறிவிட்டுச் சட்டெனத் தலையைத் தாழ்த்திக் கொண்ட அமராவதியின் முகத்தில் வெட்கம் தெரிந்ததைக் கண்டு நரேந்திரநாத் வியப்படைந்தான். கண்ணிமைக்காமல் அவளைப் பார்த்தபடியே இருந்தான். சில விநாடிகள் கடந்ததும் தலை உயர்த்திய அமராவதி கணத்துக்கும் குறைவான நேரத்துக்குள் மறுபடியும் தன் விழிகளைத் தாழ்த்திக் கொண்டு விட்டாள்.

27

அமராவதியின் உள்ளத்து எண்ணங்கள் நரேந்திரநாத் பானர்ஜிக்குப் புரியவே செய்தன. அவனுள் வியப்பும் வேதனையும் பெருகின. தனது ஊகம் சரி தான் என்பது அவளது வாயிலிருந்து வெளிப்படாதவரையில் தான் எதுவும் பேசி விடலாகாது என்றெண்ணிக் காத்திருந்தான். கனமான சில நொடிகள் கழிந்தன. ஆனால் அந்தக் கனத்தில் இறுக்கமோ, வெப்பமோ இல்லை. பரபரப்பும், எதிர்பார்ப்புமே இருந்தன.

"சொல்ல வந்ததை மனம் விட்டுச் சொல்லி விடுங்கள், அமராவதி."

"நான் இன்னும் என்ன சொல்லட்டும் நரேன்! புரியாதவர்களுக்கு அல்லவா சொல்ல வேண்டும்?"

நரேந்திரநாத் பானர்ஜியின் முகத்தில் புன்னகை படர்ந்தது. ஆனால் அதில் மகிழ்ச்சியை விடக் கசப்பே அதிகமாக விரவி இருந்தது.

"அமராவதி, நீ



என்ன சொல்ல வருகிறாய் என்பது எனக்குப் புரியாமல் இல்லை. நான் ஒரு நாடோடி மாதிரி. எந்த நேரத்திலும் தூக்கில் தொங்கக்கூடியவன். ஒரு விலாசம் கூட இல்லாத பரதேசியைப் போன்றவன். எனக்கு அடைக்கலம் கொடுப்பவர்களுக்குக் கூட ஆபத்து வருமோ என்று எப்போதும் கிலியில் இருப்பவன். ஓடத் தயாராக இருப்பவன். திருமணம் என்ற சொல்லைப் பற்றி நினைக்கவும் அருகதை இல்லாதவன், அமராவதி!"

"உங்களைப் பற்றிய அடைமொழிகள் இத்தனைதானா, இல்லை இன்னும் பாக்கி இருக்கிறதா?" – இப்போதும் அவளது தலை தாழ்ந்தே இருந்தது.

"இன்னும் எவ்வளவோ சொல்லலாம், அமராவதி. ஒரு வேளைச் சோற்றுக்குக் கூட நாதி இல்லாமல் மூட்டை முதற்கொண்டு தூக்கிப் பிழைப்பவன். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், திருமணம் செய்து கொள்ளத் துளியும் தகுதியற்றவன். உன்னைப் போன்ற ஒரு பெண்ணின் வாழ்க்கையை என்னால் பாழ்படுத்த முடியாது, அமராவதி. தயவு செய்து இன்று நடந்த பேச்சை மறந்து விடு. இது சர்வநாசத்தைநோக்கி நம்மை நடத்திச் செல்லக்கூடிய எண்ணம்."

"இல்லை, நரேந்திரநாத்! சோறும் துணியும் மட்டுமே முழுமை பெற்ற வாழ்க்கையாகிவிடுமா என்ன? நாம் எப்படிப்பட்ட மனிதர்களாக வாழ்கிறோம் என்பதுதான் முக்கியம். தேசபக்தி நிறைந்த ஆணும் பெண்ணும் சேர்ந்து நடத்தும் இல்வாழ்க்கை மகத்தானது, மகோன்னதமானது, நரேன்."

"உன்னுடைய வெளிப்படையான பேச்சு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது, அமராவதி. உன்னையும் தான். அழகும் அன்பும் அணிகலன்களாய்க் கொண்ட உன்னை எவனுமே மறுதலிக்க மாட்டான். உண்மையில் நான் இன்றிருக்கும் இக்கட்டான நிலையில் மட்டும் இல்லாதவனாக இருந்தால், நானாகவே முதலில் எனது காதலை வெளிப்படுத்தி இருப்பேன். அதுதான் உண்மை. ஆனால் அமராவதி, என்னை வற்புறுத்தாதே, என்னருமை சிநேகிதியே. எனக்குக் கொஞ்சமேனும் மனச்சாட்சி என்பது இருப்பின் நான் உனது காதலை ஏற்கக் கூடாது."
நரேந்திரன் இதைச் சொன்னபோது பெரிதும் உணர்ச்சிவயப்பட்டுப் போனதால் அவனது குரல் தழுதழுத்தது. கண்கள் இலேசாய்ச் சிவந்தன.

"அமராவதி! உன்பெற்றோர்க்கு உனது இந்தத் தகாத – முட்டாள்தனமான – எண்ணம் தெரியவந்தால் அவர்களது முதல் எதிர்ச் செயல் என்னவாக இருக்கும் என்று உனக்குத் தெரியாதா? நான் உடனே இந்த வீட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்பதே அவர்களது விருப்பமாகிவிடும். அது உனக்குச் சம்மதமானது தானா? ஆதரவற்ற நிலையில் இங்கு வந்து தங்கி இருக்கும் நான் மறுபடியும் உயிருக்கு ஆபத்தான நிலையில் கண்டபடி சுற்றுவது உனக்கு இணக்கமானது தானா?"

தலையை உயர்த்திய அமராவதி ஒரு நெடிய பார்வையை அவன்மீது பதித்தாள். 'காதலின் அருமை உனக்குத் தெரியவில்லையே! கொஞ்ச நாள் வாழ்ந்தாலும் மனத்துக்கு இசைந்த துணையோடு வாழ்ந்தோம் என்ற திருப்தி முக்கியமா? இல்லாவிட்டால் உயிருடன் அதிகநாள் வாழ்வது முக்கியமா?' என்ற கேள்விகள் அவளது ஆழ்ந்த பார்வையில் தொக்கி நின்றதாய் நரேந்திரநாத் பானர்ஜிக்குத் தோன்றியது. அவன் கணம் போல் வெட்கிப் போனான்.

அமராவதி சிறிது நேரம் சும்மா இருந்தாள். பிறகு, "ரொம்ப சரி நரேன். நீங்கள் சொல்வதிலும் ஓரளவு நியாயம் இருப்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனாலும் அதற்காக உங்களுக்குப் பிடித்த ஒரு பெண்ணை நீங்கள் நிராகரிக்க வேண்டுமா? நாம் காத்திருக்கலாமே? உங்கள் நிலையில் முன்னேற்றமும் ஒரு ஸ்திரத்தன்மையும் ஏற்பட்ட பிறகு நாம் மணந்து கொள்ளுவதில் உங்களுக்கு என்ன தடை?



பேசத் தகுந்த மனிதர் கிடைத்து அவரோடு பேச வதற்கு நீங்கள் தவறி விடுவீர்களேயானால் தகுதியான ஒரு மனிதரை இழந்து விட்டீர்கள் என்று அர்த்தம்.

பேசத் தகுதி இல்லாத ஒரு மனிதர் கிடைத்து அவரோடு நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் உங்களை நீங்கள் இழந்து விட்டீர்கள் என்று அர்த்தம்.

- 'சிரிக்க ரசிக்க சிந்திக்க' நூலிலிருந்து : பா. குணா.

கஷ்டப்பட்டு
பாதி பணக்காரன்
ஆகி விடுங்கள்
பிறகு முழுப்
பணக்காரனாக
இந்த உலகம் ஆக்கி
விடும்.
- எஸ்டோனியாப்
பழமொழி
- ஆர். பார்த்திபன்

எந்த செடியின்
உபயோகத்தை
இன்னும்
நாம் அறியவில்
லையோ அதையே
களை என்கிறோம்.
- யாரோ
- அ. ஷண்முகசுந்தரம்.

இன்னும் கொஞ்ச நாட்களுக்கு இந்த வீட்டில் பாதுகாப்பாக இருந்துவிட்டீர்களானால், அதன் பிறகு ஒரு தமிழனைப் போல் தமிழ்ப் பேசப் போகும் உங்கள் மேல் போலீசாருக்கு எந்தச் சந்தேகமும் வரப்போவதில்லை. இல்லையா?" என்றாள்.

அவள் குரலில் தெறித்த பிடிவாதமும் அழுத்தமும் அவன் சொல்லப் போகிற எந்த விளக்கத்தையும் அவள் ஏற்கப் போவதில்லை என்பதை உணர்த்தும் வண்ணமாக இருந்தன. நரேந்திரநாத் பானர்ஜியிடமிருந்து ஒரு பெருமூச்சு புறப்பட்டது.

மொட்டை மாடிக்கு வரும் கதவுப் பக்கம் கணம்போல் கவனித்து யாரும் வரவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்ட பின், அவன் தன் கையை நீட்டி அவள் கண்ணீரைத் துடைத்தான். பிறகு, "சரி, உன் விருப்பப்படியே ஆகட்டும். ஆனால் உன் பெற்றோருக்கு இப்போதைக்கு இது தெரிய வேண்டாம்" என்றான்.


அப்போது யாரோ மாடிப்படி ஏறி வரும் காலடியோசை கேட்க, அமராவதி எழுந்துபோய்க் கைப்பிடிச் சுவரின் மீது ஏறி உட்கார்ந்துகொண்டு தனது நாட்குறிப்பேட்டைப் பிரித்து எதையோ கிறுக்கலானாள். நரேந்திரநாத் பானர்ஜி தமிழ் எழுதியபடி கதவுப் பக்கம் பார்த்தான். வந்து கொண்டிருந்தது பாமாதான்.

"என்ன, நரேன்? உன் தமிழ் எந்த மட்டில இருக்கு? அப்படியும் இப்படியுமா தமிழாளுக்கே சரியா உச்சரிக்க வராத 'ழ'வை நன்னா உச்சரிக்கக் கத்துண்டுட்டே. கெட்டிக்காரன்தான். சரி...ஆமா? ஏண்டி, அமராவதி, இங்க உக்காந்துண்டு என்னத்தை எழுதிண்டிருக்கே? இவன் படிப்பையும் கெடுக்கறதுக்கா?..."

"அதெல்லாம் கெட்கல்லேம்மா. அது பாட்டுக்குப் படிக்குது, எழுதுது. என்னை ஒண்ணும் தொந்தரவு பண்லே."

"என்னமோ தெரியல்லேப்பா. அசலாத்துப் பிள்ளைகளையெல்லாம் ஆத்துல சேத்துக்குற டைப் இல்லே நாங்க. உம்மேல உள்ள நம்பிக்கையாலதான்... எம்பிள்ளையையே உன் உருவத்துல பார்க்கிற மாதிரி ஒரு எண்ணத்துலதான்... உன்னை இங்க தங்க வெச்சிருக்கு."

சிறிது நேரம் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்த பின், "இருட்டத் தொடங்கிடுத்து. கீழே போகலாம்" என்றவாறு பாமா எழுந்தாள். அமராவதியும் நரேந்திரநாத் பானர்ஜியும் சிந்தனையுடன் அவளைப் பின் தொடர்ந்தனர்.



"இவ்வளவு சின்ன வயசிலேயே, நம்ம தலைவருக்கு கூன் விழுந்திருச்சே! பார்த்தாயா?"

"கால்லே விழறதுலே, சாதனை படைச்சவர் ஆச்சே! சும்மாவா?"

–ஆர்.அப்துல் சலாம்

பாமாவின் சொற்கள் இருவர் சிந்தனையையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. இது எதில் போய் முடியப் போகிறதோ என்ற கவலை ஏற்பட்டது. அவள் சாடையாக ஓரத்துப் பார்வை பார்த்த போது, அமராவதியின் பார்வையும் கவலையுடன் அவளுடையதைச் சந்தித்து மீண்டது.

அன்றிரவு ராஜாராமனைத் தனியாகப் பார்த்தபோது, பாமா தனது கவலையை அவரிடம் வெளிப்படுத்தினாள். "என்னன்னா, உங்க கிட்ட ஒண்ணு சொல்லணும்."

"சொல்லு."

"நரேந்திரநாத்தை நம்மாத்துல தங்க வெச்சிண்டிருக்கோமே, அக்கம் பக்கத்துல யாரும் நம்ம பொண்ணுகளோட அவனைச் சம்பந்தப் படுத்தி வம்பு பேசாம இருக்கணுமேன்னு கவலையா இருக்கு."

"அக்கம் பக்கத்துக்காரா ஆயிரம் பேசுவா."

"சரி. அக்கம் பக்கத்துக்காராளை விட்டுத் தள்ளுங்கோ. அவனே அமராவதியைக் கல்யாணம் பண்ணி வைங்கன்னு கேட்டுட்டா?"

"இதென்ன அசட்டுக் கேள்வி? அமராவதிக்கும் சம்மதம்னா பண்ணி வெச்சிட வேண்டியது. அவ்வளவுதானே?"

பாமாவின் விழிகள் முழு அளவில் விரிந்தன. "என்னது! என்ன பேத்தறேள்னா? அவன் பெங்கால்காரன். நாம தமிழா. ரொம்ப நன்னாருக்குன்னா நீங்க பேசறது. நீங்களே அவாளைத் தூண்டி விடுவேள் போல இருக்கே? இந்த ஒரு கூத்து நம்மாத்துக்குப் பாக்கி இருக்கா? வேண்டாம். அதை விட அவனை போயிட்டு வாடாப்பான்னு அனுப்பி வெச்சுடலாம்."

ராஜாராமன் அதிர்ந்து போனார். "அப்படி ஏதாவது சந்தேகப் படறியா என்ன?"

"சந்தேகம்னுட்டு இல்லே. ஆனாலும் வயசுப் பையன். வயசுப் பொண்ணு. அஞ்சனா கல்யாணமே வேண்டான்னுட்டா. அதனால அமராவதியைப் பத்தித்தான் கவலையா இருக்கு. பஞ்சும் நெருப்பும் பக்கத்துல பக்கத்துல இருந்தா பத்திக்கத்தானே செய்யும்?"

ராஜாராமன் பேசாதிருந்தார்.

"என்னன்னா பேசாம இருக்கேள்? உங்களுக்கு அதிர்ச்சியா இருக்கா?"

"அப்படி ஒரு உறவு ஏற்பட்டுடுமோங்கிற அதிர்ச்சி இல்லேடி பாமா. 'போயிட்டு வாடான்னு அவனை அனுப்பி வெச்சுடலாம்'னு சொன்னியோல்லியோ? அந்த அதிர்ச்சி... அப்படி ஏதும் மறைமுகமாக்கூட அவன் எதிர்ல சொல்லிடாதே, பாமா. உடனே போயிடுவான். உனக்குத் தெரியாதது இல்லே. ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தா தன்பிள்ளை தானே வளரும் இல்லியா? அவனை நாம காப்பாத்தினா, எங்கேயோ இருக்கிற நம்ம பிள்ளையை வேற யாராவது காப்பாத்துவாடி..." என்று கூறி அவளது மனத்தின் பலவீனமான பகுதியை அவர் தட்டினார்.

பாமாவுக்கு உடனே வாயடைத்துப் போய் விட்டது.

"இத பாரு, பாமா. இன்னொண்ணும் சொல்றேன், கேட்டுக்கோ. அப்படி ஏதாவது அவாளுக்குள்ள ஒரு பிடிப்பு ஏற்பட்டா அவா ஆசைக்கு நாம குறுக்கே நிக்க வேண்டாம். பெரியவளோ கல்யாணம் வேணாம்னுண்டிருக்கா. அவ ஏன் பண்ணிக்கலைன்னு ஆயிரம் கேள்வி கேக்கறதுக்குத்தான் மனுஷா ரெடியா இருப்பாளே தவிர, 'அக்காவுக்கு ஆகாட்டா என்ன? தங்கையை ஏத்துக்கலாம்'கிற எண்ணத்தோட யாரும் வர மாட்டா."

பாமா அவரது அறையைவிட்டு வெளியேறினாள். குசுகுசுவென்று பேச்சுக் குரல் கேட்டது. 'தூங்காமல் அக்காவும் தங்கையும் என்ன பேசுகிறார்கள்?'

பாமா காதுகளைத் தீட்டிக் கொண்டு கவனித்தாள்.

(தொடரும்)

போட்டிக்கதை - 10



இனியும் இருளேபடி

மூடியிருந்த சன்னல் கதவின் ஓட்டை வழியே உள்ளே பரவிய சில்லென்ற காற்று உடல் முழுக்க ஊசி போட்டது.

வாசலில் மிதியடியாகப் போட்டிருந்த சாக்குத் துணியை எடுத்து வந்து சன்னலில் போர்த்த வேண்டும் என்று தோன்றினாலும் எழுந்திருக்க விடாமல் சோம்பல், பாயோடு பிணைத்தது.

கால் கட்டை விரலால் பாவாடையில் முட்டி மோதி, கால்களை உள்வாங்கி மடித்து, குறுக்கிக் கொண்டேன். தாவணியால் இரு காதுகளையும் இறுக்கிக் கொண்டேன்.

தலையணை உறுத்திற்று. ச்சீ! தலையணையா இது? வீட்டின் பழைய துணிகள், என் கிழிந்த தாவணியில் மூட்டையாகி, தலைக்கு முட்டுக் கொடுக்கிறது. தம்பியின் ட்ரௌசர் பட்டன் போலும். என் கன்னம் உறுத்திற்று.

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூபம் கமழ,
துயிலணை மேல் கண்வளரும்...

பெருமாள் கோயில் ஸ்பீக்கர் மேலும், சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள் மேலும் அனாவஸ்யக் கோபம் வந்தது.

ஒரு நல்ல பாயும் மெத்தென்ற தலையணையும் போர்த்திக் கொள்ள புதுப் போர்வையும் கிடைக்குமென்பதற்காகவாவது எனக்குக் கல்யாண ஆசை இன்னமும் மிச்சமிருந்தது.

எல்லா குரூபிகளிடமும் ஏதாவது ஒரு அழகம்சம் இருக்குமென்றும், எல்லா அழகிகளிடமும் ஏதோ ஒரு குரூரம் இருக்குமென்றும் என்றைக்கு இந்த ஆண்கள் புரிந்து கொள்கிறார்களோ, அன்றைக்குத்தான் எனக்குக் கல்யாணம்.

நான் ஸ்கூலுக்குப் போன நாட்களில் மார்க்கெட் தெருவில் இருக்கும் தையற்கடையில் காஜா எடுப்பவன் என்னைப் பார்த்து ரூப்பத்தேரா மஸ்தானா என்று விசிலில் பாடுவான். இந்த பிரபஞ்சத்திலேயே அவன் ஒருவன்தான் கலைஞானமுள்ள ரசிகன். அந்த கலைஞனை இப்பொழுதெல்லாம் காண முடிவதில்லை.

"என்னடி மூதேவி! எழுந்து போய் வாசல் தெளியேன்" - அம்மா என் இடுப்பருகே கிள்ளி, திருப்பள்ளி எழுச்சி பாடினாள்.

இந்தக் குளிரில் கைக்கும் எட்டாமல், காலுக்கும் எட்டாமல் போர்த்திக் கொள்ள ஒன்றுமில்லாமல் விறைத்துக் கிடப்பதை விட, வெளியே பனியில் உயிர்த்து உலவலாம்.

கொட்டாங்கச்சியில் கோலப் பொடியோடு வாசலுக்கு வந்து நின்றேன்.

அந்தரமெங்கும் பனிப்பிசாசின் விசால வியர்வைப் போர்வை.

தரைக்கும் குளிருமோ என்பது போல் எல்லோர் வீட்டு வாசல்களிலும் கோலப் பொடி ஸ்வெட்டர் பின்னிக் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே ரங்கோலி ஸ்வெட்டர்.

சாணி சிம்மாசனத்தில் பூசணி ராணியை அமர்த்தி விட்டு நிமிர்ந்த போது எதிர் வீட்டு கோகிலம் எங்கள் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'இந்த தெருவில் எவளும் என் கோலத்தை மிஞ்சிட முடியாதுடி' என்பது போல் கர்வத்தோடு பார்த்து விட்டுப் போக,

உள்ளே அம்மா காப்பியை ஆற்றிக் கொண்டே அப்பாவுடன் அன்றைக்கான

வே. எழிலரசு

யுத்தத்திற்குச் சல்லடம் கட்டிக் கொண்டிருந்தான்.

"எங்க அண்ணியோட மூத்த மாமியார் மச்சினன் கூட படிச்சதாம் அந்த தம்பி... அதுக்குக் கேக்கறாங்க இவளை..."

"..........."

"என்ன நான் சொல்லிட்டே இருக்கேன். பதிலையே காணோம்?"

அப்பா காப்பி தம்ளரை தூரத் தள்ளி, "ரெண்டாந்தாரமாவா?" என்றார்.

"காப்பியைக் குடிங்க!"

"வேண்டாம். சில்லுன்னு ஆயிடிச்சு."

"ஆமாம். ஆறின கஞ்சி பழங்கஞ்சி. ஊரான் எப்படிக் குடிப்பான்?"

அட, அம்மா எப்படி சிம்பாலிக்காகப் பேசுகிறாள்! என்னை வயசானவள்னு குத்திக் காட்டறதில இவளுக்கென்ன குரூர சந்தோஷம்?

"என்னடி சன்னலோரம்! எந்த ராஜகுமாரன் வருவான்னு தெருவையே பாக்கிறே!?"

அம்மா, அப்பாவை விட்டு விட்டு என் மீது பாய்ந்தாள்.

கனைத்திளங் கற்றெருமை
கன்றுக்கிரங்கி
நினைத்து முலைவழியே
நின்று பால்சோர...

அந்த சவுண்ட் சர்வீஸ் பையனைப் பார்த்து பெருமாள் கோயில் ஸ்பீக்கரை இன்னும் சத்தமாக வைக்கச் சொல்ல வேண்டும். கேக்கலையாம்மா உனக்கு? அர்த்தம் புரியலையா? ஏன் இப்படி நெருப்பா வதைக்கிற? நீயே இப்படிச் சுட்டால்? ஊரெல்லாம் எத்தனை நாக்குகள்? அத்தனையிலும் எத்தனை திராவகம்? சின்ன வயதில் என் மேல் எத்தனை பாசமாய் இருந்தாய்? இத்தனை வயசிலும் எனக்கு கல்யாணமாகவில்லை என்ற ஆதங்கமா உன் வார்த்தைகளில் விஷமாக வடிகிறது?

சிமிழிலிருந்து குங்குமம் எடுத்து, இட்டுக் கொண்டு பார்த்த போது, குங்குமம் மட்டும் பளிரெனத் தெரிய, சிரித்தது கண்ணாடி.

கண்ணாடி.... என்னைப் பார்த்து எப்பொழுதும் நகைக்கும் வஸ்து.

கீழே நழுவ விட்டேன். விழுந்து, உடைந்து, சில்லுகளாகி, ஒவ்வொரு சில்லிலும் நான்...

ரெண்டாந்தாரமாய் வாழ்க்கைப்படப் போகிற கிருஷ்ணவேணி...

கண்ணாடி உடைந்த சப்தம் கேட்டு, அம்மா கத்தினாள்.

"வெள்ளிக்கிழமையும் அதுவுமா எதைப் போட்டுடி உடைச்சே?"

உடைக்கணும்னு முடிவு பண்ணிட்டேன். இதிலே கிழமை என்ன வேண்டிக்கிடக்கு?

ஹில்லி பாஸ்ஷர் என்ற பெண்மணி வாழ்க்கையில் எக்கச்சக்கமான துன்பங்களை அனுபவித்தவர். குடிகாரக் கணவன், கொடுமைக்காரனும் கூட. அவனிடமிருந்து ஒரு வழியாக விவாகரத்து பெற்றார். இரண்டு மகன்களில் ஒருவன் தன் இருபதாவது வயதில் தற்கொலை செய்து கொள்ள, மற்றவனோ நுரையீரல் புற்றுநோயால் இறந்து விட்டான். மனமொடிந்து போன ஹில்லி, ஒரு மனநல பெண் மருத்துவரிடம் சென்றார். "நான் அமைதியாக இறப்பதற்கு உதவி செய்யுங்கள்" என்று மன்றாடினார்.

அடுத்த நான்கு மாதங்கள் மனநல மருத்துவர் பலவிதங்களில் ஹில்லியின் முடிவை மாற்ற முயன்றார். முடியவில்லை. மருந்துகளை உட்கொள்ள மறுத்து விட்டார் ஹில்லி. மனநல மருத்துவர், தன் சக மருத்துவர்கள் ஏழு பேர்களை ஆலோசனை கேட்க, அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் "ஹில்லியைக் குணப்படுத்துவது என்பது இயலாத காரியம்" என்று கூறிவிட்டனர். ஒரு முடிவுக்கு வந்த மனநல மருத்துவர், ஹில்லிக்கு 20 தூக்க மாத்திரைகளையும், ஒருவித விஷத்தன்மை கொண்ட திரவத்தையும் கொடுத்தார். அமைதியாக இறந்தார் ஹில்லி!



மனநல மருத்துவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. ஆனால் நெதர்லாந்து நீதிமன்றம், "அவர் குற்றமற்றவர்" என்று தீர்ப்பளித்திருக்கிறது. இந்த பரபரப்பான தீர்ப்பு குறித்து நீதித்துறை மற்றும் மனநலத்துறையைச் சேர்ந்த இருவரிடம் கருத்து கேட்டோம்.

அமைதியாகச் சாவதற்கு உரிமையில்லையா?

நீதிபதி கிருஷ்ணசாமி ரெட்டியார் :

"தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தால் தண்டனை என்ற இந்திய பீனல் கோடின் 307ம் பிரிவைச் சமீபத்தில் நீக்கியிருக்கிறார்கள். இது ஒரு அபத்தமான பிரிவு என்பதுதான் முன்னமேயே என் கருத்து. எந்த அளவுக்கு மனமொடிந்து போனால் ஒருவர் தற்கொலை முடிவுக்கு வருவார்? அந்த நிலையில் உள்ள ஒருவரை மீண்டும் ஒரு தண்டனைக்கு ஆளாக்குவது நியாயமில்லையே? எனவே இதுபோன்ற வழக்குகளில் தீர்ப்பளிக்க நேரும்போது (சட்டத்தை மீற முடியாது என்பதால்) எச்சரிக்கை, சிறிய அபராதம் என்பது போல் சிம்பாலிக்காக சிறு தண்டனைகளை மட்டுமே அளிப்பது என் வழக்கம்.

என்னைப் பொறுத்தவரை சட்டப் புத்தகங்களை விட மனிதாபிமான நோக்கில் வழக்குகளை அலசி ஆராய்ந்து முடிவுக்கு வருவதைத்தான் விரும்புவேன்.

ஒருவரது நோய் தீவிரமானதாகவும், குணப்படுத்த முடியாததாகவும் இருந்து, அவர் அமைதியாக இறக்க ஆசைப்பட்டால் மருத்துவர்கள் கருணைக் கொலையில் ஈடுபடலாம் என்ற சட்டம் சில நாடுகளில் இருக்கிறது. உடல்வலியின் தீவிரத்துக்கு மனவலியின் தீவிரம் எந்த விதத்திலும் குறைந்ததல்ல.



• கிருஷ்ணசாமி ரெட்டியார்

• பாலன்

சொல்லப் போனால் மனதின் பாதிப்பு மேலும் கடுமையானது என்று கூடச் சொல்லலாம்.

ஆனால் ஒன்று. ஒருவரது வியாதி சித்ர வதை தரக்கூடியது, தீர்க்க முடியாதது என்பதை உறுதியாகச் சொல்லி விட முடியும். எனினும், மனநிலை என்பது ஒருவேளை மாறலாம். இன்று தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஒருவருக்குத் தோன்றலாம். ஆனால் நாளைக்கே அவர் தன் முடிவை மாற்றிக் கொள்ளலாம்.

குறிப்பிட்ட வழக்கில் அந்த மனநல மருத்துவர் நான்கு மாதங்கள், அந்தப் பெண்மணிக்கு "கௌன்ஸெலிங்" செய்திருக் கிறார். தன் மருத்துவத் துறைத் தோழர்களை யும் கலந்து ஆலோசித்திருக்கிறார். எனவே அவரது நோக்கத்தில் சந்தேகப்பட வாய்ப்பில்லை; அவரது செயல் குற்றமற்றது என்பதுதான் என் கருத்து.

மனநல மருத்துவர் கே. பாலன் :

நோயாளி மருத்துவரை எதற்காக நாடுகிறார்? தன் உடல் அல்லது மனநலக் குறைவு நீக்கப்பட வேண்டும், தான் குணமாக வேண்டும் என்பதற்காகத்தானே. மருத்துவரால் அந்த நோயாளியைக் குணமாக்க முடியவில்லை என்று வைத்துக் கொள்வோம். அவரது துன்பத்தைப் போக்குவதை யாவது செய்யலாம் என்று தீர்மானிப்பது தவறல்ல. குறிப்பிட்ட வழக்கில் மனநல மருத்துவரால் ஹில்லியை குணமாக்க முடியாது என்ற நிலை வந்ததும், அவரது மனக் கஷ்டங்களிலிருந்து அவருக்கு சாவு மட்டுமே நிவாரணம் தரும் என்று எண்ணிச் செயல் பட்டிருக்கிறார். அதுவும் அந்த நோயாளியே தனக்கு வலியில்லாத மரணம் வேண்டும் என்று கேட்டுக் கொள்ள, அந்த கௌரவ மான முடிவு அவருக்கு ஏற்பட உதவியிருக் கிறார்.

ஆனால் நம் நாட்டுச் சட்டப்படி இங்கு அத்தகைய செயல் சாத்தியமில்லை. இந்த விஷயத்தில் சட்டம் மாற்றப்பட வேண்டும் என்பது என் கருத்து. அப்படி சட்டம் மாற்றப்பட்டால் அதை யாரும் தவறாகக் கையாளாமல் இருக்க வேண்டும். எனவே கருணைக் கொலை குறித்த முடிவை ஒரு மருத்துவர் தனியாக எடுப்பதற்குப் பதிலாக, சில மருத்துவர்கள் அடங்கிய ஒரு குழுதான் எடுக்கலாம் என்று தீர்மானிக்கலாம்.

இந்த விஷயத்தில் தர்மம், மருத்துவம் தவிர மற்றொரு விஷயமும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியது. சம்பந்தப் பட்டவர் இறக்க விரும்பினாலும், அவரது உறவினர்கள் அதற்கு ஒத்துக் கொள்ள வில்லையானால், அவரது எண்ணமும் மதிக்கப்பட வேண்டியதே.


— அருண் சரண்யா

"உங்க கட்சி தலைவர் செய்யற அநியாயங்களைப் பார்த்து, நீங்க, உங்க கோபத்தை எல்லாம் மனசுக்குள்ளேயே அமுக்கி அமுக்கி வெச்சுக்கிறதனால உங்களுக்கு பி.பி. அதிகமா இருக்கு. அதனால...."

"அதனால...?"

"அநியாயங்களுக்குத் துணை போயிடுங்க!"

— சேரை முத்து மணாளன்





"கஷ்டப்பட்டு திருடனைப் பிடிக்கப் போற நேரத்துல ஒருத்தர் வந்து கெடுத்துட்டார்ன்னு சொல்றீங்களே, யாரு அது?"

"எங்க ஊரு எஸ்.ஐ தான்."

— அரிசி ஸ்ரீராம்

பார்த்திபன் கனவு

5. மாரப்ப பூபதி

வாசலில் குதிரையில் வந்திறங்கியவன் திடகாத்திரமுள்ள யௌவன புருஷன்; வயது இருபத்தைந்து இருக்கும். ஆடை ஆபரணங்கள், உயர்ந்த ராஜரீக பதவியைக் குறிப்பிட்டன. ஆசாபாசங்களிலும் மதமாச்சரியங்களிலும் அலைப்புண்ட உள்ளத்தை முகக் குறி காட்டியது.

''சேனாதிபதி வரவேணும்'' என்று சொல்லிக் கிழவன், வந்தவனை வரவேற்று உள்ளே அழைத்துக் கொண்டு வந்தான்.

''இனிமேல் என்னை அப்படிக் கூப்பிடாதே! நான் சேனாதிபதி இல்லை; நான் மாரப்ப பூபதி இல்லை, நான் என் தகப்பனுக்குப் பிள்ளையே இல்லை!'' என்று கோபமான குரலில் சொல்லிக் கொண்டு மாரப்ப பூபதி உள்ளே வந்தான். முற்றத்தில் ஏற்கெனவே கிழவன் உட்கார்ந்திருந்த பீடத்தில் அமர்ந்தான்.

"யுவராஜா ரொம்பக் கோபமாய் இருப்பது போல் தெரிகிறது!"

"யுவராஜாவா? யார் யுவராஜா? நானா? நேற்றுப் பிறந்த அந்தப் பரதைப் பயல் அல்லவா யுவராஜா? இளவரசர் விக்கிரம சிங்கர் வாழ்க! ஜய விஜயீபவ!" என்று பரிகசிக்கும் குரலில் கூறி விட்டு மாரப்ப பூபதி, 'இடி இடி'யென்று சிரித்தான்.

சற்றுப் பொறுத்து, "அது போகட்டும், ஆச்சாரி! உன் சோழி என்ன தெரிவிக்கிறது? அதைச் சொல்லு!" என்றான்.

வீரபத்திர ஆச்சாரி கொல்லு வேலை செய்ததுடன், சோதிட சாஸ்திரத்தில் வல்லவன் என்று பெயர் வாங்கியிருந்தான். சோழிகளை வைத்துக் கொண்டு அவன் கணக்குப் போட்டு ஜோசியம் பார்ப்பது வழக்கம்.

"யுவராஜா! எதற்காக இந்தப் பிரமை உங்களுக்கு...?" என்று ஆரம்பித்தான் கிழவன்.

"அந்தக் கதையெல்லாம் அப்புறம் வைத்துக் கொள்ளலாம். நீ ஏதாவது பார்த்தாயா இல்லையா? வெறுமனே என்னை அலைக்கழிக்க உத்தேசமா?"

''பார்த்தேன் யுவராஜா! உங்களுக்கு என்ன வேணுமோ, கேட்டால் சொல்லுகிறேன்."

''முக்கியமான விஷயம் சண்டைதான். அதன் முடிவு என்ன ஆகும்? இதைத் தெரிந்து சொல்ல முடியாவிட்டால், உன் ஜோசியத்தினால் என்ன பிரயோஜனம்? கவடிகளையும் சோழிகளையும் தூக்கி நானே காவேரியாற்றில் எறிந்து விடுகிறேன்!" என்றான் மாரப்பன்.

''அப்படியே செய்து விடுங்கள், யுவராஜா! எனக்கு ரொம்ப அனுகூலமாயிருக்கும். பாருங்கள்! என்னுடைய சொந்த விஷயத்தில் இந்த சாஸ்திரம் பிரயோஜனப்படவில்லை. ஒரே நாளில் குடும்பம் முழுவதும் அழிந்து விட்டது. குலத்தை வளர்ப்பதற்கு ஒரு பெண் குழந்தைதான் மிஞ்சியிருக்கிறது."

''வள்ளி சுகமாயிருக்கிறாளா, ஆச்சாரி?'' என்று மாரப்ப பூபதி கேட்டான். அப்பொழுது அவன் முகத்தில் ஒரு விகாரம் காணப்பட்டது.

"ஏதோ இருக்கிறாள்" என்றான் கிழவன்.

''ஆமாம், பொன்னன் சண்டைக்குப் போய் விட்டால் வள்ளி என்ன செய்வாள்?''

''அதற்கென்ன, யுவராஜா! வள்ளியைக் காப்பாற்றக் கடவுள் இருக்கிறார்; இந்தக் கிழவனும் இருக்கிறேன்!'' என்று அழுத்திச் சொன்னான் வீரபத்திர ஆச்சாரி.

''ஆமாம்; நீ இருக்கும் போது அவளுக்கு என்ன வந்தது? இருக்கட்டும்; ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறோம். இந்தச் சண்டையின் முடிவு என்ன ஆகும்? உன் சோழிக் கணக்கில் ஏதாவது தெரிகிறதாயிருந்தால் சொல்லு; இல்லாவிட்டால் உன் ஜோசியக் கடையைக் கட்டு!''

அமரர் கல்கி

"கடையை அப்போதே கட்டி விட்டேன், யுவராஜா! உங்களுடைய தொந்தரவினால் தான் மறுபடியும் அதைத் திறந்தேன்!"

"திறந்ததில் என்ன தெரிந்தது?"

"கிரகங்களின் சேர்க்கை ரொம்பப் பயங்கரமான முடிவைக் காட்டுகிறது. சண்டையில் ஒரு பக்கத்துச் சேனை அடியோடு அழிந்து போகும், யுத்தகளத்துக்குப் போனவர்களில் ஒருவராவது திரும்பி வர மாட்டார்கள். ஆனால், எந்தப் பக்கத்துச் சேனை என்று எனக்குத் தெரியாது."

"அது எனக்குத் தெரியும். எந்தப் பக்கத்துச் சேனை அழியும் என்று சொல்லுவதற்கு நீயும் வேண்டாம்; உம் சோழியும் வேண்டாம். திரும்பி வராமல் நிர்மூலமாகப் போகிறது சோழ சைன்யந்தான். அந்தப் பெரும் புண்ணியத்தைத்தான் உங்கள் பார்த்திப சோழ மகாராஜா கட்டிக் கொள்ளப் போகிறார்!"

"யுவராஜா! நீங்களே இப்படிச் சொல்லலாமா? நமக்குள் எவ்வளவு மனஸ்தாபங்கள் இருந்தாலும், பகைவனுக்கு முன்னால்...."

"யார் பகைவன்? பல்லவ சக்கரவர்த்தியா நமக்குப் பகைவன்? இல்லவே இல்லை! சோழ நாட்டுக்கு இப்போது பெரிய பகைவன் பார்த்திபன்தான். இவன் கையிலே வாள் எடுத்து அறிய மாட்டான்; வேல் வீசி அறிய மாட்டான்! இப்பேர்ப்பட்ட வீராதி வீரன் பல்லவ சைன்யத்துடன் போர் செய்யக் கிளம்புகிறான். பல்லவ சைன்யம் என்றால் லேசா! சமுத்திரத்தின் மணலை எண்ணினாலும் எண்ணலாம், பல்லவ சைன்யத்திலுள்ள வீரர்களை எண்ண முடியாது. காவேரியிலிருந்து கோதாவரி வரையில் பரந்து கிடக்கும் பல்லவ சாம்ராஜ்யம் எங்கே? ஒரு கையகலமுள்ள சோழநாடு எங்கே? நரசிம்ம சக்கரவர்த்திதான் லேசுப்பட்டவரா? நூறு யோசனை தூரம் வடக்கே சென்று ராட்சதப் புலிகேசியைப் போர்க்களத்தில் கொன்று, வாதாபியைத் தீ வைத்துக் கொளுத்தி விட்டு வந்தவர். அவருடன் நாம் சண்டை போட முடியுமா? யானைக்கு முன்னால் கொசு!...."

"யுவராஜா! இதையெல்லாம் என்னிடம் ஏன் சொல்லுகிறீர்கள்? மகாராஜாவிடம் சொல்வதுதானே?"

"மகாராஜாவிடம் சொல்லவில்லையென்றா நினைத்துக் கொண்டாய், கிழவா? சொன்னதன் பலன்தான் எனக்குச் சேனாதிபதிப் பதவி போயிற்று. மகாராஜாவே சேனாதிபதிப் பதவியையும் ஏற்றுக் கொண்டு விட்டார்! சைனியத்தை அவரே நடத்திக் கொண்டு யுத்த களத்துக்குப் போகப் போகிறாராம்! தாராளமாய்ப் போகட்டும். இந்தப் பிரமாத சேனாதிபதிப் பதவி இல்லையென்று யார் அழுதார்கள்?"

"அப்படியானால் யுவராஜா! நீங்கள் யுத்தத்துக்கே போக மாட்டீர்களோ?"

"நானா? நானா? என்னைக் கூப்பிட்டால் போவேன்; கூப்பிடாவிட்டால் போக மாட்டேன்... கிழவா! சண்டையின் முடிவைப் பற்றிச் சொன்னாயே, அதை இன்னொரு தடவை விவரமாய்ச் சொல்லு!"

"ஆமாம், யுவராஜா! ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் யுத்தகளத்தில் அழிந்து போவார்கள். ஒருவராவது உயிரோடு திரும்பி வர மாட்டார்கள்!"

"உயிரோடு திரும்பி வர மாட்டார்களா? பின் உயிரில்லாமல் திரும்பி வருவார்களோ? ஹா ஹா ஹா!" என்று மாரப்பபூபதி உரக்கச் சிரித்தான். பிறகு, "ஆமாம் ஆமாம்; நான் யுத்தத்தில் செத்துப் போனால் நிச்சயமாய்ப் பிசாசாகத் திரும்பி வருவேன்; திரும்பி வந்து வள்ளியைப் பிடித்துக் கொண்டு ஆட்டுவேன்!" என்று கூறி மறுபடியும் பயங்கரமாகச் சிரித்தான்.

சமையலறையிலிருந்து இதைக் கேட்டுக் கொண்டிருந்த வள்ளி தன் இரண்டு கையையும் நெறித்து, "உன் கழுத்தை இந்த மாதிரி நெறித்துக் கொல்லுவேன்!" என்று முணு முணுத்தாள். கொஞ்சம் காது மந்தமுள்ள கிழவி, "என்ன சொல்லுகிறே, வள்ளி?" என்று கேட்கவும், வள்ளி அவளுடைய வாயைப் பொத்தி, "சும்மா இரு!" என்றாள்.

"உள்ளே யார் பேசுகிறது?" என்று கேட்டான் மாரப்ப பூபதி.

"யார் பேசுவார்கள்? என்னைப் பிடித்திருக்கிறதோ, இல்லையோ, ஒரு கிழப் பிசாசு, அதுதான் தனக்குத்தானே பேசிக் கொண்டிருக்கும்!" என்றான் கிழவன்.

"சரி, எனக்கு நேரமாச்சு; போகவேணும். என் கிரக பலன்களைப் பற்றி நீ சொன்னதெல்லாம் நிஜந்தானே ஆச்சாரி! பொய் சொல்லி ஏமாற்றியிருந்தாயோ...!"


ராப்பிச்சை :

"ஒரு லோக்கல் கால் பேசிக்கலாமா?"

"என்ன விஷயம்?"

"அடுத்த தெருவுல சமையல் ரெடியா யிடுச்சான்னு விசாரிக்கணும்!"

— அம்பை தேவா



"தங்களை ஏமாற்றி எனக்கு என்ன ஆக வேணும் யுவராஜா!"

மாரப்ப பூபதி எழுந்து நின்று சுற்று முற்றும் பார்த்தான். முற்றத்தில் அடுக்கி வைத்திருந்த வாள்களையும் வேல்களையும் கத்தி, கேடயங்களையும் பார்த்து விட்டுச் சிரித்தான். "ஆஹா! ரொம்ப முனைந்து வேலை செய்கிறாயாக்கும்! கத்தி! கேடயம்! வாள்! வேல்! இந்த வாழைப்பட்டைக் கத்திகளையும், புல் அரியும் அரிவாள்களையும் வைத்துக் கொண்டுதான் பார்த்திப மகாராஜா, பல்லவ சக்கரவர்த்தியை ஜயித்து விடப் போகிறார்! நல்ல வேடிக்கை! ஹா ஹா ஹா!" என்று உரக்கச் சிரித்துக் கொண்டே ஒரு பக்கத்தில் அடுக்கி வைத்திருந்த வாள்களைக் காலால் உதைத்துத் தள்ளினான். அப்படியே வாசற்பக்கம் போனான்.

உலைக் களத்தில் கிளம்பும் அனற் பொறிகளைப் போல் கிழவன் கண்களிலே தீப்பொறி பறந்தது.

6. போர் முரசு

வீட்டு வாசலிலிருந்து குதிரை கிளம்பிப் போன சப்தம் கேட்டதும், வள்ளி முற்றத்துக்கு வந்தாள். மாரப்ப பூபதி உதைத்துத் தள்ளிய கத்திகளில் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு, "தாத்தா! இந்தக் கத்தி, கேடயம் எல்லாம் நீ செய்து என்ன பிரயோஜனம்? நமது மகாராஜாவைப் பற்றி அப்படிக் கேவலமாய்ப் பேசியவனைச் சும்மா தானே விட்டு விட்டாய்?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

"ஏன் வள்ளி உனக்கு இவ்வளவு கோபம்? நீ சொன்னதைத்தானே நமது பழைய சேனாதிபதியும் சொன்னார், - சண்டை வேண்டாம் என்று?" என்றான் கிழவன்.

"சேச்சே! நான் சண்டை வேண்டாமென்று சொன்னேனா? சண்டை எதற்காக என்று தெரியாமல்தானே கேட்டேன்!" என்று வள்ளி சொன்ன போது அவள் கண்களில் நீர் ததும்பிற்று.

"ஆமாம், வள்ளி! அதை நான் சொல்ல ஆரம்பித்த போதுதான் இந்தப் பாவி வந்து விட்டான். வாதாபிச் சக்கரவர்த்தி புலிகேசி, தென்தேசத்தின் மீது படையெடுத்து வந்து பல அட்டூழியங்கள் செய்து விட்டுத் திரும்பப் போனதைச் சொன்னேனல்லவா? அதற்குப் பழிக்குப் பழி வாங்குவதற்காக நரசிம்ம சக்கரவர்த்தி வெகுகாலம் ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். கடைசியில் ஆறு வருஷத்துக்கு முன்பு அவர் வாதாபியின் மேல் படையெடுத்துச் சென்றார். அப்போது நமது



"ஆபிசிலே கதைப் புத்தகம் படிக்கிறீராமே?"

" என்ன ஸார் பண்றது, கதைப் புத்தகத்திலே ஒண்ணு ரெண்டு பக்கம் படிச்சாத்தான் எனக்கு தூங்குறதுக்கு மூடே வரும்!"

— கு. அருணாசலம்

பார்த்திப மகாராஜாவையும் தமது படைகளுடன் வந்து சேர்ந்து கொள்ளும்படி ஓலை அனுப்பினார். அதற்குப் பார்த்திப மகாராஜா அப்படியே செய்வதாகவும், ஆனால் அதற்குப் பிரதியாக அன்று முதல் உறையூரிலிருந்து கப்பம் வாங்குவதை நிறுத்தி விட வேண்டுமென்றும், சோழ நாட்டின் புலிக் கொடிக்குச் சமமரியாதை கொடுக்க வேண்டுமென்றும் செய்தி அனுப்பினார். இதை நரசிம்ம சக்கரவர்த்தி கவனிக்கவேயில்லை. மறு ஓலை கூட அனுப்பாமல் படை கிளப்பிப் போய் விட்டார். அன்று முதல் பார்த்திப மகாராஜாவும் காஞ்சிக்குக் கப்பம் அனுப்புவதை நிறுத்தி விட்டார். அது காரணமாகத்தான் யுத்தம் வந்திருக்கிறது, வள்ளி! இப்போது நீயே சொல்லு. பார்த்திப மகாராஜா முன் வைத்த காலைப் பின்வைத்துச் சக்கரவர்த்தியிடம் சரணாகதி அடைந்து விடலாமா? நமது சிராப்பள்ளி மலையில் போட்ட புலிக் கொடியைத் தாழ்த்திப் பல்லவர்களின் எருதுக் கொடியை மறுபடியும் பறக்க விடலாமா? அந்த அவமானத்தைச் சகித்துக் கொண்டாவது இந்தச் சோழ தேசத்து மக்கள் எதற்காக உயிரை வைத்துக் கொண்டிருக்க வேண்டும்?"

"அந்த நியாயமெல்லாம் எனக்குத் தெரியாது, தாத்தா! நமது பார்த்திப மகாராஜா என்ன செய்கிறாரோ, அதுதான் சரி. அவருக்கு விரோதமாய்ப் பேசுகிறவர்கள் எல்லாரும் பொல்லாத பாவிகள். அவர்கள் நரகத்துக்குத்தான் போவார்கள். இந்த மாரப்ப பூபதியை நீ சும்மா விட்டு விட்டாயே என்று எனக்கு இருக்கிறது தாத்தா! நமது மகாராஜா எவ்வளவு நல்லவர் தெரியுமா...?"

"ஆமாம்; நமது மகாராஜா ரொம்ப நல்லவர்தான். ஆகையினால்தான் இந்தக் குலங்கெட்ட மாரப்பனுக்கு இவ்வளவு இடங்கொடுத்துத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டு கூத்தாடினார்!..."



"என்ன சொல்லுகிறாய், தாத்தா?"

"சரியாகத்தான் சொல்லுகிறேன். இந்த மாரப்ப பூபதி நமது மகாராஜாவின் சொந்தச் சகோதரன் அல்ல. பழைய மகாராஜா ஐம்பது வயதுக்கு மேல் சபலம் தட்டி யாரோ ஒரு மூதேவியைக் கலியாணம் செய்து கொண்டார். ஊரில் யாருக்குமே அந்தக் கலியாணம் பிடிக்கவில்லை. அந்த மூதேவியின் பிள்ளைதான் இந்த மாரப்பன். பழைய மகாராஜா செத்துப் போகும் போது, பார்த்திபருக்குப் பிள்ளைக் குழந்தையில்லா விட்டால் இவனுக்குப் பட்டத்தைக் கொடுக்க வேணுமென்று சொல்லி விட்டுப் போனாராம். விக்கிரம இளவரசர் பிறக்கும் வரையில் இவன்தான் 'யுவராஜா'வாக விளங்கினான். பார்த்திப மகாராஜா எவ்வளவோ இவனிடம் அன்பு காட்டிக் கௌரவம் அளித்துச் சேனாதிபதிப் பதவியும் கொடுத்திருந்தார். இவனோ நன்றிகெட்ட பாதகனாயிருக்கிறான். குலத்தின் குணம் எங்கே போகும்?"

"இவனோடு உனக்கு என்னத்திற்காகச் சகவாசம் தாத்தா? இவனுக்கு நீ ஜோசியம் சொல்லுவது என்ன வேண்டிக் கிடந்தது?"

"உன்னால் ஏற்பட்ட சகவாசந்தான் வள்ளி!" என்றான் கிழவன்.

வள்ளி திடுக்கிட்டு, "என்னால் ஏற்பட்டதா? நன்றாயிருக்கிறதே கதை!" என்றாள்.

"உன்னால் ஏற்பட்டதுதான். இத்தனை நாளும் உன்னிடம் சொல்லாமல் வைத்திருந்ததை இப்போது சொல்லப் போகிறேன், வள்ளி! காலம் ரொம்ப அபாயமான காலம். நமது மகாராஜாவுக்கு என்ன நேருமோ, ராஜ்யம் என்ன கதியடையுமோ, தெரியாது. இந்த மாரப்ப பூபதி யுத்தத்துக்குப் போக மாட்டான் என்று மட்டும் எனக்கு நிச்சயமாய்த் தெரியும். நீ இவன் விஷயத்தில் ரொம்ப எச்சரிக்கையாயிருக்க வேண்டும்."

"என்ன தாத்தா, ரொம்பப் பயமுறுத்துகிறாய்? இந்தக் கரிமுஞ்சியிடம் எனக்கு என்ன பயம்?" என்று வள்ளி கேட்டாள்.

"நான் சொல்கிறதைக் கொஞ்சம் கேள், அம்மா! ஒரு காலத்தில் இந்த மாரப்ப பூபதி தனக்கு உன்னைக் கட்டிக் கொடுக்க வேணுமென்று கேட்டுக் கொண்டிருந்தான்..."

"அவன் தலையிலே இடி விழ!" என்றாள் வள்ளி.

"அவன் தலையிலே இடி விழவில்லையே, அம்மா! என் தலையிலே அல்லவா விழுந்தது! கிரக சஞ்சார ரீதியாக அப்போது நம் குடும்பத்துக்கு ஏதோ பெரிய விபத்து வரப் போகிறதென்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இந்த மாரப்ப பூபதி தன் ஆட்களை அழைத்துக் கொண்டு வந்து உன்னைத் தூக்கிக் கொண்டு போவதாக இருந்தான், இதுவும் எனக்குத் தெரிந்தது. நீயும் உன் தமையன்மார்களும் அப்போது வீட்டில் இருந்தால் ரத்தக்களரியாகுமென்று எண்ணித்தான் எல்லோரையும் அக்கரையில் நடந்த கலியாணத்துக்குப் போங்கள் என்று அனுப்பினேன். யமன் நடு ஆற்றில் சூறாவளிக் காற்றாக வந்தான். உன் அண்ணன்மார் எல்லாரும் செத்துப் போனார்கள், சுவாமி உன்னை மட்டும் எனக்குக் கொடுத்தார்..."

இப்படிச் சொல்லி விட்டுக் கிழவன் பெருமூச்சு விட்டான். ஆகாயத்தைப் பார்த்து ஏதோ யோசனையில் ஆழ்ந்தான்.

வள்ளி, "இத்தனை நாளும் சொல்லவில்லையே, தாத்தா? இவன்தானா என் அண்ணன்மார்களுக்கெல்லாம் யமனாக வந்தவன்? அப்புறம் என்ன நடந்தது?" என்று கேட்டாள்.

"நீங்கள் எல்லோரும் படகேறிப் போன பிறகு நான் எதிர்பார்த்தபடியே இவன் தன் ஆட்களுடன் வந்தான். வீட்டில் நீ இல்லை என்று கண்டதும் தம், தம் என்று குதித்தான். அவனைச் சமாதானப்படுத்துவதற்காக நான் சோதிட சாஸ்திரத்தை உபயோகப்படுத்தினேன். 'நீ பெரிய சக்கரவர்த்தியின் மருமகன் ஆகப் போகிறாய், அப்பா! இந்த அற்ப ஆசைகளையெல்லாம் விட்டு விடு' என்று சொன்னேன். அது முதல் இவன் என்ன வெல்லாமோ ஆகாசக் கோட்டைகள் கட்ட ஆரம்பித்து விட்டான். ஜோசியம் கேட்பதற்கு அடிக்கடி வந்து என் பிராணனை வாங்கிக் கொண்டிருக்கிறான்."

"இப்போதுதான் அவன் என்னைப் பற்றிப் பேசியதன் அர்த்தம் புரிகிறது, தாத்தா! ஓடக்காரர் யுத்தத்துக்குப் போய் விட்டால் நான் என்ன செய்வேன்? நீதான் என்னைக் காப்பாற்றவேணும்" என்று சொல்லிக் கிழவனுடைய கையை வள்ளி கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் அவளுடைய உடம்பு நடுங்கிற்று.

கிழவன், "பைத்தியமே! ஏன் இப்படி நடுங்குகிறாய்? பொன்னன் சண்டைக்குப் போக மாட்டான். அவனை மகாராஜா அழைத்துக் கொண்டு போக மாட்டார். என் குடும்பத்துக்கு நேர்ந்த பெரிய விபத்து மகாராஜாவுக்குத் தெரியும். என் குலத்தை வளர்க்க நீ ஒருத்திதான் இருக்கிறாய் என்றும் தெரியும். ஆகையால்தான் பொன்னனைச் சண்டைக்கு வர வேண்டாம் என்றார். நிச்சயமாக அழைத்துப் போக மாட்டார்!" என்றான்.



"நாட்டில் பிரச்னைகளை எப்படி சமாளிப்பது அமைச்சரே?"
"ஆராய்ச்சி மணியை யாருக்கும் எட்டாத உயரத்தில் கட்டி விடலாம், மன்னா!"
— வலங்கைமான் நூர்தீன்

அச்சமயம் வாசலில் முரசடிக்கும் ஓசை கேட்டது. பின்வருமாறு கூவும் குரலும் கேட்டது :- "வெற்றிவேல்! வீரவேல்! யுத்தம் வருகுது! யுத்தம் வருகுது! சோழ தேசத்தின் மானத்தைக் காக்க யுத்தம் வருகுது! படையில் சேர்வதற்கு மீசை முளைத்த ஆண் பிள்ளைகள் எல்லோரும் வரலாம். நொண்டி, குருடு, சப்பாணி, ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை இவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் வரலாம். உடம்பிலே சுத்த ரத்தம் ஓடுகிறவர்கள் எல்லோரும் வரலாம். வெற்றிவேல்! வீரவேல்!" -இதைத் தொடர்ந்து முரசின் சப்தம் ஊர் அதிரும்படியாக எழுந்தது.

இந்தப் போர்முழக்கத்தைக் கேட்ட வள்ளியும் கிழவனும் தெருப் பக்கம் சென்றார்கள். முரசு யானையும் அதைச் சுற்றி சில வீரர்களும் போய்க் கொண்டிருந்தார்கள். முரசும் முரசு அடித்தவனும் அறைகூவியவனும் யானைமேல் இருந்தனர். இந்த ஊர்வலம் தெருக்கோடி போகும்வரையில் பாட்டனும் பேத்தியும் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

ஊர்வலம் தெருக்கோடியில் திரும்பியதும் கிழவன் ஒரு பெருமூச்சு விட்டு விட்டுச் சொன்னான் : "வள்ளி, உன்னைப் பொன்னனும் பகவானும் காப்பாற்றுவார்கள்! இந்த யுத்தத்தில் சேர்ந்து வீர சொர்க்கம் அடைய என் குடும்பத்திலே வேறு யாரும் இல்லை, நான்தான் போகப் போகிறேன்" என்றான்.

தெற்கு வானத்தில் திடீரென்று ஒரு நட்சத்திரம் நிலைபெயர்ந்தது; ஒரு வினாடி நேரம் அது பளீரென்று ஒளி வீசி வான வெளியில் அதிவேகமாய்ப் பிரயாணம் செய்தது; அடுத்த வினாடி மாயமாய் மறைந்தது.

இதைப் பார்த்த வள்ளிக்கு உடம்பு சிலிர்த்தது.

அதே சமயத்தில் அதே காட்சியைப் பொன்னனும் பார்த்து உடல் சிலிர்த்தான்.


அப்போது அவன் உறையூர் ராஜ வீதிகளின் வழியாகப் போய்க் கொண்டிருந்தான்.

பௌர்ணமிக்கு இன்னும் நாலு தினங்கள் தான் இருந்தன. சுக்கில பட்சத்துச் சந்திரன் வானவெளியில் ராஜ ஹம்சத்தைப் போல் சஞ்சரித்து வெள்ளி நிலவைப் பொழிந்து கொண்டிருந்தான். உறையூரின் மாடமாளிகைகளெல்லாம் அந்த வெண்ணிலவில் ஒளியும் மோகனமும் பெற்று சொப்பன லோகம் போல் காட்சியளித்தன.

"ஓடம் வண்டியில் ஏறும்; வண்டி ஓடத்தில் ஏறும்" என்று சொல்வதுண்டல்லவா? இந்தக் காலத்தில் திருச்சிராப்பள்ளி பெரிய நகரமாயும் உறையூர் சிற்றூராயுமிருக்கிறது. அந்த நாளிலோ உறையூர்தான் தலைநகரம்; திருச்சிராப்பள்ளி சிற்றூர். இரண்டு ஊர்களுக்கும் நடுவில் இடைவெளியில்லாமல் கடைவீதிகளும், பலவகைத் தொழில் செய்யும் மக்கள் வாழ்ந்த தெருக்களும் இருந்தன. சிராப்பள்ளி மலையிலிருந்து மகாராஜா இறங்கி வந்து சேர்வதற்கு முன்னால் பொன்னன் அரண்மனை வாசலை அடைந்து விட விரும்பினான்.

மகாராஜா, சுவாமி தரிசனம் செய்து விட்டு மலை உச்சியிலிருந்து இறங்கி வரும்போது வழியில் நின்று இளவரசருக்கு என்னத்தைக் காட்டியிருப்பார் என்பது அவனுக்கு ஒருவாறு தெரிந்திருந்தது. அங்கேதான் சோழ வம்சத்தின் அவமானச் சின்னங்கள் இருந்தன. பார்த்திப மகாராஜாவின் தந்தை, மகேந்திரவர்ம சக்கரவர்த்தியின் முன்னால் வாளையும் வில்லையும் வைத்து அடிபணிந்து, விதவிதமான இரத்தினங்களையும் ஆபரணங்களையும் காணிக்கையாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளும் காட்சி அங்கே சித்திரிக்கப்பட்டிருந்தது. அதை நினைக்கும்போதே பொன்னனுக்கு இரத்தம் கொதித்தது. "சோழ நாடு இந்த அவமானத்தை எத்தனை நாளைக்குச் சகித்துக் கொண்டிருப்பது? யுத்த களத்தில் பல்லவர்களின் இரத்தத்தைப் பெருக்கி இந்த அவமானத்தைத் துடைத்துக் கொள்ள வேண்டாமா?" என்று எத்தனையோ முறை பொன்னன் சிந்தித்ததுண்டு. அப்படிப்பட்ட சந்தர்ப்பம் இப்போது ஏற்பட்டிருக்கும் போது, தான் மட்டும் யுத்தத்துக்குப் போகாமல் வீட்டில் முக்காடிட்டுக் கொண்டிருப்பதா? - இவ்விதம் யோசித்துக் கொண்டே பொன்னன் விரைவாக நடந்து சென்றான்.

(தொடரும்)



தீபாவளியை உல்லாசமாக கொண்டாடுங்கள்
வீட்டில் எண்ணெய், கேஸ் செலவை மிச்சப்படுத்துங்கள்
கீழ்க்கண்ட எல்பிஜி மிச்சப்படுத்துவதான உத்திகளைக் கடைப்பிடிக்கவும்.
கொதி வந்தவுடனேயே, நெருப்பின் ஜுவாலையை குறைத்து, 35% வாயுவை மிச்சப்படுத்துங்கள்.
சமையல் வாயுவை மிச்சப்படுத்துவதற்கு, எப்போதுமே பிரஷர் குக்கர் ஒன்றைப் பயன்படுத்தவும்: இது நேரத்தையும் மிச்சப்படுத்தும்.
அரிசி, பருப்பு முதலியவற்றை சமைப்பதற்கு முன்னர் ஊற வைத்திடுங்கள்: அதனால் எரிபொருள் மிச்சமாகும்.
பர்னரை சுத்தமாக வைத்திருக்கவும். பளிச்சென்ற நீல நிறத்தில் எரியும் ஜுவாலையாக இருந்தால்தான், சமையல் வாயு, நன்கு நிரம்பட்ட வகையில் எரிவதாகும்.
சமையலுக்குத் தேவையான அளவே தண்ணீரைப் பயன்படுத்தவும். அளவுக்கு அதிகமான நீர் கூடுதலாக சமையல் வாயுவை உறிஞ்சி விடும்.
பெட்ரோலியம் கன்சர்வேஷன் ரிசர்ச் அசோசியேஷன்
பாரதத்தின் நன்மைக்காக, எண்ணெயை மிச்சப்படுத்துங்கள்.

உலக யுத்தம்-III

குரோம்பேட்டை ரயில் நிலையத்தைத் தாண்டி ஜி.எஸ்.டி.ரோடைக் கிராஸ் செய்தால் வருவது அல்டாஃப் ஹவுஸ். இங்குதான் பன்னீர் செல்வம் 'ஓூசு' நாராயணன் காலரைக் கொத்தாகப் பிடித்துக் கேட்டான்.

"எம்.ஜி.யாருக்கும் சிவாஜிக்கும் சண்ட வுட்டா யார்டா செலிப் பாங்க?"

ஓூசு நாராயணன் முகம் பீதியடைந்தது. வழக்கமாக சிங்கம்-புலி, நாய்-பூனை, கரடி-காண்டாமிருகம் போன்ற மிருகங்களுக்குத்தான் சண்டை விடுவான். சமீபமாக மனித குலத்திற்கு தாவியது சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது. புரியாமல் விழித்தான். பன்னீர் செல்வம் யார் மீதோ 'காண்டு' வைத்து விட்டான். இப்படித்தான் சில சிக்கலான கேள்விகள் கேட்டு ஜாடைமாடையாகச் சண்டையை ஆரம்பிப்பான். அன்றைக்கு அவன் 'மூடி'ன்படி எது ஜெயிக்குமோ அதைத்தான் பதி லாகச் சொல்ல வேண்டும். அவனை மிஞ்சி யாரும் இருக்கக் கூடாது. அவன் வைத்ததுதான் சட்டம். மொத்தத்தில் இன்றைய பாஷையில் தீவிரவாதி.

வரிசையாக எல்லோரையும் நிற்க வைத்துக் கேட்க ஆரம்பித்தான். ஓூசு நாராயணன் பிள்ளையார் மாதிரி. அவனிடமிருந்துதான் சண் டையை விடுவான். அப்படித்தான் போனவாரம் பள்ளியில் புதிதாகச் சேர்ந்த பீட்டர் மீது 'காண்டு' வைத்தான். காரணம், பூகோளப் பரீட்சை விடைத்தாளை பன்னீர் செல்வத்திற்குக் காட்டாமல் பீட்டர் எழுதியதுதான். பரீட்சை முடிந்து எல்லோரையும் வரிசையாக நிற்க வைத்தான். வழக்கம்போல பிள்ளையாரிடமிருந்து சண்டையை ஆரம்பித்தான்.

"உங்கப்பாக்கும், எங்கப்பாக்கும் சண்ட விட்டா யார்டா செலிப்பாங்க?"

ஓூசு நாராயணன் அதிர்ந்தான். கேள்வியின் அபத்தம் சட்டென்று உறைத்து, அசடு வழிய நாராயணன் சிரித்தான்.

"சீ..போ. அவங்க சண்டையே போட மாட்டாங்க..."

"சொல்லுடா" அவனை ஒரு உலுக்கு உலுக்கினான் பன்னீர். 'உங்கப்பாதான் ஜெயிப்பார்' என்று நியாயப்படி சொல்ல வேண்டும். அதுதான் எழுதாக்கிளவி! சொல்ல மனசு வரவில்லை. காரணம் அப்பா மேல் உள்ள பாசம். போன வாரம்தான் புது ஜாமெட்ரி பாக்ஸ் வாங்கிக் கொடுத்திருந்தார். இது தவிர அப்பா நல்ல உயரம். பரணிலுள்ள சேவை நாழியை அவர்தான் அம்மாவிற்கு எடுத்துக் கொடுப்பார். தேங்காயை பட்டென்று ஒரே அடியில் உடைக்கும் பலம் அப்பாவிற்கு இருந்தது. எல்லாவற்றையும் சேர்த்து கூட்டிக் கழித்துப் பார்த்ததில், அப்பா ஜெயித்து விடுவார் என்று நம்பிக்கையிருந்தது.

விட்டுக் கொடுக்காமல் சற்று குண்டு தைரியத்துடன் 'எங்கப்பாதான் ஜெயிப்பார்' என்று ஆவேசமாகச் சொன்னான்.

பன்னீர் செல்வம் நாராயணனை போட்டுப் பின்னி எடுத்தான். பன்னீருக்கும் அப்பா மேல் பாசமுண்டு. பீட்டர் எந்த வித ஆட்சேபணை இல்லாமல் அடிமையானான். காண்டு எடுக்கப்பட்டது.

ஆனால் இன்று யார் மீது பன்னீர் செல்வம் காண்டு வைத்திருக் கிறானென்று தெரியவில்லை.

திடீரென்று குருட்டாம் போக்கில் 'எ' என்று ஆரம்பித்து பயந்து போய் வாயை மூடிக் கொண்டான் ஓூசு.

"ஒன்னுக்கு போய் விட்டு வந்து சொல்றேன்டா..." என்று ஒரு விரல்காட்டி, தலை தெறிக்க ஓடி மறைந்தான். பன்னீர் இதை எதிர்பார்க்க வில்லை. விட்டு விட்டான். அடுத்துள்ளவர்களிடம் இதே கேள்வியைக் கேட்டான். இவர்கள் ஓூசு நாராயணன் மாதிரி மக்கில்லை. கபடி விளையாடும் போது பன்னீர் கையில் எம்.ஜி.ஆரின் உருவம் பச்சைக் குத்தியிருப்பதைப் பார்த்திருக்கிறார்கள். 'எம்.ஜி.ஆர்' என்றார்கள்.

அவர்கள் அடிமைப்பட்டதைப் பெருமிதமாக எடுத்துக் கொண்டு

கே. ரவிசங்கர்

என்னை முறைத்தான். 'காண்டு' என் மீது தான் என்று உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிந்தது.

"எங்க சிவாஜிதான் ஜெயிப்பார்!" அலட்சியமாகச் சொன்னேன். இதைக் கூட சிவாஜி ஸ்டைலில் சொன்னேன்.


முதன்முறையாக எதிர்த்துப் பேசினதில் சற்று அதிர்ச்சியடைந்தான். "எங்க வாத்தியார் ஒரு ஒத விட்டா தொப்ப சிவாஜி பாம்பேல விழுந்து விடுவான்!"

"எங்க சிவாஜி சிங்கம் மாதிரி கத்தினா, கிழவன் எம்.ஜி.ஆர். டெல்லில போய் விழுந்துடுவான்..." அதே வேகத்தோடு எதுகை, மோனை, அடி, சீர், தளை எதுவும் பிசிறு தட்டாமல் ஏட்டிக்கு போட்டியாய்ச் சொன்னேன்.

அவரவர் கதாநாயகர் ஸ்டைலில் காலரைப் பிடித்துக் கொண்டோம். யாரும் டெல்லி பாம்பேயில் போய் விழாமல் தரையில் கட்டிப் புரண்டு முட்டிகள் எரிந்தது. நான், பன்னீர் செல்வம் மேல் உட்கார்ந்து, கழுத்தை நெறிக்க ஆரம்பித்தேன். இப்போது பன்னீரின் அடிமைகளுக்கு, யோசிக்காமல் 'எம்.ஜியார்' என்று சொல்லி விட்டோமா என்று அடிவயிற்றில் கிலி பிடித்துக் கொண்டது. தன் அடிமைகள் எதிரிலேயே தன் காண்டு நீர்த்துப் போய்க் கொண்டிருப்பது அவனுக்கு அவமானம் பிடுங்கித் தின்றது.

புளிய மரத்தின் பின்னால் ஒன்னுக்கு போகும் போக்கில் ஓரக நாராயணன் கலவரத்தோடு இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். யார் சிவாஜி கட்சி, யார் எம்.ஜியார் கட்சி என்று இன்னும் குழப்பமாகயிருந்தது.

"டேய், கௌசல்யா வராடா..."



என்று யாரோ ஒருவன் குரல் கொடுக்க, மின்னல் வேகத்தில் பிடிகளைத் தளர்த்தி சார்லி சாப்ளின் மாதிரி விலுக் விலுக்கென்று ஆளுக்கொரு திசையில் ஓடினோம். கோபு, சத்தியநாதன், சுந்தர் (எம்.ஜியார்தான் ஜெயிப்பார் கட்சிக்காரர்கள்) கட்சி மாறி என் பின்னால் ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.

"பொட்டடா..ஓரக... ஓடிட்டாண்டா..." என்று பரஸ்பரம் சொல்லிக் கொண்டே என் சிராய்ப்பில் எச்சில் தடவி பேப்பர் ஒட்டினார்கள். மூச்சிரைத்துக் கொண்டே கௌசல்யா போவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். சனிக்கிழமையானதால்

ஒற்றைப் பின்னல் பின்னிக் கொண்டு அன் யூனிபார்மில் ரொம்ப அழகாக இருந்தாள்.

பன்னீர் செல்வம் நொண்டி நடப்பதைப் பார்த்து கேலியாகச் சிரித்து விட்டாள். ஆத்திரத்துடன் ஆள் காட்டி, நடு விரல் இரண்டிலும் எச்சில் தடவி இடது மணிக் கட்டில் எங்களைப் பார்த்துப் பதித்தான். இதற்குப் பெயர் கரம் வைத்தல், பழிக்குப் பழி. மால்குடி நாட்களின் வட்டார வழக்குச் சொல். திமரென்று ஓசு நாராயணன் ஞாபகம் வந்து வெறியோடு அவனைத் தேட ஆரம்பித்தான்.

கௌசல்யாவுக்கு மதிப்புக் கொடுத்து சண்டையைப் பாதியில் நிறுத்தும் அளவுக்கு அவள் எங்களை வசீகரித்திருந்தாள். கானத்தில் மயங்கி 'பைப்பர்' பின்னால் ஓடின எலிகள் மாதிரி அவள் பள்ளியில் சேர்ந்த நாளிலிருந்து நாங்கள் மயங்கி ஓடிக் கொண்டிருந்தோம். பேச்சு, நடை, உடை, பாவனைகளில் அப்போது குழந்தை நட்சத்திரமான குட்டி பத்மினி போலிருந்தாள். அவள் பேசின ஆங்கிலம் எங்களைப் புல்லரிக்க வைத்தது. யாருமில்லா சமயத்தில் 'நா லேபுக்கு கோயிங்டா... நீ கம்மிங்டா..' என்று ஓசு நாராயணன் ஆங்கிலம் பேசி அவளைக் கவர முயற்சித்தான். அவள் பூப்போட்ட கர்சீப்பும் நகங்களில் நெயில் பாலிஷும் இட்டுக் கொண்டிருந்ததால் பணக்காரி என்று முடிவு செய்து திடீரென்று ஒருநாள் 'எட்டாத பழம்' என்று கை விட்டான்.

கௌசல்யா விஷயத்திலும் எனக்கும் பன்னீர் செல்வத்திற்கும் மோதல் ஏற்பட்டது. ஏழாம் வகுப்பில் கௌசல்யா எலக்டீவ்ஸ் சப்ஜெக்டாக கெமிஸ்டிரி எடுத்தாள். நானும் ஓசு நாராயணனும் அதையே எடுத்தோம். பாட்டனி என்று பன்னீர் செல்வத்திடம் பொய் சொன்னோம். அதை நம்பி அவன் பாட்டனி சேர்ந்தான். பின்னால், தான் ஏமாற்றப்பட்டது தெரிந்து பர்மனென்டாக என் மீது 'காண்டு' வைத்தான். இது சற்று வீர்யம் ஜாஸ்தி. இந்தக் கால 'பட்வா' வுக்குச் சமம்.

அன்றிலிருந்து நானும் அவனும் நேருக்கு நேர் சந்திக்கும் போதெல்லாம் அக்னி நட்சத்திரம் பிரபு-கார்த்திக் போல் ஸ்லோ மோஷனில் ஒருவரை ஒருவர் உக்கிரமாக முறைத்துக் கொண்டு தலையைச் சிலுப்பிக் கொண்டோம்.

இது தவிர பன்னீர் செல்வம் பொறாமைப் பட நான் நிறைய அனுகூலங்களை புஷ்டியாக வைத்திருந்தேன். கௌசல்யாவின் வீடு என் தெருவில்தான் இருந்தது. அவளை அடிக்கடி சந்தித்து சோஷியலாகப் பேசும்



அருள்வாக்கு

பணத்திடம் ஆசை பணத்துக்காகவே இருந்தால் அந்தப் பணத்தைப் பிள்ளைக்காகச் செலவழிக்கத் தோன்றாது. பிள்ளையாசையும் அவனுக்காகவே இருந்தால் இளையாளுக்காக அவனைத் திரஸ்கரிக்கத் தோன்றாது. இப்படியே இளையாள் ஆசையும் அவள் பொருட்டே இல்லை என்று தெரிகிறது. ஒன்றைவிட ஒன்று அதிக ஆசையாக முதலில் பணம், அப்புறம் பிள்ளை, பெண்டாட்டி, தன் கர்மேந்த்ரிய, ஞானேந்த்ரியங்கள் என்று போய், உயிர்மூலமாயுள்ள தன்னுடைய நிஜத் "தானி"டம்தான் முடிந்த முடிவான ஆசை என்று தெரிகிறது. முடிவு என்றாலும் ஆரம்ப ஆசையிலிருந்து எல்லாமே அதை வைத்துத்தான். சின்ன "நானா"ன தன்னுடைய சொந்த மனஸின் த்ருப்திக்காகத்தான் பணம், பிள்ளை, பெண்டாட்டி, சரீரம் முதலியவற்றில் ஆசை. இவை ஒவ்வொன்றிடமும் மனஸ் ஒரே மாதிரி த்ருப்திப்படாமல் ஒன்றை விட

சாத்தியக்கூறுகள் இருந்தன. இதனால் கௌசல்யாவிற்கு டியரஸ்டு பிரெண்ட் ஆகி விடுவேனோ என்ற கவலையிருந்தது, பன்னீருக்கு.

தினமும் அவள் புது சைக்கிள் பின்னால் மூச்சிரைக்க ஓடி, வீடுவரை நானும் பன்னீர் செல்வமும் கொண்டு விடுவோம். அப்போதெல்லாம் என் உற்சாகம் எப்படிப் பட்டதாயிருக்கும் என்று லேசில் சொல்ல முடியாது.

அன்று எனக்குக் கெட்ட நாள். உற்சாகத்தில் என் கால், சக்கரத்தில் பட்டு சைக்கிள் பட்டென்று நொடித்து அதன்மேல் கௌசல்யா விழுந்தாள். ஸ்கர்ட், முழங்காலுக்குமேல் ஏறி, அவமானத்தில் முகம் சிவந்தாள். "போடா.. துண்டு பீடி...பிஞ்ச செருப்பு..." என்று காச்மூச் சென்று கத்தி எச்சை துப்பினாள். "வேணுமின்டு பண்றான்" பன்னீர்செல்வம் புழுதியைத் தட்டி சமாதானப் படுத்தினான். அவள் பின்னால் ஓடி பத்திரமாகக் கொண்டு விட்டான். பன்னீர் செல்வத்தை ரொம்ப பிடித்துப் போயிற்று அவளுக்கு.

மறு நாளிலிருந்து, கௌசல்யா என் கூடப் பேசுவதில்லை. நேரில் பார்க்கும் போதெல்லாம் அழகு காட்டினாள். பன்னீர்

இன்னொன்றிடம் அதிக திருப்தி காண்பதால்தான் ஒவ்வொன்றாக ஆசையை விட்டுக் கொண்டே போயிற்று. உடம்புக்கு அப்புறம் மனஸ் தன்னிடமே ஆசைப்பட்டது: அதற்காக உடம்பையும் விடத் தயாராயிற்று. ஆனால் முடிவிலே மனஸ் தன்னையும் விலக்கிக் கொண்டு உயிரை மாத்திரம் இருக்கவிடும் போது, அதற்கே ஸரியாக விளங்காவிட்டாலும் அது ஆத்மாவிடம் கொண்டுள்ள ப்ரியத்தால்தான் இப்படிச் செய்கிறது என்று தெரிகிறது.

இப்படி இனம் தெரியாமல் இருக்கிற ப்ரியத்தை இனம்புரிவதாக ஆக்கிக் கொண்டால் இப்போதே மனஸை ஆத்மாவிலே ஒடுக்கி இல்லாமற் பண்ணிக் கொண்டு ஆத்மாவாக மட்டும் இருப்பதற்கு எண்ணம் வந்து விடும். "ததஸ்ததோ நியம்யைதத் ஆத்மந்யேவ வசம் நயேத்" என்று பகவான் உபதேசம் பண்ணியபடி செய்து பார்க்கத் தோன்றும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

செல்வத்திடம் டியரஸ்டு பிரெண்டாகி விட்டான் என்று பள்ளியில் பேசிக் கொண்டார்கள். மனமுடைந்தேன். ஒரு நாள் பள்ளி·விட்டவுடன் அவன் பின்னால் ஓடி, நைஸாக பிரெண்டாக்க முயன்றேன்.

"ஸ்டுப்பிட், உன் கல்யாணத்தன்னிக்குத் தான் நீ செஞ்சதை மறப்பேன்" என்று ஆபாச வார்த்தைகளால் நோகடித்தான்.

நாளாக நாளாக என்னை விளம்பரத்தில் அலட்சியமாக தூக்கியெறியப்படும் படு சாதாரண அழுக்கு சோப் போலவும், பன்னீர் செல்வத்தை மின்னலடிக்கும் சோப் போலவும் நடத்த ஆரம்பித்தான். கடைசியாக பொறுக்க முடியாமல் அவன் பின்னால் துரத்திக் கொண்டு போய்,

"இந்த வேர்ல்ட் அழியற வரையும் பேச மாட்டியா?"-பரிதாபமாகக் கேட்டேன். இதற்கு பதில் பேசாமல் அழகு காட்டிவிட்டுப் போனான். நான் சுக்கல் சுக்கலாக உடைந்தேன்.

என் நிலைமை கண்டு லூசு நாராயணன் மிகவும் வருந்தினான். என்னை ஒரு மாதிரி தேற்றி, கடைசி அஸ்திரமான 'கரம்' வைக்கச் சொல்லி ஐடியா கொடுத்தான். சைக்கலாஜிக்கலாகவே அவனுக்கு பன்னீர் செல்வத்தைப் பிடிக்கவில்லை. எனக்கு பதிலாக அவனே பன்னீர் செல்வம், அவன் பையன், பேரன் வரை ஸ்ட்ராங்காக 'கரம்' வைத்து, அந்த செய்தியை பள்ளியில் பரப்பி விட்டான்.

பன்னீர் செல்வம் பயந்து போனான் இதற்கிடையில் பன்னீரும் நானும் அடிக்கடி மோதிக் கொண்டோம். வெற்றி தோல்வி மாறி மாறி வந்தாலும் அதை ஒத்துக் கொள்ளாமல் பிடிவாதம் பிடித்தோம். இந்தப் பிடிவாதம் ஜுனூன் மாதிரி முடிவில்லாமல் நீண்டு கொண்டேயிருந்தது.

வெறுத்துப் போய் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தோம். சிங்கமா, பொட்டா போட்டுப் பார்த்து கௌசல்யாவை எடுத்துக் கொள்வது என்று தீர்மானித்தோம். சிங்கம் விழுந்தால் அவனுக்கும், பொட்டு விழுந்தால் எனக்கும் என்று முடிவாயிற்று. அதன்படி தோல்வியடைந்தவன் 'கரம்' 'காண்டு' போன்றவைகளை எடுத்து விட வேண்டும். எதிர் காலத்திலும் வைக்கக் கூடாது. உலகம் அழியும் வரையிலும் வைக்கக் கூடாது. இது தான் லாஸ்டுக்கு லாஸ்ட்.

கௌசல்யா வரும்போது தொண்ணூறு டிகிரியில் அவளைப் பார்த்தபடி நின்று டாஸ் போட்டு விட்டு (உமா சங்கர் தான் ஜெயிக்க வேண்டும்) தலை தெறிக்க நாராயணன் ஓடி மறைந்தான். சிங்கம் விழுந்தது. கௌசல்யாவைப் பன்னீர் எடுத்துக் கொண்டு விட்டான். உலகம் அழியும் வரை கௌசல்யாவைப் பன்னீர்தான் தோழியாக வைத்துக் கொள்வான் என்பதை பொறுக்க முடியாமல் அழுதேன். லேசாக ஜுரம் அடிக்க ஆரம்பித்து. வீட்டிற்குப் போகாமல் வீரன் சிலையின் கீழ் உட்கார்ந்திருந்தேன்.

பல வருடங்கள் கழித்து 'லூசு' நாராயணனைச் சமீபத்தில், என்மகனோடு கடைக்குப் போகும் வழியில் சந்தித்தேன். அவன் மனைவி யார் தெரியுமா? கௌசல்யா!

"என்ன தெரியறதா?"

"தெரியும்... உமாசங்கர் தானே..."

கௌசல்யா ஆவலோடு பதில் சொல்ல, "சாரி... சீக்கிரம் போகணும்" என்று நாராயணன் அவளை இழுத்துக் கொண்டேோடினான். ஏமாற்றமாகயிருந்தது. அவன் மனைவி முன்னால்.. 'லூசு' என்று கூப்பிட்டு விடுவேன் என்ற பயமா? ஆனால் சிங்கம் பொட்டு எதுவுமே போட்டுப் பார்க்காமல் கௌசல்யாவை எடுத்துக் கொண்டு விட்டானே.. பாவி...! தாங்கத்தான் முடியவில்லை.

பள்ளியில் நடத்திய ஸ்டார் வார்ஸ் லெல்லாம் இவனுக்குத் தெரியுமா? கேட்க வேண்டும் போலிருந்தது.

"அப்பா...கௌசல்யா ஆன்ட்டி ரொம்ப அழகாயிருக்காங்கப்பா..." என் மகன் சிரித்துக் கொண்டே சொன்னான்.

இதையும்தான் தாங்க முடியவில்லை.

லீவு வேணுமா லீவு?



ஆயில்பாத் முறை:

லீவு போட உத்தேசித்திருக்கும் அன்று நன்றாக எண்ணெய் தேய்த்துக் குளிக்கவும். தலைக்குச் சீயக்காய்த் தூள் போட்டுத் தேய்க்கும்போது கண்ணுக்குள்ளும் நிறைய விட்டுக் கொள்ளவும். கண்கள் ரத்தச் சிவப்பானதும் அப்படியே ஆபீஸுக்குப் போகவும். (அதாவது உடலைத் துவட்டி உடை அணிந்துதான்). கூலிங் கிளாஸ் அணிந்து, மானேஜர் அறையில் நுழைந்து அவர் முகத்துக்கு நேராக வந்ததும், சடாரென்று கண்ணாடியைக் கழட்டவும். 'மதறாஸ்ஐ'க்கு பயப்படாத மானிடருமுண்டோ? பதறிடுவார்!

'முதல்ல வெளியே போய்யா...! இந்த சனியன் கண்வலி குணமாகிறவரைக்கும் இந்தப் பக்கம் தலைவச்சுப் படுக்காதே' என்று சுழல் நாற்காலியை மறுபக்கம் திருப்பிக் கொண்டு பேசுவார், சினிமா வில்லனைப் போல. அவ்வளவுதான், என்ஜாய்!

போன்பூத் டெக்னிக் :


இதற்கு செலவு ஒரே ஒரு ரூபாய்தான். நாம் ஆபீஸ் போய்ச் சேர்ந்ததும் சேராததுமாக, நம்மால் 'செட்டப்' செய்யப்பட்ட ஆள் போன் செய்வார். போனை எடுப்பவரிடம், 'சார்... (அல்லது சாரி) ராமுவோட பாட்டி, சற்று முன்னால்தான் பாத்ரூமில் வழுக்கி விழுந்துட்டாங்க. நிலைமை ஸீரியஸ்...! அவர் வந்ததும் உடனே வரச் சொல்லிடுங்க...' அல்லது 'ரேஷன் கியூவில் சர்க்கரை வாங்க நின்ன ராமுவோட தாத்தா ஸ்டிரோக் வந்து சாய்ந்துட்டார். உடனே ராமுவை அனுப்பிடுங்க' என்று பதட்டமாக ஒரு ரீல் மூட்டையை அவிழ்த்து விடுவார்.

நம்மிடம் சோகமாகத் தகவல் தெரிவிக்கப்படும். நாம் சிவாஜி, கமலஹாஸன் இவர்களில் யாராவது ஒருவருடைய ஸ்டைலில் அதிர்ச்சி கலந்த சோகத்தை வெளிப்படுத்தி, உறைந்து போய் நிற்போம். ஸ்லோமோஷனில், இரண்டு பேர் ஆதரவாக நம் தோளைப் பிடித்து வர, மானேஜர் ரூமில் நுழைந்து விஷயத்தைக் கூறி, விடுப்பு பெறுவோம். மானேஜரின் சாபம் கிடைத்தாலும் லீவு நிச்சயம்!

பின்குறிப்பு : தொலைபேசி டெக்னிக்கில் கவனிக்க வேண்டிய அம்சம் : தாத்தா, பாட்டி இருவரும் பொன் முட்டையிடும் வாத்து. அவர்களை அவ்வப்போது சிக்காளியாக்கி லீவு போட உபயோகப்படுத்திக் கொள்ளலாமே தவிர, விடுப்புக்காக அவர்களைக் 'கொல்லாமை' நன்று.

ஆக்ஸிடெண்ட் மெதட் :

மானேஜர் வருவதற்கு முன்பாக ஆபீசுக்கு சென்றிடவும். கையில் உங்கள் பழைய டிரஸ் ஒரு செட் வைத்துக் கொள்ளவும். அவற்றை ஏற்கெனவே வீட்டுக்கருகில் உள்ள தெருப் புழுதியில் புரட்டித் தேய்த்து, கிழித்து வைத்துக் கொள்வது



அவசியம். ஆபீஸில் பாத்ரூமுக்குள் நுழைந்து இந்தப் பழைய உடையை அணிந்து கொள்ளவும். தலையை ரஜினி ஸ்டைலில் கலைத்துக் கொள்ளவும். பாகப்பிரிவினை சிவாஜியைப்.போல ஒரு கையை -அதுவும் வலது கையை- ஒரே ஆங்கிளில் வைத்துக் கொண்டு மானேஜர் வந்ததும் ஜனகராஜ் குரலில் ஓலமிடவும்.

"ஊ...ஊ! மானேஜர் சார்...! எவனோ படுபாவி, ஸ்கூட்டர்ல படுவேகத்துல வந்து, என்னைப் படுகுழில தள்ளி, படுக்க வச்சிட்டான் சார். டிரஸ்ஸும் கிழிஞ்சு கையும் ரிப்பேராயிடுச்சி..." என்று ஒரு குரல் அழுதுவிட்டு, சற்று இடைவெளி குடுத்து, அப்பாவித்தனமாக, "ஏன் சார், கை சரியாகும் வரைக்கும் கொஞ்ச நாளைக்கு ஆபீஸ்ல ஒரு ஓரமா உக்காந்துட்டு போயிடவா?" என்று கேட்கவும்.

'வேலை செய்யாமல் சம்பளமா?' என்று கொதித்துப் போகும் மானேஜர், "வாட்... நான்சென்ஸ்? லீவு போட்டுட்டு போய்யா" என்று சீறுவார். உங்களுக்குத் தேவை அதுதானே!

கிரஷ் பிளான் :

மேற்சொன்ன முறைகளெல்லாம் அத்துப்படியாகி, மானேஜர் மசிய மாட்டேனென்றால் இரண்டு வாண்டுகளை அலுவலகம் அழைத்துப் போங்கள். "பள்ளிக்கூடம் லீவு; மிஸஸ்ஸுக்கு உடம்பு சரியில்லை, மானேஜரோ லீவு தர மாட்டேனென்கிறார்; என்ன பண்ணுவது?" என்று எல்லாரிடமும் நீங்கள் கூறிக் கொண்டிருக்கும்போதே, உங்கள் வாலுகள் அனைத்து ஆபீஸ் பொருள்களையும் துவம்சம் பண்ணத் தொடங்க, மானேஜர் "டமார், தடால்" சத்தங்கள் கேட்டு எட்டிப் பார்த்து, சிண்டைப் பிய்த்துக் கொண்டு உங்களை அவசரம் அவசரமாக வீட்டுக்கு அனுப்பி வைப்பார்!



(பி.கு: இந்த யோசனைகளெல்லாம் எப்போதாவது உபயோகப்படுத்தத்தான்! அடிக்கடி 'அப்ளை' பண்ணால் மேனேஜர், சீட்டைக் கிழித்துவிடக்கூடும். 'அப்புறமென்ன, பர்மனெண்ட் லீவ்தான்!' என்று சந்தோஷப்படத் தயாரென்றால் கோ அஹெட்!)

யோசனைகள் : **ரகோத்தமன்**

வேதபுரத்து வியாபாரிகள்

20

'ஏராளமான அமைச்சர்கள் உள்ள மந்திரி சபையில், அமைச்சர்களுடைய பெயரைப் பயன்படுத்துவதைக் காட்டிலும், அவர்களை எண் வரிசையில் குறிப்பிடுவது நன்று. பெயர் மாறினாலும், எண் மாறாது...' ['வேதபுரத்து அரசியல் சட்டம் - (37-38)]

நஞ்சுகண்டன் வரும் பொழுதே மிகுந்த உற்சாகத்துடன் வந்தான்.

"நாட்டின் துணைத் தலைவர் அவர்களே, நாட்டின் துணை இதயத் தெய்வமே... நாட்டின்..."

அபூர்வா இடைமறித்தான். "போதும்... இந்த இக்கட்டான நிலைக்கு என்னைக் கொண்டு வந்திருப்பது நீங்கதான்."

"என்ன இக்கட்டான நிலை? நீங்க இன்னும் வெளியிலே போய் பார்க்கலே? தெருவெல்லாம், தலைவர் படத்துக்குப் பக்கத்திலே உங்க படம்!"

"ஓ... காட்! இதெல்லாம் யார் ஏற்பாடு?"

"வேதபுரத்து மக்களுக்கு வழிபட சற்றுக் கொடுக்கவா வேண்டும்? சரி... புறப்படுங்க."

"எங்கே?"

"அமைச்சர்கள் உங்களைச் சந்திக்க வரப் போறாங்க... உங்க அலுவலகத்துக்குக் கூட்டிகிட்டுப் போக வந்திருக்கேன்."

"எங்கே இருக்கு என் அலுவலகம்?"

"செயலகத்து மாடியிலே... மூன்றாம் மாடி பூரா உங்க அலுவலகம்."

அபூர்வா சோபாவில் உட்கார்ந்தான். அவன் காப்பியை உறிஞ்சிக் கொண்டிருந்தான். அப்பொழுது அங்கு வந்த வனிதா நஞ்சுகண்டனைப் பார்த்து வணக்கம் தெரிவித்தான்.

"என்ன உக்காந்திட்டீங்க?"

"என்னுடைய சில கேள்விகளுக்கு நீங்க பதில் சொன்னாத்தான் புறப்பட முடியும்..."

"அப்புறம் கேட்டுக்கக் கூடாதா?" என்றான் நஞ்சுகண்டன்.

"இல்லே... இப்பொத்தான் எனக்குத் தெரிஞ்சாகணும்."

நஞ்சுகண்டன் அவனெதிரே உட்கார்ந்தான்.

"தேர்தலுக்கு நிக்கணும்னு சொல்லிட்டு, இப்பொ திடீர்னு என்னைத் துணைத் தலைவரா ஆக்கினதுக்கு என்ன காரணம்? யார் ஆக்கினாங்க? எனக்குத் திடீர்னு ஏன் இப்படி வரலாறு காணாத விளம்பரம்? எனக்கு பயமாயிருக்கு... நான் என் வேரைத் தேடிண்டு வந்தேன். என்னைத் திடீர்னு உச்சாணிக் கொம்புக்கு அடுத்தக் கிளையிலே உக்கார வச்சாச்சு... வேர்தான் எங்கே இருக்குன்னு தெரியலே..."

"உச்சாணிக் கொம்பு எங்கேயிருக்குன்னு தெரியுமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் நஞ்சுகண்டன்.

"எஸ். அதுவும் தெரியாது... இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?"

நஞ்சுகண்டன் சிறிது நேரம் பேசாமலிருந்தான். அங்கு ஓர் நீண்ட அமைதி நிலவியது. சுவர்க் கடியாரத்தின் நிமிஷ முள் இயங்கும் சப்தம் துல்லியமாய்க் கேட்டது.

வனிதா கேட்டாள் : "காப்பி கொண்டு வரச் சொல்லவா?"

"நோ... தாங்க்ஸ்" என்றான் நஞ்சுகண்டன்.

"வனிதா தொடர்ந்து என் அந்தரங்கச் செயலர், ஆலோசகர்... எல்லாமாக இருப்பா... அஃப்கோர்ஸ், இனிமே சமையல் செய்ய வேணாம்..." என்றான் அபூர்வா புன்னகையுடன்.

இந்திரா பார்த்தசாரதி

"நிச்சயமா... அவங்கதான் நேத்து தன பால்கிட்டே பேரம் பேசினாங்கன்னு கேள்விப்பட்டேன். ஆனா நீங்க அவரை வேலையை விட்டு நீக்கறதா சொல்லிட்டீங்க, லஞ்சக் குற்றத்துக்காக..."

"எல்லாம் உங்களுக்குத் தெரியுமா?"

"வேதபுரத்திலே, லஞ்சக் குற்றத்துக்காக ஒருவரை வேலையை விட்டு நீக்கறது, அவ்வளவு சுலபமான காரியமில்லே... அப்படி நீக்கறதா இருந்தா, வேதபுரத்திலே வேலை செய்யறவங்க யாருமே இருக்க மாட்டாங்க. ஆனா, தனபாலை வேலையை விட்டு நீக்கி



[illegible] உங்களுக்குச் சவால் விட்டுப் போன குற்றத்துக்காக! அதிகாரத்திலேருக்கிறவங்களுக்கு அடிபணியணும். இது தான் இந்த நாட்டு அரசியல் சட்டம்."

"சரி... நான் கேட்ட கேள்விக்குப் பதில்?"

"இந்திரபிரஸ்தத்துத் தலைவர் கொஞ்சம் தொந்தரவு கொடுக்கறாரு. கஜானாவைக் கண்டுபிடிச்சுத் தர உங்களை அனுப்பணும்னு கேட்டவரு அவர்தான். நம்ம தலைவரு, சமாதானம் பண்ணிக்கலாம்னு தான் உங்களை அங்கே அனுப்பிச்சாரு... அப்புறந்தான் தெரிஞ்சுது, எல்லாமே ஒரு 'செட்-அப்'னு. பிராபல்யம் அடைய எல்லா தகுதிகளும் உங்களுக்கிருக்குன்னு கணக்குப் போட்டு... மத்ததெல்லாம் உங்களுக்குத் தெரிஞ்சதுதான்... நம்ம தலைவர் இப்பொ முந்திண்டுட்டாரு... உங்களைத் துணைத் தலைவரா அவரே ஆக்கிட்டாரு... புரிஞ்சுதா...?"

"புரியலே..."

"இவ்வளவு தெளிவா சொல்லியுமா புரியலே?"

"என்னைச் செல்லாக் காசாக்கறது நம்ம தலைவருக்கு ரொம்ப எளிமையான காரியம். அப்படியிருக்கிறப்போ, என்னைத் துணைத் தலைவரா ஆக்கினதோடு மட்டுமில்லாமெ, இவ்வளவு விளம்பரம், ஆர்ப்பாட்டம், இதெல்லாம் எதுக்கு?"

நஞ்சுண்டன் அவனையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு புன்னகையுடன் சொன்னான். "நீங்க கேக்கறது ஒரு நல்ல கேள்வி... பதில்தான் எனக்குத் தெரியலே."

"உங்களுக்குப் பதில் தெரியும்னு எனக்குத் தெரியும்."

"என்ன பதில்?"

"நீங்கதான் சொல்லணும்."

"உங்களுக்கு யூகம் ஏதாவது இருக்கா?"

"இருக்கு."

"சொல்லுங்க..." என்றான் நஞ்சுண்டன் குறுநகையுடன்.

"ஒரு சர்வாதிகாரிக்கு இருக்கக்கூடிய இயல்பான பிரச்னை..."

"என்ன பிரச்னை?"

"சந்தேகம்... தன்னுடைய நிழலைக் கண்டே சந்தேகம். எல்லாரும் தனக்கு எதிரா சதி செய்றாங்கங்கிற பயம். யாரு நண்பன், யாரு எதிரின்னு தெரியாம இருக்கிற குழப்பம். நாட்டுப் பொருளாதாரப் பிரச்னை

விசுவரூபமாயிட்டு வருது... எப்பொ வேணு மானாலும் வெடிக்கலாம். இந்தச் சந்தர்ப்பத் திலே அவருக்கு ஒரு பலி ஆடு தேவையா இருக்கு... பழியைச் சுலபமா போடறத்துக் கான ஒரு துணைத் தலைவர். விளம்பரம் கொடுத்து ஒரேயடியா தீர்த்துடலாம். ஒரு கல்லிலே ரெண்டு மாங்கா. சரியா நான் சொல்லறது?"

"அப்பொ வேதபுரத்தைச் சேர்ந்த ஒரு ஆளைத் தயார் பண்ணலாமே, புதுசா வந்த உங்களை ஏன் தேர்ந்தெடுக்கணும்?"

"கரெக்ட்... புதுசா வந்த ஆளு, அந்நிய தேசத்து ஆளுன்னு அவருக்கு எப்பொ சௌகர்யப்படறதோ அப்பொ தீர்த்துக்கட்ட லாமில்லியா?"

" 'லாஜிக்' நல்லாயிருக்கு. ஆனா, 'லாஜிக்' வேற, மனித சுபாவம் வேற... அவ்வளவுதான், என்னால் இப்பொ சொல்ல முடியும். சரி... புறப்படுவோமா... அமைச்சர்கள் காத்துகிட் டிருப்பாங்க."

"வனிதாவும் என் கூட வருவா."

"நிச்சயமா... உங்க செக்ரட்டரி, தோழி.. எல்லாம்... இல்லியா?"

அவர்கள் செயலகம் சென்றடைந்த போது, வாசலில் அமைச்சர்கள் காத்துக் கொண்டு நின்றனர்.

வழி முழுவதும் காவலர்கள் முப்பதடிக்கு நால்வராக நின்று கொண்டிருந்தனர். இதைத் தவிர போலீஸ் ஜீப்புகள். போக்குவரத்து ஸ்தம்பித்து நின்றது.

அவன் கார் நின்றதும், இரண்டு மூன்று அமைச்சர்கள், போட்டியிட்டுக் கொண்டு, கார்க் கதவைத் திறக்க முயன்றனர்.

அபூர்வா எதிர்க் கதவைத் திறந்து கொண்டு இறங்கினான்.

இரண்டு மூன்று அமைச்சர்கள் அவன் இறங்குவதைப் பார்த்து அந்தப் பக்கம் ஓடி, "வாங்க, வாங்க..." என்றார்கள்.

வனிதா பின்தொடர்வதைப் பார்த்து, அவளை வரவேற்பது சரியா, இல்லையா என்ற குழப்பம் அவர்கள் முகத்தில் தெரிந் தது.

அபூர்வா வரிசையாக நின்று கொண் டிருந்த அமைச்சர்களைப் பார்த்தான்.

மூத்த அமைச்சர் அவனருகில் நின்று, தாம் அமைச்சர்களை அவனுக்கு அறிமுகப் படுத்துவதாகக் கூறினார்.

"நீங்க எத்தனை அமைச்சர்கள்?" என் றான் அபூர்வா.

"37 பேர்..."

"எல்லாருடைய பெயர்களையும் நான் தெரிந்து வைத்துக் கொள்வது சற்றுச் சிரம மான காரியமாயிருக்கும் போலிருக்கிறது."

"தேவையில்லை.. தலைவர் எங்களுக்கு நம்பர் கொடுத்திருக்கிறார். நான் நம்பர் ஒண்ணு, இவர் ரெண்டு, இவர் மூணு..."

"ஒன்பதாம் நம்பரை எனக்குத் தெரியும், நீங்க திண்ணப்பன்தானே?"

"ஆமாங்க... உங்களுக்கு அபார ஞாபக சக்தி. தலைவர் என் பேரிலே பிரியப்பட்டு ஒன்பதாம் நம்பர் கொடுத்திருக்காரு... ஒன் பது கடவுள் மாதிரி... ஒன்பதை எந்த நம்பரா லேயும் பெருக்கி, வர எண்களைக் கூட்டினா ஒன்பதுதான் வரும். எப்படிக் கடவுள் ஒரே மாதிரியா இருக்காரோ அப்படி..."

"அப்பொ கடவுள் வேற, நம்ம தலைவர் வேறங்கிறீங்க..."

"இல்லீங்க... இல்லீங்க... நம்ம தலைவர் மாதிரி ஒன்பது..."

"அப்பொ நீங்களும் தலைவரும் ஒண் ணுங்கிறீங்க..."


திடீரென்று திண்ணப்பன் அபூர்வாவின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்தார்.

"மன்னிச்சுக்கணும், நான் அப்படிச் சொல்லவே இல்லீங்க... நான் எங்கே, ஒரு தூசு... தலைவரும் நானும் ஒண்ணுன்னு நான் சொல்லுவேனா..."

அபூர்வா மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு தன் பாதங்களை விடுவித்துக் கொண்டான். அவன் பின்னால் நகர நகர, திண்ணப்பன் முன்னால் ஊர்ந்து சென்றார்.

திண்ணப்பன் காலில் விழுந்த பிறகு, தாங்கள் நிற்பது முறையா என்று மற்ற அமைச்சர்களுக்குத் தோன்றியிருக்க வேண் டும். நம்பர் 3ம், நம்பர் 4ம், அபூர்வாவை நோக்கி முன்னால் வந்தார்கள்.

அபூர்வா சொன்னான். "உள்ளே போக லாம். உள்ளே தரை வழவழப்பா அழுக்கில்



"டேய் பக்கிரி... ஜவுளிக் கடையிலே நேற்று திருடின துணிமணியெல்லாம் என்னடா செய்தே...?"

"'துணி'யெல்லாம் வீட்டுலே இருக் குங்க. 'மணி'யெல்லாம் ஐயா வூட்டுலே அம்மா கிட்டே ஒப்படைச்சுட்டே னுங்க!"

— நாராயணன்

தடையில்லா மருத்துவ பாதுகாப்பு மற்றும் வருடாந்திர வருவாய்...

...உங்களுக்கு மற்றும் உங்கள் வாழ்க்கை துணைவருக்கு.



SENIOR CITIZENS' UNIT PLAN

முதியோர்களுக்கு யூடிஐயின் காணிக்கை

சிறப்பம்சங்கள்

- **ஒப்பற்ற திட்டம்**
  ஒரு முறை மட்டும் செய்யும் முதலீடு உங்களுக்கும் உங்களுடைய உற்ற துணைவருக்கும் 58 வயதிலிருந்து பாதுகாப்பு அளிக்கிறது
  ரூ. 5 இலட்சம் வரையிலான மருத்துவமனை செலவுகளுக்கு
- **யார் முதலீடு செய்ய முடியும்**
  18லிருந்து 54 வரையிலுள்ள வயது தொகுப்பில் இருக்கும் எந்த ஒரு தனிநபரும் சேர முடியும் 55-59 வரை வயதானவர்களுக்கு திட்டம் 31 மே 1995 வரை நடப்பில் இருக்கும். நிறுவனங்கள்கூட தங்கள் ஊழியர்களுக்காக இத்திட்டத்தில் முதலீடு செய்ய முடியும்.
- **எப்போது, எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும்.**

உங்கள் வயது	ரூ.	உங்கள் வயது	ரூ.
18	2500	40	9800
25	2800	45	15300
30	4200	50	24500
35	6300	54	35000

- **இத்திட்டம் எவ்வாறு வேலை செய்கிறது.**
  மிகவும் எளிதாக! உங்கள் ஸீனியர் சிட்டிஸன்ஸ் அடையாள அட்டையை மருத்துவமனைகளில் காட்டுங்கள். சிகிச்சை பெற்ற பிறகு கையொப்பமிட்டு வெளியேறுங்கள். மற்றதை நாங்கள் கவனித்துக் கொள்வோம்.
- **120க்கும் மேலாக தேர்ந்தெடுத்த மருத்துவமனைகளுடன் தொடர்பு கொண்டுள்ளோம்.**
  வருங்காலத்தில் மேலும் பல மருத்துவமனைகள் இத்திட்டத்தில் சேர்க்கப்படும்.
- **வருடாந்தர வருவாய்**
  55 வயதுக்கு முன் சேருபவர்களுக்கு 58 வயதிலிருந்து வருடாந்தர வருவாய் கிட்டும்.
- **உரிமைக் கோரிக்கை இல்லையேல் போனஸ்**
  உரிமைக் கோரிக்கை செய்யாத ஒவ்வொரு ஆண்டுக்கும் 5% (அதிகபட்சம் 10 ஆண்டுகளுக்கு)
- **தீர்வு பெறாத தொகையை எடுத்துக்கொள்ளும் வசதி.**
  61-ஆம் வயதில் கிடைக்கும் மருத்துவ நற்பயன்களை இழக்காமல்
- **முன்பிலிருந்தே இருக்கும் நோய்களுக்கும் இப்பாதுகாப்பு உண்டு.**

சிடிபாங்க் கார்ட் அங்கத்தினர்கள்

நீங்கள் இத்திட்டத்திற்காக உங்கள் சிடிபாங்க் கார்ட் மூலம் இப்போது பணம் செலுத்த முடியும்

அதிகப்படியான விவரங்களுக்கு சிடிபேங்க் பாங்கிங் தொடர்பு கொள்ளவும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகளின் அட்டவணை

மேற்கு மண்டலம்

அகமதாபாத்: டாக்டர் ஜீவராஜ் மேஹ்தா ஸ்மாரக் ஹெல்த் ஃபவுண்டேஷன் மெடிக்கல் ரிசர்ச் சென்டர் • நீ குஜராத் ரிசர்ச் & மெடிக்கல் இன்ஸ்டிட்யூட் (இராஜஸ்தான் ஹாஸ்பிடல்) • ஷார்தாபென் ஜெனரல் ஹாஸ்பிடல் • எல்ஜி ஹாஸ்பிடல் • வி.எஸ். ஜெனரல் ஹாஸ்பிடல். **பரோடா:** பாம்பாய் அமின் ஜெனரல் ஹாஸ்பிடல் • ஸ்ரீ நாராணி ஆரோக்கிய கேந்த்ரா • மேயோ ஹாஸ்பிடல் **போபால்:** நிராமே ஹாஸ்பிடல் • மேயோ ஹாஸ்பிட்டல் • கஸ்தூர் மெடர்னிடி & நர்ஸிங் ஹோம். **பம்பாய்:** டாக்டர் பாலாபாய் நானாவதி ஹாஸ்பிடல் • பம்பாய் ஹாஸ்பிட்டல் • சர் ஹர்கிஸன்தாஸ் நரோத்தம்தாஸ் ஹாஸ்பிடல் • பி.டி. ஹிந்துஜா நேஷனல் ஹாஸ்பிட்டல் அண்ட் மெடிக்கல் ரிசர்ச் சென்டர் • கம்பாலா ஹில் ஹாஸ்பிடல் & ஹார்ட் இன்ஸ்டிட்யூட் • ஜஸ்லோக் மெமோரியல் சர்ஜிகல் சிஸ்டர்ஸ் & ஜெனரல் ஹாஸ்பிடல் & பிரிஞ்மோஹன் மெமோரியல் பாலிக்ளினிக் பேதாலெஜிகல் லேப் & எக்ஸ்-ரே கிளினிக் • டாக்டர் தேஷ்முக் ஹாஸ்பிடல் • துர்கா நர்ஸிங் ஹோம் • மங்கள் ஆனந்த் ஹாஸ்பிடல். **இந்தோர்:** சோய்த்ராம் ஹாஸ்பிடல் & ரிசர்ச் சென்டர் • க்யூர்வெல் ஹாஸ்பிடல் பிரை. லிட். • கிரேட்டர் கைலாஷ் ஹாஸ்பிடல் • நோபல் ஹாஸ்பிடல் • அப்போலோ மெடிக்கல் இன்வெஸ்டிகேஷன். **ஜபல்பூர்:** ஜபல்பூர் ஹாஸ்பிடல் & ரிசர்ச் சென்டர். **நாக்பூர்:** சென்ட்ரல் இந்தியா இன்ஸ்டிட்யூட் ஆஃப் மெடிக்கல் சையன்ஸ் • நேரு மெமோரியல் ஹாஸ்பிடல். **நாசிக்:** நாசிக் மெமோரியல் ஹாஸ்பிடல் அண்ட் ரிசர்ச் சென்டர் (பி) லிட். **புனே:** கிங் எட்வர்ட் மெமோரியல் ஹாஸ்பிடல் • ஸஞ்சேடி இன்ஸ்டிட்யூட் ஃபார் ஆர்தோபீடிக்ஸ் & ரிஹேபிலிடேஷன் • ஜஹாங்கீர் நர்ஸிங் ஹோம் • ரூபி ஹால் நர்ஸிங் ஹோம். **ராஜ்கோட்:** ராஜ்கோட் கேன்சர் சொஸைட்டி • ஹோம். ஜே. டோஷி சர்வஜனிக் ஹாஸ்பிடல் & மெடிக்கல் ரிசர்ச் சென்டர் • ஸ்ரீ ஜி.டி. ஷேத் ஆர்தோபீடிக் ஹாஸ்பிடல். **சூரத்:** ஸ்ரீ மஹாவீர் ஜெனரல் ஹாஸ்பிடல் • ஷேத் புருஷோத்தம்தாஸ் தாகுர்தாஸ் சூரத் ஜெனரல் ஹாஸ்பிடல்

வட மண்டலம்

ஆக்ரா: பார்க் ஹாஸ்பிடல் அண்ட் ரிசர்ச் சென்டர் • திஜி மெடிக்கல் அண்ட் ரிசர்ச் சென்டர். **ஃபரிதாபாத்:** எஸ்கார்ட் மெடிக்கல் சென்டர். **காஜியாபாத்:** நரேந்தர் மோஹன் ஹாஸ்பிடல் • சர்வோதயா ஹாஸ்பிடல். **ஜெய்ப்பூர்:** சந்தோபா துர்லப்ஜி மெமோரியல் ஹாஸ்பிடல் • சோனி ஆஸ்பிடல் • மோனிலெக் ஹாஸ்பிடல் • ஸாஹல் ஹாஸ்பிடல். **கான்பூர்:** டி.என். மெமோரியல் நர்ஸிங் ஹோம் • சிஷு நர்ஸிங் ஹோம் & ஹாஸ்பிடல் • மதுராஜ் நர்ஸிங் ஹோம். **லக்னோ:** விவேகானந்த் பாலிக்ளினிக் • கிருஷ்ணலோக் ஹாஸ்பிடல். **லூதியானா:** குரு டேக் பஹதூர் ஸாஹிப் சேரிடபிள் ஹாஸ்பிடல் • மோஹன் டாய் ஓஸ்வால் கேன்சர் ட்ரீட்மெண்ட் & ரிசர்ச் ஃபவுண்டேஷன். **புது தில்லி:** பாத்ரா ஹாஸ்பிடல் & மெடிக்கல் ரிசர்ச் சென்டர் • எஸ்கார்ட்ஸ் ஹார்ட் இன்ஸ்டிட்யூட் & ரிசர்ச் சென்டர்.

கிழக்கு மண்டலம்

கல்கத்தா: கோத்தாரி மெடிக்கல் சென்டர் • ராம்கிருஷ்ணா சேவா ப்ரதிஷ்டான் • வுட்லேண்ட்ஸ் சிடி மெடிக்கல் சென்டர் & ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் • ஸேபா கோப்ரேடிவ் ஹெல்த் சொஸைடி லிட். • கல்கத்தா மெடிக்கல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட் • பீயர்லெஸ் ஹாஸ்பிடல் & பி.கே. ராய் ரிசர்ச் சென்டர். **தன்பாத்:** தன்பாத் நர்ஸிங் ஹோம் • பண்டிட் க்ளினிக். **குவஹாத்தி:** டவுன்டவுன் பாலிக்ளினிக் & நர்ஸிங் ஹோம் • சண்ட் ஸன்ட் நர்ஸிங் ஹோம் & ரிசர்ச் இன்ஸ்டிட்யூட். **பாட்னா:** குர்ஜி ஹோலி ஃபேமிலி ஹாஸ்பிடல் • ஷா க்ளினிக் • ராஜ் சிகித்ஸா ஹாஸ்பிடல்.

தென் மண்டலம்

அங்கமாலி: லிட்டில் ஃப்ளவர் ஹாஸ்பிடல். **பெங்களூர்:** மணிப்பால் ஹாஸ்பிடல் • செயின்ட் ஜான்ஸ் மெடிக்கல் காலேஜ் ஹாஸ்பிடல் • ராமையா மெடிக்கல் டிரஸ்ட் ஹாஸ்பிடல் • மல்லிகே மெடிக்கல் சென்டர் • மல்லையா ஹாஸ்பிடல் • பெங்களூர் சிட்டி ஹாஸ்பிடல் • கார்டன் சிட்டி ஹாஸ்பிடல். **கோயம்புத்தூர்:** கோவை மெடிக்கல் சென்டர் & ஹாஸ்பிடல் லிட். • கே.ஜி. ஹாஸ்பிடல் • ஸ்ரீராமகிருஷ்ணா ஹாஸ்பிடல் • குப்புஸ்வாமி நாயுடு மெமோரியல் ஹாஸ்பிடல். **ஹூப்ளி:** கர்நாடகா கேன்சர் தெரப்பி & ரிசர்ச் சென்டர் • டாக்டர் ஆர்.பி. பாடில் நர்ஸிங் ஹோம் • சிவகுமார் நர்ஸிங் ஹோம் (நியூரோஸர்ஜரி) • சர்ஜிகல் க்ளினிக் • சிட்டி க்ளினிக் • ஷேமா ஆர்தோபீடிக் ஹாஸ்பிடல் (பி) லிட். • சீதாராம் மோகாஷி மெமோரியல் ஹாஸ்பிடல் • டாக்டர் எஸ்.ஆர். ரமணகவுடர் நர்ஸிங் ஹோம் • கே.எஸ்.சி. மெடிக்கல் சொஸைட்டி பெல்காம். **ஹைதராபாத்:** அப்போலோ ஹாஸ்பிடல் • மெட்வின் ஹாஸ்பிடல் • கேர் மெடிக்கல் சென்டர். **கொச்சி:** மெடிக்கல் டிரஸ்ட் ஹாஸ்பிடல் • சிட்டி ஹாஸ்பிடல். **கொல்லம்:** ஹோலிகிராஸ் ஹாஸ்பிடல் • டாக்டர் நாயர்ஸ் ஹாஸ்பிடல். **கோழிக்கோடு:** பீ.ஆர்.எஸ் ஹாஸ்பிடல்ஸ் (பி) லிட். • பேபி மெமோரியல் ஹாஸ்பிடல் • மலபார் ஹாஸ்பிடல் • கேரிங் யுனிட் கோ ஆபரேடிவ் ஹாஸ்பிடல். **சென்னை:** அப்போலோ ஹாஸ்பிடல் • தமிழ்நாடு ஹாஸ்பிடல் லிமிடெட் • சென்னை காளியப்பா ஹாஸ்பிடல் • விஜயா ஹாஸ்பிடல் • ட்ரினிட்டி நர்ஸிங் ஹோம் • அமர் ஹாஸ்பிட்டல் • மலர் ஹாஸ்பிட்டல்ஸ். **மதுரை:** ஓரியண்ட் ஹாஸ்பிடல் பிரை. லிட். • சென்பகம் நர்ஸிங் ஹோம் • மீனாக்ஷி மிஷன் ஹாஸ்பிடல் & ரிசர்ச் சென்டர் • வடமலையான் ஹாஸ்பிடல். **மைசூர்:** பாரத் கேன்சர் ஹாஸ்பிடல் • பாலப்பா மெமோரியல் ஹாஸ்பிடல். • மேரி காஸ்வெர்ட் ஹோலண்ட்வொர்த் மெமோரியல் ஹாஸ்பிடல். **சேலம்:** கோபி மெமோரியல் ஹாஸ்பிடல் • நீ ஸ்லேனோ ஹாஸ்பிடல் • கோகுலம் ஹாஸ்பிடல் **திருவனந்தபுரம்:** காஸ்மோபாலிடன் ஹாஸ்பிடல் • ரீஜனல் கேன்சர் சென்டர் • ஸ்ரீ உத்ராடம் திருநாள் ஹாஸ்பிடல். **திருச்சூர்:** அஸ்வினி ஹாஸ்பிடல். **திருச்சி:** அட்லாண்டிக் மெடிக்கல் கேர் லிட். • சிட்டி ஹாஸ்பிடல் • ஷா நவாஸ் நர்ஸிங் ஹோம். **விசாகப்பட்டினம்:** சேவன் ஹில்ஸ் ஹாஸ்பிடல் (பி) லிட். • வாஸா ஹாஸ்பிடல் (பி) லிட். • செயிண்ட் ஜோஸப் ஹாஸ்பிடல். **விஜயவாடா:** லைஃப் ஹாஸ்பிடல்ஸ் • நாகார்ஜுனா ஹாஸ்பிடல்ஸ்.

லாமே இருக்கும். இங்கே சட்டையை அழுக்காக்காதீங்க!"

அபூர்வா உள்ளே சென்றாள்.

நஞ்சுண்டன் அவளை அவளுடைய அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றான்.

அவளுடைய அலுவலக அறை மிகவும் விசாலமாக இருந்தது. நேர்த்தியாக ஒப்பனை செய்யப்பட்டிருந்தது.

அவள் நாற்காலிக்குப் பின்னால் தலைவருடைய படம்.

"இந்த அமைச்சர்களை வச்சுகிட்டு, நான் என்ன செய்ய முடியும்?" என்றாள் அபூர்வா.

"ஒண்ணும் செய்ய வேணாம். ஆளுங் கட்சியிலே சுமார் இருநூத்திச் சொச்சம் அங்கத்தினர்கள் இருக்காங்க... எல்லாருக்கும் அமைச்சரா இருக்க வாய்ப்புக் கொடுங்க. அடிக்கடி மாத்துங்க... பெயர்தான் மாறுமே தவிர, நம்பர் மாறாது'' என்றான் நஞ்சுண்டன்.

"இவங்கள்ளே திறமைசாலிகளே கிடையாதா?"

"அதை ரொம்பத் திறமையா ஒளிச்சு வச்சிண்டிருக்காங்க. கண்டுபிடிக்கறது கஷ்டம். ஆனா..."

"ஆனா...?"

''அருமையான வியாபாரிகள். ஒரு ரூபாயை எப்படி ஒரு லட்ச ரூபாயாக்கறதுங்கிறதைப் பத்தி நீங்க அவங்ககிட்டே பாடம் கேக்கணும். இதுதான் அவங்களுக்குத் தெரிஞ்ச பொருளாதாரம். சட்டசபை அங்கத்தினர்களும் இவங்களுக்கு எந்த விதத்திலும் குறைஞ்சவங்க இல்லே..."

"அப்போ மாசம் ஒரு தேர்தல் நடத்தி, நாட்டு மக்கள் எல்லாருக்குமே சட்டசபை அங்கத்தினராக இருக்கக்கூடிய வாய்ப்புக் கொடுத்தா, நாட்டுப் பொருளாதாரப் பிரச்னை தீருமா?"

"தினம் ஒரு தேர்தல் நடத்தினா எல்லோருமே கோடீஸ்வரர்களாக ஆயிடலாம். ஆனா... ஒரு சின்ன பிரச்னை..."

"என்ன?"

"இதுக்கு முதல் எங்கேயிருக்குங்கிறது தான்."

"முதலைகள் இருக்கு, முதல் இல்லேங்கிநீங்க" என்றாள் அபூர்வா சிரித்துக் கொண்டே.

"எக்ஸாட்லி..."

"இன்னொரு விஷயம். நான் என் வேலையை 'சீரியஸா' எடுத்துண்டு, நாட்டுப் பிரச்னைகளைத் தீர்க்க முயற்சி செய்யலாமா? நான் இதற்குத் தலைவரைப் பார்த்தாகணுமே..."

நஞ்சுண்டன் பதில் கூறாமல் மௌனமாக இருந்தான்.

"என்ன பேசாம இருக்கீங்க?"

"நீங்க வெற்றி அடைய வேண்டுமென்பது தான் என் பிரார்த்தனை. சரி... அமைச்சர்களை 'கான்ஃப்ரென்ஸ் ஹால்'லே சந்திக்கிறீங்களா?"

"அதான் சந்திச்சாச்சே... என் பாதம் புண்ணாயிடும் போலிருக்கே..."

"இல்லே... ஒரு 'ஃபார்மல் மீட்டிங்'..."

அபூர்வா அந்தக் கூடத்துக்குள் நுழைந்தாள். அவளுக்கெதிரே பத்தடி தள்ளி நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவள் நுழைந்ததும் எழுந்திருந்த அமைச்சர்களை அவள் உட்காரும்படி கையசைத்தாள். அவள் பக்கத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் வனிதா உட்கார்ந்தாள்.

" 'அட்டென்டென்ஸ்' உண்டா?" என்றாள் அபூர்வா.

அவள் நகைச்சுவையைப் புரிந்து கொள்ளாமலோ அல்லது அலட்சியம் செய்தோ, ஒரு மூத்த அமைச்சர் கூறினார். "எல்லாரும் வந்திருக்கோம், மேடம்."

அபூர்வா சொன்னாள், "தலைவருடைய நம்பிக்கைக்கு நான் தகுதி உடையவள் என்பதை நான் நிரூபித்தாக வேண்டும். நீங்கள் திறமையாகச் செயல்படுகின்றீர்களா என்பதற்கு ஒரு பரிசோதனை. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பொறுப்பின் கீழிருக்கும் துறைகளின் பெயரைச் சொல்லுங்கள். இதோ என்னிடமுள்ள ஃபைலில் முழு விவரங்களுமிருக்கின்றன. தப்பாகச் சொல்கின்றவர்கள் அனைவரும் அமைச்சரவையிலிருந்து நீக்கப்படுவார்கள். ஆரம்பியுங்கள் நம்பர் ஒண்ணு..."

அமைச்சர்கள் திடுக்கிட்டனர்.

(தொடரும்)

"நாடு ரொம்ப கெட்டுப் போச்சுங்க!"

"எப்படி சொல்றீங்க?"

"அந்தக் குழந்தைக்கு 'அம்மா' பேரைச் சூட்டியதும் எம்.எல்.ஏ.க்கள்லாம் அந்த குழந்தை கால்ல விழுந்து கும்பிடறாங்களே!"

— எஸ். முகம்மது யூசுப்



வாழ்க்கை ஒரு தவம்!

கனவு மெய்ப்படும் - 10



சேதம் அடையக் கூடிய ஐந்து உறுப்புகளையும் பாதுகாப்பான வலிய ஓட்டுக்குள் ஆமை இழுத்துக் கொள்வது போல உள்ளச் சமநிலை என்ற பாதுகாப்பில் ஐம்புலன்களும் ஒடுங்க வேண்டும் என்று சொல்கிறது கீதை. பின்னாளில் மகாகவி பாரதி 'பக்தி உடையார் காரியத்தில் பதறார்' என்று சமூகத்தின் செவிகளில் தேன் பாய்ச்சிய கருத்தும் இதுவே.

'பதறிய காரியம் பாழ்' என்று காலம் எழுதிய கவிதை - அதுதான் பழமொழி - படித்தது உண்டே. உணர்ச்சி மேலோங்கிய படபடப்பு, பரபரப்பு, காரியத்தின் மேன்மையைக் கெடுத்து விடுகிறது. பெரும்பாலும் உணர்ச்சி, தவறான முடிவுகளில் தள்ளி விடுகிறது. கோபம், பச்சாதாபம் போன்ற உணர்ச்சிகளின் தூண்டுதலால் எடுக்கப்பட்ட முடிவுகள்தாம் நம் வாழ்வில் சரிவுக்கான காரணங்கள்.

சமநிலையில் எடுக்கப்பட்ட முடிவுகள், சமவெளியில் உருவான நாகரிகம் போல... பதற்றம் இல்லாத மனோநிலையில் விளைந்த தீர்மானங்கள் தீர்க்கமானவை. சத்யமானவை. நியாயமானவை. சமூகத்திற்கு அவசியமானவை.

திருப்பதி பெருமாளுக்குப் பூக்கட்டும் திருப்பணி செய்தவர் அனந்தாழ்வார் என்கிற அடியவர். நாராயணா என்னும் நாமத்தை நாவால் தொடுத்து, நந்தவனத்து நாள் மலரை நாரால் தொடுக்கும் நற்பணியாற்றிய நம்பியே அவர். அனந்தன் என்றால் பாம்பைக் குறிக்கும். ஆதிசேடன் பெயர் தாங்கிய அடியவரே அனந்தாழ்வார். ஒருநாள் பூக்களைத் தொடுக்கும் பக்திப் பணி புரிந்த போது பாம்பு ஒன்று அவர் விரலைத் தீண்டியது. பதறாமல் பணியைத் தொடர்ந்தார். பூமாலை கட்டி பெருமான் திருத்தோளில் சாற்றப் போனார்.

பெருமாள் பதறினாராம். "பாம்பு... பாம்பு... அனந்தா... பாம்பு கடித்து விட்டது" என்றதும் நிதானமாக அனந்தாழ்வார் "ஸ்வாமி... கடித்த பாம்புக்கு விஷம் அதிகம் என்றால் கைங்கர்யம் அங்கே. கடியுண்ட பாம்புக்கு விஷம் அதிகமானால் கைங்கர்யம் இங்கே. பின் என்ன கவலை?" என்றார்.

ஒருவேளை கடித்த பாம்பு விஷம் அதிகம் உடையது என்றால் மரணம் வரும். மரணம் வந்தாலும் கவலை இல்லை. இறந்தால் வைகுந்தம் போகலாம். அங்கும் மாலை கட்டி பெருமாளுக்கு இதே தொண்டு செய்யலாம். கடியுண்ட பாம்பாகிய (அனந்தன் = பாம்பு) தமக்கு விஷம் அதிகம் என்றால் மரணம் வராது. இறக்கவில்லை என்றால் இதே மாலை கட்டும் திருப்பணியை இங்கேயே தொடர்ந்து செய்யலாம். என்ன தெளிவு? என்ன உறுதி? துன்பத்திற்குத் துன்பப் படாத மகாஞானி அவர்.

சுகி சிவம்



''நம்ம ஏட்டு வடிவேலு சுயசரிதை வெளியிட்டிருக்காராமே... என்ன பேரு?''
''சில்லறை நினைவுகள்!''

— அம்பைதேவா

நம்மவர்களில் பலர் கஷ்டங்களால் சாவதை விட கஷ்டங்களைப் பற்றிய கற்பனைகளால் சாகிறார்கள். ஆபத்துக்களை விட ஆபத்துக்களைப் பற்றிய கற்பனைகள் ஆபத்தானவை.

ரயில் வேகமாக ஓடிக் கொண்டே இருந்தது. எதிர் எதிராக இருவர் ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்தபடி உட்கார்ந்திருந்தனர். ஒருவர் தமது கையை வெளியே ஜன்னல் வழியே தொங்க விட்டிருந்தார். திடீர் என்று அவரது விலை உயர்ந்த கைக் கெடிகாரம் கழன்று விழுந்து விட்டது. அவர் பதறித் துடித்து படாதபாடுபட்டார். ஜன்னல் வழியே வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்த மற்றொருவர் அவர் துயரத்தில் சிறிதும் பங்கேற்கவில்லை. எந்தவித சலனமும் இன்றி வெளியில் வேடிக்கை பார்த்தபடியே பயணம் செய்கிறார். அடுத்த நிலையத்தில் ரயில் நின்றதும் அவர் ரயில் நிலைய அதிகாரியை அழைத்து இங்கிருந்து இத்தனையாவது தந்திக் கம்பத்துக்கு அருகில் கடிகாரம் கிடக்கிறது. அதை எடுத்து எதிரில் உள்ளவரின் முகவரிக்குச் சேர்ப்பிக்கும்படி அறிவுறுத்துகிறார். அவர் ஜன்னல் வழி வேடிக்கை பார்த்தாரா? தந்திக் கம்பங்களை எண்ணிக் கொண்டு வந்தார்! அந்த ஸ்திதப்ரக்ஞன் வேறு யாருமல்ல. அண்மைக் காலம் வரை நம்முடன் வாழ்ந்த மூதறிஞர் ராஜாஜி.

மரண தண்டனைக்குரிய கைதிக்காக வாதாடிக் கொண்டிருந்த போது மனைவி மரணம் அடைந்த செய்தி தந்தி வழி வந்து சேர்ந்தது. படித்து விட்டு, பாக்கெட்டில் மடித்து வைத்துக் கொண்டு வழக்கைத் தொடருகிறார் வக்கீல். இந்தியத் தாயின் தவப்புதல்வர்களில் ஒருவரான அந்த இரும்பு மனிதர் - சர்தார்வல்லபபாய் படேல்! முடிந்து போன மனைவிக்காகப் பதறித் துடிப்பதை விட, காப்பாற்றப்பட வேண்டிய உயிருக்காகக் கடமையாற்றும் சமநிலையில் வாழ்ந்த இரும்பு மனிதர்களின் வாழ்க்கை, இந்திய இளைஞனுக்குப் பாடமாகட்டும்.

துன்பத்துக்கும் உயிருக்கும் பண்டமாற்று செய்யும் வாழ்க்கைச் சந்தையில் சில பேர் இன்பத்துக்கும் உயிரை விற்கிறார்கள். இது பெரிய வேடிக்கை அல்லவா? இரண்டு லட்ச ரூபாய் லாட்டரி குலுக்கலில், ஒரு இருதய நோயாளிக்குப் பரிசு கிடைத்து விட்டது. பரபரப்பாக இந்தச் செய்தியை அவரிடம் சொல்ல வந்த குடும்பத்தாரை டாக்டர் கடிந்து கொண்டார். திடீர் என்று சொன்னால் இந்த மகிழ்ச்சியை அவர் இதயம் தாங்காது என்று விளக்கி, தாமே சொல்வது என்று தீர்மானித்தார். மெல்ல மெல்ல நலம் விசாரித்தார். வெவ்வேறு விஷயம் பேசி விட்டு சிரித்தபடி கேட்டார்.

''உங்களுக்கு லாட்டரியில் இருநூறு ரூபாய் விழுந்தால் என்ன செய்வீர்கள்?''

''எங்கே விழப் போவுது... விழுந்தா, நீங்க எழுதின மருந்து எல்லாத்தையும் வாங்குவேன்'' என்றார் நோயாளி.

''ஒரு பத்தாயிரம் விழுந்தால்...'' இழுத்தார் டாக்டர்.

''வீடு ஒழுகுது. ரிப்பேர் செஞ்சிடுவேன்...'' என்றார் அவர்.

''லட்ச ரூபாய் விழுந்தால்?''

''பொண்ணு கல்யாணத்தை முடிச்சிடுவேன். கவலை இல்லை.''

''இரண்டு லட்ச ரூபாய் நிஜமாகவே விழுந்தால் என்னதான் செய்வீர்கள்? உண்மையைச் சொல்லுங்கள்'' என்று இறுதியாக விஷயத்துக்கு வந்தார் டாக்டர்.

''என்ன செய்வேன்... எவ்வளவு நல்ல டாக்டர் நீங்க... சாவிலிருந்து என்னைக் காப்பாற்றியவர். அதனால ஒரு லட்ச ரூபாய் உங்களுக்கே கொடுத்து விடுவேன்'' என்றார் நோயாளி. அடுத்த விநாடி 'ஆ' என்ற அலறல். நெஞ்சைப் பிடித்தபடி மயங்கி விழுந்தார் டாக்டர்! அந்த இன்ப அதிர்ச்சியைத் தாங்காமல் டாக்டரது இருதயம் நின்று போய் விட்டது!

சுகமும் துக்கமும் இரண்டுமே ஆபத்தானவைதான். சமநிலைதான் சரியான வாழ்க்கை வழி. ஒரு நிமிட ஆத்திரத்தில் கொலை செய்து விட்டு வாழ்நாள் எல்லாம் வருந்துவது... ஒரு நொடி இரக்கத்தில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டு வாழ்வெல்லாம் அவளையும் அழவைத்து தானும் அழும் முட்டாள்தனம்... ஒரு க்ஷணம் இன்பம் கருதி ஒரு முழு வாழ்க்கையை நாசமாக்கும் மிருக வெறி... இவையாவும் ஸ்திதப்ரக்ஞனுக்கு இல்லை. அவனது வாழ்க்கை முழுதும் ஒரு தவம். ஒரு யோகம்... ஒரு பரிசுத்தமான யாகம்!

(தொடரும்)

சந்தை



● சிறுகதைப் படைப்பின் உள் விவகாரம்/கட்டுரைகள்/மேலாண்மை பொன்னுச்சாமி/குமரி பதிப்பகம், நாகை - 1./ரூ. 28.00


நல்ல சிறுகதை எது என இனம் காட்ட (காண) முயலும் விவ(கா)ரமான கட்டுரைகள்.

● அபாயத் திருப்பங்கள்/நாவல்/ஆர்னிகா நாசர்/மணிமேகலை பிரசுரம், சென்னை - 17./ரூ. 14.50

விறுவிறுப்பான மர்ம நாவல். உத்தரவாதமாகப் பொழுது போகும்.

● காமராஜை சந்தித்தேன்/கட்டுரைகள்/சோ/அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை - 4./ரூ. 22.00

காமராஜரைப் பற்றி துக்ளக் ஆசிரியரின் நெடும் கட்டுரையுடன் வேறு சிலரின் அனுபவங்களும் கூட! இன்றைய அரசியல்வாதிகள் ஒருதரம் படித்துப் பார்த்தால் தம்மைப்பற்றி ஒரு கணம் தலை குனியக் கூடும்...?



● திராவிடம் பாடிய திரைப்படங்கள்/அறந்தை நாராயணன்/என்.சி.பி.எச், சென்னை - 98./ரூ. 40.00

திராவிட உணர்வு வளர்த்த திரைப்படங்கள், கலைஞர்கள் பற்றிய உபயோகமான ஆராய்ச்சி. தொகுத்த விதத்தில் கொஞ்சம் 'ஏனோ தானோ' [illegible]ம்.



● சிந்தனை மலர்/சில்பதாசன்/கட்டுரைகள்/சில்பம் பதிப்பகம், 115, பாரதி நகர், விரவநல்லூர் - 627 426./ரூ. 10.50

வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை அலசிப் பார்க்கும் முயற்சி. சுவாரஸ்யமான நடை.

● ஹைகூ கவிதைகள்/ஆர்.வி.பதி/அபராஜிதா பதிப்பகம், 30, குப்புசாமி தெரு, செங்கற்பட்டு - 603 002./ரூ. 8.00

"பட்டாசு தயாரிக்கிறார்கள்
வறுமைச் சிறுவர்கள்
சிறுவர்களுக்காக."

- இது போன்ற மூன்று வரி சிந்தனைத் தெறிப்புகள்.

● A Hundred years of Light/ ஜகத்குரு சேவாசமிதி வெளியீடு - டி.டி. மாப்ஸ் & பப்ளிகேஷன்ஸ் லிட், சென்னை.

காஞ்சிப் பெரியவரின் அபூர்வமான புகைப்படத் தொகுப்பு. அவரது இளமைக் காலம் முதல் பல்வேறு காலகட்டங்களில் பலரால் எடுக்கப்பட்ட வண்ணப் படங்கள், கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கின்றன.

ரிஷபன்

குக்கூ

எஸ்ஸார் ஸாபா வாசலில் வந்து சொல்லி வைத்த மாதிரி செருப்பு அறுந்தது.

கையில் 'பளப்பளா' அழைப்பிதழ். இன்னும் அரை மணியில் நிகழ்ச்சி. இடம் தேடி வசதியாய் அமர வேண்டும். குரு இங்கே எனக்காகக் காத்திருப்பதாய் நேற்றே ஃபோன் செய்தான்.

நிறைய நிகழ்ச்சிகளுக்காக வந்த இடம்தான். சபா வாசலில் சற்று தள்ளி செருப்பு தைப்பவர் இருக்கிறார். வயசானவர். என் தோஸ்த். 'இவரைப் பற்றி' என்று ஒரு முறை 'மதுரத்'தில் புகைப்படத்துடன் கட்டுரை எழுதியிருக்கிறேன்.

இருந்தார். பல் டாக்டரிடம் போனால் கூடச் சொல்ல வேண்டும். 'கடவாப் பல்லில்... வலி' என்று. இங்குதான் கேள்வி, பதில் இல்லாத இடம். மௌன பாஷை. தேவை சுலபமாய்ப் புரிபடும்.

கழற்றி விட்டு, தள்ளி நின்றேன்.

பெரிய பெரிய போஸ்டர்கள். சபா வாசலில் மின்னுகிற எழுத்துக்கள். எல்லாப் பிரமுகர்களும் வருகிறார்கள். சினிமா உலகமே வரப் போகிறது. சங்கீத ரிஷி வருகிறார். டைரக்டர் காண்டீபன் வருகிறார். எத்தனை கிசுகிசுக்கள் கிடைக்குமோ...

என் அவசரம் புரிந்த மாதிரி செருப்பு நொடியில் தயார். 'அய்யாகிட்டே கொடுரா' என்றதும் ஒரு சிறுவன் என்னருகில் கொண்டு வந்தான்.

பர்ஸைத் துழாவுமுன் குரு வந்து விட்டான்.

"உனக்காக எத்தனை நேரம் காத்துக்கிட்டு இருக்கறது?"

என் நிலை அவனுக்குப் புரிபடுவதற்குள் பாதி தூரம் இழுத்துப் போய் விட்டான். சரி, திரும்பும் போது தரலாம் என்று போனேன்.

"கல்யாணம் ஆகலேன்னு மறுப்பு விட்டாங்கதானே. உள்ளே வந்து பாரு. ஜோடியா வந்து உட்கார்ந்திருக்காங்க."

முதல் கிசுகிசு சுவாரசியமாய் ஆரம்பித்தது.

ஹால் நிரம்பி வழிந்தது. வெளியில் பாஸ் இல்லாமல் எங்களைப் பொறாமையுடன் பார்த்த நபர்களைக் கடந்து 'பிரஸ்' என்று ஒதுக்கியிருந்த இருக்கைகளைச் சமீபித்தோம்.

இதர நிருபர்களில் பலர் அறிமுக முகங்கள். சம்பிரதாயப் புன்முறுவல்கள். கையாட்டல்கள். சங்கேதப் பேச்சுக்கள்.

"ஃபங்ஷன் எப்ப ஆரம்பிக்கும்?"

"ரொம்ப அவசரப்படாதே. அங்கே பாரு மூணாவது 'ரோ'வில் நாலாவது சீட்... அஞ்சாவது சீட். அடுத்த கிசுகிசு புரியுதா?"

மிக நெருக்கமாய் இரண்டாவது விவாகரத்து செய்த நாயகனும், அவனுடன் நடித்த புதுப்பட நாயகியும்.

"கிழே மேலே' படம் சக்கைப் போடு போட்டிருச்சே. ஏகப்பட்ட வசூலாமே?" என்றேன்.

"வசூலாகி என்ன புண்ணியம்? பாட்டைப் பார்த்தீல்ல? படம் பூரா வசனம் காதால கேட்க முடியாது. பேரு ரிப்பேரு ஆயிருச்சு."

"பைசா வந்தா போறாதா. பேரைப் பத்தி எவன் கவலைப்படறான்?"

"ஓரளவுக்கு அந்தப் பயமும் இருக்கு. இல்லாமியா இப்ப இந்த விழா?"

"இதுக்கும் அதுக்கும் என்ன சம்பந்தம்?



இது ஒன்னும் வெற்றிவிழா இல்லியே?"

"பொறுத்திருந்து கவனி."

மேடையில் பரபரப்பு ஏற்பட்டது.

இரண்டாவது ஹீரோயினாய் பரிமளிக்கிற நடிகை, நிகழ்ச்சி நிரலைத் தொகுத்தார். இடையிடையே உச்சி குளிர வைக்கும் அறிமுக வசனங்கள். நிச்சயம் அடுத்த பட சான்ஸை இந்த மேடையிலேயே நிர்ணயித்து விடுகிற மாதிரி.

"எத்தனையோ விழாக்களை நாம சந்திச்சு இருக்கோம். இது வெற்றிப் பட விழா இல்லே. ஒரு தனிப்பட்ட மனிதன் தன் துறையில் தொடர்ந்து ஏன் வெற்றிகளையே சந்திக்கிறான்னு புரிய வைக்கிற விழா. மனசு நல்லா இருந்தா சக்ஸஸ் தானா வரும். அந்த அடையாளமா, இதோ உங்க முன்னிலையில்.... உங்கள் இயக்குனர் காண்டீபன்."

படபடவென்று கைத்தட்டல்கள். ஏகப்பட்ட ஃப்ளாஷ்கள். வீடியோ விளக்குகள். ஆளுயர மொத்த மாலை. ரோஜா இதழ்கள் சிதறின. டைரக்டர் புகழின் கனம் தாங்காமல் தள்ளாடினார்.

வரிசையாய்ப் பாராட்டுதல்கள் தொடர்வதற்கு முன் விழாவின் நோக்கம் தெரிவிக்கப்பட்டது.

"எத்தனை பேருக்குங்க இந்த மனசு வரும்! ஒரு அனாதைக் குழந்தைய தத்து எடுத்துக்க நீங்க முன் வருவீங்களா? பல தடவை யோசிப்போம். பின் வாங்கிருவோம். இதோ நம்ம முன்னால செயற்கரிய செயலைச் செஞ்சுட்டு சாதுவா நிக்கிறாரே இவரைப் பார்த்து பொறாமையா இல்லே!"

டைரக்டர் மைக்கைப் பற்றி இடைமறித்தார்.

"நீங்க எல்லாரும் செய்யணும். நான் வழிகாட்டி. அவ்வளவுதான். சினிமாக்காரன்னு சொன்னாலே... ச்சீன்னு பேசறவங்க மத்தியில அவங்களும் மனுஷங்கதான். நல்ல இதயம் அவங்ககிட்டேயும் இருக்குன்னு காட்டத்தான் இந்த விழா. இனி இது போல செயல்கள் தொடரணும்."

படபடவென கைத்தட்டல்கள் மீண்டும்.

"பார்த்தியா. எதுக்கு இந்த தத்து விழான்னு புரியுதா?"

நான் பேசவில்லை. பரபரப்பான இந்த விழா. இந்த நேருக்கு நேர் புகழுரைகள். சரிந்து போனால் உதறவும் நிமிர்ந்து நின்றால் ஜால்ராவுமாக காக்கைக் கூட்டம். பணத்தை வீசினால் எதையும் நிகழ்த்திக்

மோட்டார் சைக்கிள் பரிசுத் திட்டம் - 10

வாழ்க - தரும் - ராகங்களே - எனை - வானம் - என்னாளும் - தேன் - உனை - தாலாட்டுதே - மேகங்களே - சிந்துதே.

சின்னடைப் பிய்த்துக் கொண்டாயிற்றா? இனி இந்த வாரப் போட்டி. இது மழை சீசன். அதற்குப் பொருத்தமானதொரு பாடலின் நான்கு வரிகள், தலைகால் புரியாமல் மேலே பிரித்துப் போடப்பட்டிருக்கின்றன. வார்த்தைகளை ஒழுங்கு படுத்தினால் ஒரு பிரபல சினிமாப் பாடலின் நான்கு வரிகள் அகப்படும். அதைக் கூப்பனில் நிரப்பி, 26 வார முடிவில் மொத்தமாக அனுப்புங்கள். அதிகப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுபவருக்கு, மோட்டார் சைக்கிள் பரிசு. தவிர அநேக ஆறுதல் பரிசுகள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

போட்டி - 10

ஒழுங்கு படுத்தப்பட்ட வரிகள்:

....

....

....

....

....

என் பெயர் : ....

முகவரி : ....

....

....

காட்டலாம்.

இதுவரை தோன்றாத ஒரு ரிப்போர்ட்டரின் மனசுக்குள் அலுப்பு. எழ முயன்றேன்.

"என்ன?" என்றான் குரு. தொடர்ந்து.

"முட்டாள். இனிமேதான் களை கட்டப் போவுது. சங்கீத ரிஷி கையால அந்தக் குழந்தையை தத்து எடுக்கப் போறாரு. பார்க்க வேணாமா?"

"நீ பார்த்துட்டு வா. காலைல ஃபோன் பண்றேன். அரைப்பக்க நியூஸுக்கு இதுவரை நான் பார்த்ததே போதும்."

கூட்டத்தில் நீந்தி வெளியே வர மிகவும் சிரமப்பட்டேன். எத்தனை எரிச்சல் குரல்கள்.

வெளியில் கிழவன் இன்னமும் காத்திருந்தான். ஏதோ பழைய செருப்பின் அறுந்த வாரைத் தைத்துக் கொண்டிருந்தவனின் பக்கத்தில் ஒரு அரை டிராயர் சிறுவன். இன்றுதான் பார்க்கிறேன்.

"ஸாரி. பணம் கொடுக்காம போயிட்டேன்" என்றேன் ரூபாய் நோட்டை நீட்டிய படி.

"ஐயாவைத்தான் தெரியுமே. இன்னைக்கு தரலேன்னா நாளைக்கு... ஏமாத்தவா போறீங்க?"

"யாரு இது?" உன் பேரனா?"

சிறுவன் கையிலும் தோல் செருப்பு. ஊசி.

"இல்லீங்க. பக்கத்து வூடு. அப்பன், ஆயி ரெண்டு பேருமே செத்துட்டாங்க. குடிசை தீப்பத்திக்கிச்சு. இவன் மட்டும் வெளியே இருந்ததாலே பொழைச்சுக்கிட்டான். அப்படியே வுட்டா... சோறு தண்ணி இல்லாம அலைவான். பிச்சை எடுப்பான். சரி, நம்ம தொழிலைக் கத்துக் கொடுக்கலாம்னு வச்சுக்கிட்டேன். எனக்கும் வேற நாதி இல்லியே."

கிழவன் விரல்கள் துரிதமாய் இயங்க, வாய் மட்டும் பேசியது.

பசி தெரியாத, ஆதரவு கிடைத்துவிட்ட அனாதை முகம். மிகச் சுலபமாய் எந்த விழாவுமின்றி தத்து.

திரும்பிப் பார்த்தவன் பார்வையில் எதிர் சபா மின்விளக்குகளின் அலங்காரம்.

ரிப்போர்ட்டை விட மனசுக்கு இதமாய்க் கிடைத்த விஷயத்தில் உள்ளூர நெகிழ்ந்தேன்.

ரோகிணியின் பரிமாணங்கள்

சமீபத்தில் தூர்தர்ஷனில் 'கீதாஞ்சலி' என்ற டெலிபிலிம் ஒளிபரப்பானது. அதில் ரோகிணியின் நடிப்பைக் கண்டு வியக்காதவர்கள் கூட டைட்டில் கார்டில் 'திரைக்கதை, வசனம் ரோகிணி' என்பதைப் பார்த்ததும் நிச்சயம் புருவம் உயர்த்தியிருப்பார்கள்.

ரோகிணி, மெல்ல மெல்லப் புது அவதாரங்கள் எடுக்கத் தொடங்கியிருக்கிறார். வசனம் மற்றும் டைரக்ஷன் துறைகளில்!



"திரைப்படம் தொடர்பான எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ளும் ஆர்வம் எனக்கு உண்டு. எதையும் சிறப்பாகச் செய்து விட முடியுமென்கிற நம்பிக்கையும் உண்டு" என்னும் ரோகிணி, சுரேஷ்மேனனின் "ரேவதி" (சன் டீவி) தொடர்தான் தன்னை எழுத்துத் துறையில் முழுமூச்சுடன் ஈடுபட வைத்தது என்கிறார்.

" 'ரேவதி' தொடரின் ஸ்கிரிப்ட் அமைப்பதில் சுரேஷ்மேனன் எனக்கும் பங்களித்தார். அதில் என் ஈடுபாடு கண்டுதான் 'கீதாஞ்சலி'க்கு எழுதச் சொன்னார். மாதிரிக்கு சில காட்சிகள் எழுதிக் காண்பித்தேன். அது சுரேஷுக்குப் பிடித்துப் போனதால் முழுதும் செய்து முடித்தேன். கூடவே 'ரேவதி' தொடரின் உதவி இயக்குநராகவும் பணியாற்றுகிறேன்.

"திரைக்கதையைப் பொறுத்த வரை பாக்யராஜின் ஸ்கிரிப்ட்கள் எனக்கு ரொம்பப் பிடிக்கும். ரோஜாவில் சுஜாதாவின் வசனங்கள் என்னை மிகக் கவர்ந்தன. ஆனால் இந்த பாதிப்புகளெல்லாம் இல்லாமல்தான் என் படைப்புகள் இருக்கும்.

"டைரக்ஷனிலும் ஆசை இருக்கிறது. ஆனால் இப்போது ஏதும் உத்தேசம் இல்லை. இரண்டு, மூன்று வருடங்கள் கழித்துச் செய்து பார்க்க ஆசை இருக்கிறது."

ரோகிணிக்கு தமிழ் சினிமாவைப் பற்றிச் சில திட்டவட்டமான கருத்துக்கள் இருக்கின்றன. கமர்ஷியல் படங்களில் தனக்கு ஒரு ஸ்டார் அந்தஸ்து இருப்பதாகவெல்லாம் அவர் கருதவில்லை.

"நல்ல சினிமா பற்றி எங்கு பேச்சு வந்தாலும் நிச்சயம் என்னைப் பற்றியும் பேச்சு வரும். அது போதுமே!"

— அருண்சரண்யா

அடடா! என்ன நாட்டுப்பற்று!

● கேபிள் டீ.வி. ஆபரேட்டர்கள் குறைந்தபட்சம் இரண்டு தூர்தர்ஷன் சாடிலைட் சேனல்களாவது காட்ட வேண்டும் என்று சட்டம் இயற்றியிருக்கும் இவ் வேளையில், சென்னை மீர்சாகிப்பேட்டை பகுதியில் உள்ள சாடிலைட் கேபிள் டீ.வி. ஆபரேட்டர், இரவு 9 மணிக்கு மேல் கர்ம சிரத்தையாக பாகிஸ்தான் டீ.வி. காட்டுகிறார்.

'ஸ்டார், பி.பி.ஸி. எல்லாம் பார்க்கிறீர்களே, அப்போது உங்கள் நாட்டுப்பற்று எங்கே போயிற்று?' என்று கேட்கலாம். ஆனால் இவற்றில் காஷ்மீர் - மதம் - மனித உரிமைகள் போன்ற உணர்ச்சிபூர்வ விஷயங்களை ஒருதலைப்பட்சமாக அலசி இந்தியா மீது சேற்றை வாரி இறைப்

குமுறல் குமுறல் குமுறல் குமுறல் குமுறல் குமுறல் குமுறல் குமுறல்

பதில்லையே! சமீபத்தில் பெங்களூர் உருது நியூஸ் கலவரத்தைக் கூட விலாவாரியாக மிகைப்படுத்திக் காட்டினார்கள் பாக். டீவி நியூஸில்.

சென்னை, சாரதி.

● ஈராக், குவைத், உலக வங்கி ஆகியவை இணைந்து, ஈராக்கிலிருந்தும் குவைத்திலிருந்தும் அகதிகளாய் தத்தமது நாடுகளுக்கு திரும்பியோருக்கு நஷ்டஈடு வழங்கப் போவதாகவும், தகுந்த ஆதாரங்களுடன் அகதிகளாய்த் திரும்பியவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம் எனவும் செய்தி வந்தது. நானும் என்னைப் போல் பலரும் நமது வெளியுறவுத் துறைக்கு விண்ணப்பம் செய்து கொண்டோம். இந்த 1994-ஆம் வருடம் முடிந்தால், விண்ணப்பம் அனுப்பப்பட்டு நாலு வருடங்கள் முடிந்து விடும். ஆனால் இன்று வரை நஷ்டஈட்டுத் தொகை கிடைப்பதற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை.

பட்டுக்கோட்டை, பெரியதம்பி.



• வேதரத்தினம் பிள்ளை

● தமிழ்நாடு முழுதும் கிராமப்புறங்களில் சாமி கும்பிடுவது என்ற பெயரில் பெரிய ரகளையே நடக்கிறது. பல ஊர்களில் பக்தர்கள் இடையே கொலை, அடிதடி சண்டை நடந்து ரசாபாசமாய் உள்ளது. பந்து ஸ்பீக்கர்களைக் கட்டிக் கொண்டு, கோவிலுக்குச் சம்பந்தமில்லாத ஆபாச சினிமாப் பாடல்கள் போட்டு ஆர்ப்பாட்டம் செய்து, குடித்து கும்மாளம் பண்ணி... சே! நமது மடாதிபதிகள், 'இப்படியெல்லாம் செய்யக் கூடாது; சண்டை போடக் கூடாது. இறைவனை மனதார ஒரு நிமிடம் பிரார்த்தனை செய்தால் கூடப் போதும்' என அறிக்கை விடுவதற்கு என்ன?

போடி, எஸ். செல்லப்பன்.

● சர்தார் வேதரத்தினம் பிள்ளை தஞ்சாவூர் பகுதியைச் சார்ந்தவர். உப்பு சத்தியாகிரகத்தில் அவர் ஆற்றிய பங்கு உலகறியும். அப்பேர்ப்பட்ட தியாகிக்கு, உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் தஞ்சையில், மாநாட்டை ஒட்டி சிலை வைக்க வேண்டும் என்று இப் பகுதி வாழ் மக்கள் அரசைக் கேட்டுக் கொண்டனர். ஆனால் அரசுத் தரப்பில் மறுத்து விட்டதோடல்லாமல், 'வேண்டுமானால் நிதியை நீங்கள் திரட்டித் தாருங்கள்; சிலையை நாங்கள் வைக்கிறோம்' என்றும் கூறி விட்டனர். எத்தனையோ கோடி செலவழியப் போகும் இச்சமயத்தில் ஒரு தியாகிக்கு சிலை அமைக்க அரசு தயங்குவது வேதனையாயிருக்கிறது!

திருபுவனம், வி. கே. பிள்ளை.

வைகுண்டத்திற்கு விசா!

மலையை விலைக்கு வாங்கிய சங்கதி கேட்டிருக்கிறீர்களா?

பெங்களூரின் புறநகர்ப் பகுதியில் ஒரு மலையை வாங்கி, கிருஷ்ணர் கோவில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள், 'இஸ்கான்' ('ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா') அமைப்பினர்.

பத்து கோடி ரூபாய் (அத்தனையும் நன்கொடை) செலவில் கோவிலும், மலைப் பாதை முழுதும் நந்தவனமும், அருவியும், குளமுமாக படு வேகத்தில் உருவாகி வருகிறது ஆலயம்.


கோபுரத்தின் முதல் நிலையில் கிருஷ்ண லீலா காட்சிகள் கம்ப்யூட்டர் மூலம் ஒளி ஒலி பரப்பப்படவுள்ளது. மல்டி மீடியா உபயம்.

நன்கொடை வசூலிப்பின் ஒரு திட்டம் தான் "வைகுண்டத்துக்கு விசா" வழங்குவது. ரூ.25 ஆயிரத்திலிருந்து 50 லட்சம் வரை நிர்ணயித்துக் கொண்டு பல தவணைகளில் செலுத்தலாம்.

திட்டத் துவக்கத்திலேயே பாஸ்போர்ட் வழங்கப்படுகிறது. தவணைகள் செலுத்த, செலுத்த, 'வைகுண்டத்தின் பல நிலைகளைக் கடக்க', பாஸ் போர்ட்டில் ஸ்டாம்புகள் ஒட்டி 'விசா' வழங்கப்படுகிறது! முழு தொகை செலுத்தியானதும் பூவுலகிலேயே கிடைத்துவிடும் சொர்க்கம்!

கட்டட வேலைகள் ஒருபுறம் மும்முரமாக நடந்து கொண்டிருக்க, மறுபுறம் ஒரு தற்காலிக ஷெட்டில் கிருஷ்ணர் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார். பூஜை, பக்தர்கள் கூட்டம், கீதை வகுப்புகள் எல்லாம் இப்போதே ஆரம்பிக்கப்பட்டு விட்டன!

- ரமணன்



'நான் அவனில்லை' (படம் உதவி : பிலிம் நியூஸ் ஆனந்தன்)



I AM A WOMAN WHO IS UNFAITHFUL TO MILLION MEN.
— GRETA GARBO

என்கிற பழம்பெரும் ஹாலிவுட் நடிகை.

“லட்சக்கணக்கான ஆண்களுக்கு நான் நம்பிக்கைத் துரோகம் இழைப்பவள்” என்று அந்த ஹாலிவுட் நடிகை சொன்னதிலிருந்து அந்த நடிகைக்கு எத்தனை வெறி பிடித்த ஆண் ரசிகர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது புரிய வருகிறது.

இதையே தமிழ்த் திரையுலகத்தில் பெண் ரசிகைகளுக்குத் திருப்பிச் சொல்ல முடியுமென்றால் அந்தப் பெருமை தியாகராஜ பாகவதருக்கு உண்டு. அதற்குப் பின் வந்த சகாப்தத்தில் ஜெமினி கணேசன் அவர்களுக்குத்தான் அத்தனை வெறிபிடித்த பெண் ரசிகைகள் உண்டு.

ஒரு பக்கம் சிவாஜி என்கிற இமயம்; இன்னொரு பக்கம் எம்.ஜி.ஆர். என்கிற மாபெரும் 'Phenomenon'. இவர்களுக்கு நடுவே, இருவரையுமே பின்பற்றாத ஒரு பாணியுடன் தனக்கென ஒரு முத்திரை பதித்து வந்த கலைஞர் ஜெமினிகணேசன்.

முதன் முதலில் சந்திக்கும் போது சிலரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற சில அபிப்பிராயங்கள் எவ்வளவு தப்பானவை என்று பின்னால் நம்மை உணரவைக்கும் சம்பவங்கள் அவ்வப்பொழுது நிகழ்வதுண்டு. ஜெமினி கணேசன் என்னுடன் பணிபுரிய ஆரம்பித்த பிறகுதான் மெல்ல மெல்ல நான் அவரை முழுமையாகப் புரிந்து கொள்ள ஆரம்பித்தேன்.

நட்சத்திரக் கதாநாயக அந்தஸ்திலே இருந்த அந்தக் கலைஞரின் எளிய, இனிய குழந்தையுள்ளத்தைப் புரிந்து கொண்டேன். அவர் பழகுகின்ற முறை, அவருடைய வினோதமான சின்னச் சின்ன ஆசைகள் எல்லாமே அவரை எனக்கு ஒரு குழந்தையாகத் தான் தோற்றுவித்தன.

எத்தனை படங்கள் நான் அவரோடு பணிபுரிந்திருக்கிறேன்; கமலஹாசனுக்கு அடுத்தபடியாக எனது இயக்கத்தில் அதிகப் படங்களில் நடித்தவர் ஜெமினி அவர்கள்தான். அவரை இயக்குவிப்பது என்பது ஒரு சுவாரஸ்யமான விஷயம்தான். ஒரு மேஸ்திரியைப் போல் அவரிடம் வேலை வாங்குவது போலவும், ஆரம்பப் பள்ளி ஆசிரியனைப் போல் கையிலே பிரம்பை வைத்துக் கொண்டு அவரை ஆட்டுவிப்பதைப் போலவும் நான் பல நேரங்களில் உணர்ந்திருக்கிறேன்.

ஒத்திகை பார்க்கின்ற நேரங்களில், ஒத்திகையை விட்டு விட்டு மற்ற விஷயங்களைப் பற்றித் தமாஷாக அவர் ஏதாவது பேசுவதும், நான் அவரை அன்புடன் கடிந்து கொள்வதும் வழக்கமான ஒரு விஷயம்.

“தமாஷ் பேசி காட்சியின் Mood லிருந்து உங்கள் கவனத்தைக் கெடுத்துக் கொள்கிறீர்களே” என்று நான் அவரைக் கடுமையாகக் கடிந்து கொள்கின்ற நேரங்களிலெல்லாம், அவர் குழைந்து குழைந்து, என்னை கன்வின்ஸ் பண்ணுவதும் என்னை எப்படியாவது சமாதானப்படுத்துவதும் அவருக்குக் கைவந்த கலை.

நினைவுக்கு வருகிறது :

ஒருமுறை எனது படப்பிடிப்பிலே நடந்த நிகழ்ச்சி. நான் ஷாட்டை ரெடி பண்ணிக் கொண்டிருக்கும்போதே ஜெமினியைக் கூப்பிட்டு “வசனங்களைப் பார்த்துக் கொண்டு விட்டீர்களா” என்று கேட்டேன்.

“இந்த ஷாட்டில் வசனம் அதிகம் ஒன்றுமில்லை; ஒரே ஒரு வாக்கியம்தான்; ஷாட்டின் போது பார்த்துக் கொள்கிறேன்” என்று கூறிச் சற்று careless ஆக அப்பால் நகர ஆரம்பித்த ஜெமினி அவர்களின் கையைப் பிடித்து நிறுத்தினேன்.

“என்ன சொன்னீர்கள்?” என்று கேட்டேன்.

“பெரிசா வசனம் ஒன்னுமில்லே! ஒரே ஒரு sentence தான்னு சொன்னேன்” என்

நினைவலைகள்

15

றார்.

— அவரை நான் அண்ணாச்சி என்றுதான் அழைப்பேன். நான் சொன்னேன்:

"அண்ணாச்சி! ஒரு வாக்கியம் கூட வேண்டாம். ஒரே ஒரு வார்த்தை மட்டும் போதும். நீங்கள் "சரி" என்கிற ஒரே ஒரு வார்த்தையை மட்டும்தான் வசனமாகச் சொல்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். 'சரி' என்ற இந்த ஒரு வார்த்தையை மட்டும் எப்படியெல்லாம் சொல்லலாம் தெரியுமா? எத்தனை விதங்களில் எத்தனை modulationகளில் சொல்லலாம் தெரியுமா; விதவிதமான அர்த்தம் தொனிக்கும் பாணியில் எத்தனை தினுசாகச் சொல்ல வேண்டும்? வேண்டுமானால் நான் சொல்லிக்காட்டவா?" என்று படபடவென்று பொரிந்து தள்ளினேன்.

அண்ணாச்சி சற்று அசந்து போய் விட்டார். "சரி அண்ணா! ஏதோ தெரியாம சொல்லிட்டேன். அத்தோட விட்டுடுங்களேன்'' என்று ஜெமினி என்னிடம் கெஞ்சியதும், ஏதோ நேற்றுத்தான் நடந்தது போல் என்னைத் திரையில் தோன்றி மறைகின்றது.

ஜெமினியோடு அதிகம் பழகியவர்களுக்குத்தான் அவருடைய நடிப்புப் புலமை புரியும். எந்த ஒரு குணசித்திரத்தையும் எப்படி 'interpret' பண்ணுவது என்று அக்கக்காக அலசி ஆராய்ந்து அவர் perform பண்ணுவதையும் நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன்.

Characterல் கவனம் செலுத்தாமல் மேலோட்டமாக இருப்பதைப் போல் வெளிப் பார்வைக்குத் தோன்றுமே தவிர பல்வேறு கதாபாத்திரங்களின் குணவிசேஷங்களை தமக்குள்ளே அலசிப் பார்த்துக் கொள்கிறார் என்பதுதான் உண்மை. உதாரணம் : "நான் அவனில்லை'' படத்தில் பல்வேறு வேடங்களில் அவர் செய்து காட்டிய பண்பட்ட நடிப்பு. வியாபாரரீதியில், எப்படியிருந்தாலும் சரி, என்னுடைய மிகச் சிறந்த திரைக்கதைகளில் 'நான் அவனில்லை' ஒன்று. அதே போல் ஜெமினி நடித்த மிகச் சிறந்த படங்களில் அது ஒன்று.

அவர் பெரிய linguist. பல பாஷைகளிலும் அவருக்கு இருக்கும் புலமையையும் தேர்ச்சியையும் கண்டு நான் அசந்தே போனேன். ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம் என்று அனாயாசமாக எதிலும் பேசக் கூடிய அவரது மொழித் திறமைக்கு வடிகாலாகத்தான் 'நான் அவனில்லை' திரைப்படத்தை அமைத்திருந்தேன்.

கதைக்குப் பொருத்தமான நடிகரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமே தவிர, ஒரு நடிகரை மனத்தில் கொண்டு எந்த ஒரு திரைக்கதையும் எழுதக் கூடாது என்றெல்லாம் வாதப் பிரதி வாதங்கள் நடப்பதுண்டு. ஆனால் ஜப்பான் நாட்டின் ஆஸ்தான திரைப்பட இயக்குனர் என்கிற பெயர் பெற்ற Akira Kurosowa சொல்கிறார்: 'Unless I have a specific actor in mind, I cant write a film script' என்று.

"குரோஸோவா'' சொல்லி விட்டதனால் ஒரு நடிகரை மனத்தில் கொண்டு திரைக்கதை அமைக்கப்படுவதிலே தவறேதுமில்லை என்று நம்புகிறேன்.

பாஷைகள் மட்டுமில்லை! எத்தனை விதமான குணச்சித்திரங்களை ஜெமினி அந்தத் திரைப்படத்தில் செய்து காட்டியிருக்கிறார்! ஒவ்வொரு குணசித்திரத்தையும் பூரணமாக, முழுமையாக, மூன்றாவது பரிமாணத்தோடு அந்தப் படத்திலே அவர் நடித்துக் காட்டியிருப்பது தமிழ்த் திரையுலகில் என்னைப் பொறுத்தவரை நிச்சயமாக ஒரு 'மைல்கல்' என்றுதான் கூற வேண்டும்.

ஜெமினிகணேஷ் அவர்களிடம் நான் உரிமை எடுத்துக் கொண்ட அளவிற்கு வேறு எந்த நடிகரிடமும் அத்தனை உரிமை எடுத்துக் கொண்டிருப்பேனா என்பது சந்தேகம் தான்.

"கண்ணா நலமா" படப்பிடிப்பின் போது என்று நினைக்கிறேன். ஒரு குறிப்பிட்ட 'ஷாட்'டில் ஜெமினிக்கு அதிக வசனம் இல்லை; மற்றவர்கள்தான் பேச வேண்டும். எல்லோ

கே. பாலசந்தர்

ருக்கும் ஒரு position கொடுத்து விட்டு ஒரு long shot ஆக செட்அப் செய்தேன். ஜெமினி மட்டும் மவுனமாக உட்கார்ந்திருக்க வேண்டும். ஷாட்டிலே இருக்கும் மற்ற நடிக நடிகையர்கள் அவரவர்களுடைய வசனங்களைப் பேசி பல ஒத்திகைகள் பார்த்தாகி விட்டது. அந்த 'ஷாட்' டேக் எடுத்து முடிக்கப்படும் வரை ஏறத்தாழ 45 நிமிடங்களுக்கு மேலாக ஜெமினி அவர்கள் மவுனமாக தமது இருக்கையிலே அமர்ந்து கொண்டிருந்தார். டேக் முடிந்தது.

''என்ன அண்ணாச்சி! இந்த டேக் எப்படி'' என்றேன்.

"ஓ! ஃபெஸ்ட்கிளாஸ்! எல்லாரும் கரெக்டாப் பேசிட்டாங்க" என்றார்.

"உங்களுக்கு ஒரு சின்ன விஷயம் தெரியுமா?" என்றேன்.

"என்ன?" என்றார்.

"எடுக்கப்பட்ட இந்த ஷாட்டில் காமிரா fieldக்குள் நீங்கள் இல்லவே இல்லை. மற்றவர்கள்தான் இருக்கிறார்கள். இந்த ஷாட்டில் இல்லையென்று நீங்கள் தெரிந்து கொண்டால் மற்ற floorகளில் நடக்கும் படப்பிடிப்புகளை வேடிக்கை பார்க்கப் போய் விடுவீர்கள்; தேவைப்படும் போது உங்களைத் தேடிக் கண்டுபிடிப்பது மிகவும் சிரமம். அதனால் நீங்களும் ஷாட்டில் ஃபீல்டுக்குள் இருப்பதைப் போலவே நான் பொய் சொன்னேன்'' என்று எல்லோர் மத்தியிலும் சொல்ல, அங்கிருந்தவர்கள் 'கொல்'லென்று சிரிக்க, பாவம் ஜெமினிக்கு என்னவோ போல் ஆகி விட்டது.

ஆனால் அதையே ஹாஸ்யமாக மாற்றி, "என்னண்ணா இப்படிப் பண்றீங்க? நான் ரொம்ப நாள் fieldலேயே இருக்கணும்னு பார்க்கிறேன். என்னை fieldஐ விட்டு அனுப்பிடாதீங்க" என்று சொல்லி, மற்றவர்களை அவர் சிரிக்க வைத்தாரே தவிர சற்றேனும் கோபம் வர வேண்டுமே?

இதே நிலையில் ஒரு புதுமுக நடிகர் இருந்திருந்தால் கூட நேரில் எதுவும் சொல்ல முடியாமல் போனாலும், மனதிற்குள்ளாவது என்னை நாலு வார்த்தை திட்டிக் கொண்டிருந்திருப்பார். எந்தச் சமயத்திலும் கோபமே வராத இந்த நல்ல குணம்தான் ஜெமினி அவர்களிடம் என்னை அதிகம் ஈடுபட வைத்தது.

இன்னொரு சம்பவம் : புன்னகை படத்தின் உச்சக்கட்டக் காட்சி எடுத்துக் கொண்டிருந்தேன்.

புன்னகை கதாநாயகன் சாகும் வரைதான் எப்படிப்பட்ட நிலையிலும் உண்மையே பேச வேண்டுமென்கிற பிடிவாதத்தோடு இருக்கும் குணசித்திரம்.

கட்டட காண்டிராக்ட் பில்லில் கையெழுத்திட்டு ஜெயந்தியிடம் கொடுக்கின்ற அந்தக் காட்சி... காட்சியின் அமைப்பையும் வசனங்களையும் ஒருமுறை விவரித்துச் சொன்னேன். ஜெமினியின் கண்களில் நீர் துளிர்த்தது. கண்களைத் துடைத்துக் கொண்டே சொன்னார் :

''இன்னிக்குத்தான் அண்ணா இந்தப் படத்திலே வருகிற என குணச்சித்திரமே எனக்குப் புரிஞ்சுது'' என்று சொன்னதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''என்ன அண்ணாச்சி இது? படமெல்லாம் முடியப் போற நேரத்திலே இப்பத்தான் கேரக்டர் புரிஞ்சதுன்னு சொல்றீங்களே, இது நல்லா இருக்கா?'' என்று கேட்டேன்.

''இப்போதாவது புரிஞ்சுக்கிட்டேனே! படத்தைத் தியேட்டர்ல பார்த்து அப்புறம் புரிஞ்சுக்காம'' என்று சொல்லி எல்லோரையும் சிரிக்க வைத்தார்.

"உங்கள் மாதிரி இயக்குநர்களிடம் படப்பிடிப்புக்கு நாங்கள் வரும் போது எங்களை நாங்கள் prepare பண்ணிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. வந்து நிற்க வேண்டும். That is all. You do the rest" என்றும் சொன்னார்.

இதையேதான் Michelangelo Antonioni அழகாகச் சொல்லியிருக்கிறார் :

"The actors should arrive for shooting in a state of virginity."

அப்பொழுதுதான் உள்ளுணர்வால் இயக்கப்படுகின்ற இயல்பான நடிப்புத் திறனை இயக்குநர்கள் நடிகர்களிடமிருந்து பெற முடியும்.

புன்னகை படப்பிடிப்பு முடிந்த பிறகு ஒருநாள் 'புன்னகை'யின் tragedy முடிவு பற்றி என்னிடம் விவாதித்தார். "உண்மைக்காகவே வாழ்ந்த அந்த சத்யா குணசித்திரம் இறந்து, கடைசியில் tragedyயாகத்தான் முடிய வேண்டுமா? உண்மை நெறிமுறையைக் கடைப்பிடிப்பவர்களுக்கு 'மரணம்'தான் எஞ்சி நிற்கிறது என்கிற தோல்வி மனப்பான்மையை படம் போதிக்கின்ற மாதிரி வந்து விடாதா'' என்கிற அச்சத்தை எழுப்பினார்.

இது நியாயமான கேள்விதான்!

ஆனால் நான் கேட்டேன் : "சத்யா குணசித்திரம் திரைப்படம் முடிகின்ற காலகட்டம் வரை உண்மையைக் கடைப்பிடித்தான் என்பது கதையா, அல்லது சாகும் வரை அவன் உண்மை நெறியைக் கடைபிடித்தான் என்பது கதையா? இதில் எந்தக் கதை உங்களுக்கு வேண்டும்?'' என்று நான் திருப்பிக் கேட்டேன்.

உலகெங்கிலும் இலக்கிய மரபுகளிலே ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு Theory :

The death of a hero, if he dies for an accepted ideal is not a tragedy.

(தொடரும்)

கொரிக்கக் கொஞ்சம்...

யார் இந்த கிளாமர் கேர்ல்?



❑ நுங்கம்பாக்கத்தில் கல்லூரி சாலைக்கு, அப்பெயர் வரக் காரணம் ஒரு கல்லூரி தான். ஆனால், பலரும் நினைத்துக் கொண்டிருப்பது போல, மகளிர் கிறிஸ் துவக் கல்லூரி அல்ல அது... பிரிட்டிஷ் காலத்தில், ஆட்சிப் பொறுப்பிலிருந்த அதிகாரிகளுக்குத் தென்னிந்திய மொழி கள் கற்றுத் தந்த கல்லூரி அங்கு இருந் தது. ஸோ, கல்லூரி சாலை!



● ரொபைரோ

❑ மெட்ராஸ் பாஷை யில் ஒன்றிப் போய் விட்ட வார்த்தையான 'கேடி'யின் ரிஷிமூலம் என்ன தெரியுமா? 'அர நிந்த குற்றவாளி' என்ற பொருள் கொண்ட, 'Known Delinquent' என்ற ஆங்கில வார்த் தைகளின் முதலெழுத் துக்களான KD யின் தமிழ் வடிவம்தான் கேடி.

❑ பஞ்சாப் காவல் துறைத் தலைவராய் இருந்த ஜூலியோ ரொபைரோ, பம்பாய் வந்து செட்டிலாகி யிருக்கிறார். இப்போது சுயசரிதை எழுதிக் கொண்டிருக்கிறார். முதல் அத்தியாயத்திலேயே, லஞ்சம் வாங்கிய ஒரு மத் திய அமைச்சரைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறாராம். யார் அந்த அமைச்சர்? 'இப்போதே சொல்லி விட் டால் என் புத்தகம் எப்படி விற்கும்?' என்கிறார் அர்த் தத்துடன்.

❑ பம்பாயில், பருவக் காற்று சீசனில், கடலில் இறங்காமல் இருக்கும் மீனவர்கள், சீசன் முடிந்தவுடன், தேங்காய் நாள் கொண்டாடி மீண் டும் கடலுக்குச் செல்கி றார்கள். அந்த தினத்தில், தங்களுக்கு வாழ்வு தரும் கடலுக்குத் தேங்காயைப் போட்டு வணங்குவது வழக்கம்.


❑ 1794-ல் துவங்கப்பட்ட அரசு சர்வே பள்ளிக் கூடத் தின் இன்றைய பெயர் கிண்டி பொறியியற் கல்லூரி! அதான், அண்ணா பல் கலைக் கழகம்.

❑ "ராஜீவின் உலகம்" என்று ராஜீவ் காந்தி பல்வேறு சமயங்களிலும் எடுத்த குமார் இருநூறு புகைப்படங்களைத் தொகுத்து புத்தகமாய் வெளியிட்டிருக் கிறது வைகிங் நிறுவனம். விலை ரூபாய் ஆயிரத்து ஐநூறு. (யம்மாடி!) அதில் இடம் பெற்றுள்ள சோனியாவின் போட்டோதான் இது! (சட்டென்று அடையாளம் தெரி கிறதா?)

— மௌலி

பெரிய மருது

கெட்டவன் பெரிய மருது, நல்லவனாகிறான். வஞ்சகர்களை வீழ்த்துகிறான். இதற்கு மேல் ஏதாவது சொன்னால் இழுத்துப் போட்டு உதைப்பார்கள். அதனால், கப்சிப்.



மூன்று பிளாஷ்-பேக்குகள். சிவந்த கண்ணோடு விஜய்காந்த். கோபம் ஆக்ரோஷம், அடிதடி ஓகே! நடிப்பு?

ரஞ்சிதா, பிரகதி என இரண்டு ஹீரோயின்கள். முதலாமவர் பூத உடல் துறந்து பெரிய மருதுவின் அகக்கண் திறக்க, மற்றவர், ஜெயி லுக்குப் போகிறவருக்கு மஞ்சள் நீரால் குளிப்பாட்டுகிறார். நடிப்பு என்ற பெரிய விஷயத்தைத் தவிர மற்றவற்றில் பளிச்!

பரவாயில்லை ரகத்தில் : காமெடி, வசனம். வசனத்தில் காளிமுத்து(?) பாதிப்பு.

ரசிக்கக்கூடிய ரகத்தில் : இசை, கேமரா. ராசா பெரிய மனது பண்ணியிருப்பது ஒவ்வொரு பிட்டிலும் கேட்கிறது. 'சக்கரப்பப்பா' பாடல் மோசமானாலும் சம்பத் ராஜ் ஒடிசல்கள் ஒழுங்காய் வந்திருக்கின்றன. கே.ஏ. தங்கவேலு, எம். சரோஜா, எம்.என். நம்பியார் என்று பெரிய பட்டாளம் பளிச் சென்று நடித்திருக்கிறது.

இப்போது வில்லனாய்த் தெரிகிறவர்கள் எல்லாம் இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் ஹீரோ ஆகும் வாய்ப்புடையவர்களே. மகேஷ் ஆனந்த் அவர்களுள் ஒருவர்.

சகலமான தமிழ் சினிமா கல்யாண குணங்களும் நிறைந்துள்ள படத்தில் எரிச்சலும் ஒரு அம்சம் போலும். விஜய்காந்தை எல்லோரும் புகழ்ப் புயலில் அமிழ்த்துகிறார்கள். 'இதற்கெல்லாம் தகுதியானவன்தான் நான்' என்ற புன்முறுவலும் காட்டுகிறார்.

நீங்கள் சண்டைப் பிரியர் என்றால், ஒரு இதயங் கனிந்த பரிந்துரை : இது உங்களுக்கான படம்.

— துளசி



நீங்கள் கேட்டவை – தராசு



• கரித்துக் கொட்டுகிறார்!

● ராமாபுரம் சந்துரு, சென்னை.

? ஆட்டோ கட்டணம் விவர போர்டு பற்றிய கேள்விக்கு நையாண்டியாக பதில் கூறியுள்ளீரே, ஆக்கபூர்வமாகப் பதிலளிக்கக் கூடாதா?

! நையாண்டித்தனமாக எழுதுவது என்பது ஒரு நகைச்சுவைக் கலை, மிஸ்டர் சந்துரு. அதிலே பல வகை உண்டு. எந்த நோக்கில் எழுதப்பட்டுள்ளது என்று பார்க்கவேண்டுமே தவிர, அதை அப்படியே 'லிட்டரலாக' எடுத்துக் கொள்ளக் கூடாது. பல சந்தர்ப்பங்களில், எழுதப்படுவதற்கு நேர்மாறாக நடக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தான் எழுதப்பட்டிருக்கும்.

● எம். குணசேகரன், வேலாயுதம் பாளையம்.

? சேஷன் புத்தகத்தை வைத்துக் கொண்டு மிக அதிகமான அரசியல் ஆதாயம் தேடிக் கொண்ட பெருமை யாருக்கு?

! சந்தேகமின்றி 'ஜெ'க்குத்தான். அண்ணாவோடு எம்.ஜி. ஆரையும் சேர்த்துக் கொண்டு இருவருக்காகவும் சேஷன் மீது 'போர்' தொடுத்திருக்கிறாரே!



• லைசென்ஸ் வழங்கினார்!

● ச.ஜான்ரவி, கோவில்பட்டி.

? தான் அன்று முதல்வராக இருந்தபோது தமக்கு வழங்கப்பட்ட பட்டங்களையெல்லாம் ரசித்த கருணாநிதி தான், இன்றைய முதல்வர் ஜெயலலிதாவுக்கு வழங்கப்படும் பட்டங்கள் குறித்து கரித்துக் கொட்டுகிறார் என்றால், கல்கியும் அவருடன் சேர்ந்து கொண்டு வசை பாடுவது ஏன்?

போயஸ் தோட்டம் 'பயஸ்' தோட்டம் ஆகி விட்டதாமே?



• லட்டாய் காரணமாக...

! அமுதசுரபி தீபாவளி மலர் '94 இருக்கிறதா? அதில் ஓவியர்/ கார்டூனிஸ்ட் கோபுலுவுடன் ஓர் உரையாடல் கட்டுரை இடம் பெற்றுள்ளது. கூடவே, கல்கியில் வெளியான கோபுலுவின் கார்ட்டூன்களும் இடம் பெற்றுள்ளன. அதிலே கருணாநிதி குறித்த கார்ட்டூனைக் கவனியுங்கள். கல்கி என்றுமே நடுநிலை தவறியதில்லை; சொல்ல வேண்டியதை, சொல்ல வேண்டிய நேரத்தில், சொல்லத் தவறியதில்லை என்பது புரியும். கல்கி செயல்களைத்தான் விமர்சிக்கிறதே தவிர, செய்பவர்கள் யார் என்று பாரபட்சமாக நோக்குவதில்லை.



• ... தனி இலாகா!

● என். முருகேசன், பெருஞ்சேரி.

? "உலகத் தமிழ் மாநாட்டுக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவு செய்யலாம்" என்று எஸ்.டி.எஸ். கூறியுள்ளாரே?

! தமிழின் பெயரால், தமிழனைத் தமிழனே மொட்டை அடிக்க லைசென்ஸ் வழங்கியாகி விட்டது...!



• புதிய விளக்கம்

● ஜி.ஜி.கிருஷ்ணன், விசலூர்.

? சேஷனின் செல்வாக்கு தற்போது எந்நிலையில் உள்ளது?

! தமிழகத்தைப் பொறுத்த மட்டில் இங்கு வருவதற்கான தமது திட்டங்களை அடுத்தடுத்து ரத்து செய்யுமளவில்.

• செல்வாக்கு எப்படி?



● ச.ஜான்ரவி, கோவில் பட்டி.

? "பயஸ் என்றால் புனிதம். இன்று போயஸ் கார்டன் பயஸ் கார்டனாகத் தோற்றமளிக்கிறது" என்று புது விளக்கம்

❑ • ரூ.25 பரிசு பெறுபவர்:
கே.ஆர்.குமரேஷ்,
2, கீழமட விளாகம் தெரு,
திருபுவனம்- 612103



• தேவை: ஸ்போர்ட்டிவ்...

தந்திருக்கிறாரே அமைச்சர் பட்டாபி ராமன்?

! அமைச்சர் புதிய அகராதி உருவாக்கு கிறார்; அதுவும் தப்புத் தப்பாக அர்த்தம் தரும் அகராதி!

● அன்பு கதிரேசன், கீழ்கட்டளை

? காஷ்மீர் தேர்தல் வருமா?

! சவான் - பைலட் லடாய் காரணமாக, காஷ்மீர் இலாகா என்று தனியே ஒன்றை உரு வாக்கி, அதைத் தமது பொறுப்பில் பிரதமர் வைத்துக் கொண்ட பிறகு, ஏற்கெனவே இழு பறியாக இருந்த தேர்தல் விஷயம் இனி ரப்பர் தான்.

● ஈ. ராதாகிருஷ்ணன், பட்டுக்கோட்டை.

? "ஜெ.ஜெ. பல்கலைக் கழகம் அமைக்க அறநிலையத்துறை நிதி வழங்கும்" என்று தமிழ்நாடு அறநிலையத் துறை அமைச்சர் கூறியுள்ளாரே?



• ...மனப்பான்மை

! அறநிலையத் துறையைச் சேர்ந்த பணம் எதற்குச் செலவிடப்படவேண்டுமோ அது தவிர பாக்கி எல்லாவற்றுக்கும் வாரி வழங்கப்படும் போல!

● கே.ஆர்.குமரேஷ், திருபுவனம். ❑

? கல்யாண்சிங் நீதிமன்ற அவமதிப்பு செய்ததால் பல உயிர்கள் பலியாயின. அதற்கு ஒரு நாள் சிறை தண்டனை போதுமா?

! உச்ச நீதிமன்றம், நீதிமன்ற அவமதிப்பு குற்றத்தை மட்டுமே கவனத்தில் கொண்டது. பல உயிர்கள் பலி, அதற்கு நஷ்ட ஈடு எனில் அதற்கு பாதிக்கப்பட்டவர்கள் வழக்குத் தொடுக்க வேண்டும். நிற்க, நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்கு தண்டனை பெற்ற கல்யாண்சிங், அதற்காகத் தலைகுனியாவிட்டாலும் தலை வணங்கி ஏற்றிருக்கலாம். மாறாக, தமக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டதாகப் பேசுவதும் அவரை பி.ஜே.பி. தலைவர்கள் ஹீரோவாக்கி போற்றிப் புகழ்வதும் ஆரோக்கியமான ஜன நாயகமல்ல. அராஜகத்தைத் தூண்டும் ஆபத் தான போக்கு.



• தகுதி பெற்றவர்.

● நீல.சுதாகரன், போளூர்.

? சென்னை மாநகராட்சி வளாகத்தில் ராஜா சர் முத்தையா செட்டியாருக்கு சிலை நிறுவப் பட்டுள்ளது குறித்து...?

! சென்னையின் முதல் மேயர் அவர்தான். அவர் மாநகராட்சிக்கு வழங்கிய மேயருக்கான ஆபரணம், செங்கோல், அரியாசனம் ஆகிய வற்றைத்தான் இன்றும் (தேர்தல் நடந்தால்!) மேயர்கள் பயன் படுத்துகின்றனர். அந்த நாளிலேயே சேரி ஒழிப்பு - மாற்றுக் குடியிருப்பு திட்டங்களை அமுல்படுத்தியவர். எம்.எல்.ஸி., எம்.எல்.ஏ., உள்ளாட்சி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் என்று பல வகையிலும் தமிழகத்துக்குச் சிறப்புத் தொண்டாற்றிய வர். அண்ணாமலை பல்கலைக்கழகம் மூலமும் தமிழிசைச் சங்கம் வாயி லாகவும் கல்விக்கும் தமிழுக்கும் அளப்பரிய சேவை புரிந்தவர். தொழில் கள் தொடக்கம், விரிவாக் கம் மூலம் வேலை வாய்ப் புக்கள் பெருக்கியவர். எல்லா விதத்திலும் சிலை அமைத்து அவர் நினை வைப் போற்றுவதற்குத் தகுதி பெற்றவர்.



• தண்டனை போதுமா?

● தாழை பிரபு, குடியாத்தம்.

? வில்ஸ் கோப் பையை இந்தியா கைப் பற்றுமா?

! இந்த இதழ் வெளி யாகுமுன் முடிவு தெரிந் திருக்கும். ஜோசியம் எதற்கு? ஆனால் கைப்பற்ற வேண் டும் என்ற உறுதியோடு ஒவ் வொரு ஒரு நாள் மாட்சி லும் வெற்றிக்கு ஆட வேண் டும். தனி நபர்களின் ரிகார் டுகளுக்காக அல்ல. இதை உணர்ந்துதானே பிரபா கரும் மோங்கியாவும் தண் டனைக்கு உள்ளாகி இருக் கிறார்கள்! அம்பயரிடம் தர்க்கம் செய்ததற்காக லாரா தண்டனைக்கு உள் ளானதும் இதே ஸ்போர்ட் டிவ் ஸ்பிரிட்டை உணர்த் தத்தான். இந்த மனப் பான்மை தான் முக்கியமே தவிர, வெற்றிதோல்வி அல்ல.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka